# ஞானச்சுடர்



ஆவணி 2017

சந்நிதியான் ஆச்சிரமம்

236 ஆவது மலர்




ஓம் முருகா

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



ஈத லிசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

**பொருள்:** மக்களுயிர்க்குக் கொடையினாலுண்டாகும் புகழை விட வேறொரு பயனில்லை; ஆதலால், வறியார்க்குக் கொடுங்கள்; புகழ் உண்டாகும்படி வாழுங்கள்.

(231)

உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க் கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்.

**பொருள்:** உலகத்தவர் சிறப்பாகப் பேசுவது இரப்பவர்க்கு ஒன்றைக் கொடுப்பதனாலுண்டாகும் புகழையே.


(232)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### பராபரக் கண்ணிகள் - 4



அன்பிற் கரைந்துருகி யடிபணியும் மெய்யடியார்
இன்ப நிலையே எந்தாய் பராபரமே 01

ஆறாய்க்கண் ணீர்பெருக்கி அவசமுறும் மெய்யடியார்
மாறாக் கருணை மனவிளக்கே பராபரமே 02

இருவினையை நீக்கி இரவுபக லற்றவன்பர்
கருவினையை நீக்கும் கதியே பராபரமே 03

ஈசனே யெங்குமென வெண்ணுகின்ற மெய்யடியார்
வாசனே நல்லவழி காட்டாய் பராபரமே 04

உன்னை யுணர்ந்தவர்கள் ஓசையற்ற நிட்டையிலே
தன்னை மறந்திருப்பார் சத்தே பராபரமே 05

ஊனா யுயிராகி யுட்கலந்த சோதிதனை
நானா ரறியவென்றன் நட்பே பராபரமே 06

எல்லாம் நினதுசெய லென்றறிந்த மெய்யடியார்
நில்லா வுலகை நினைவரோ பராபரமே 07

ஏது மறியாத ஏழையென்று கைவிட்டால்
யாதுசெய் வேனென்னை யாள்வாய் பராபரமே 08

ஐயுந் தொடர்ந்து அறிவழியு முன்னமென்
கையுந் தொழப்பண்ணிக் காப்பாய் பராபரமே 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 236

2017 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கிழக்குக் கலாச்சாரமும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 01 -07 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 08 -12 |
| கலியுகத்தில் மானிட... | பு. கதிரித்தம்பி | 13 -14 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 15 -19 |
| ஆறுமுகன் செய்த... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 20 -21 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 22 -25 |
| யாருமே இது குறித்து... | கே.எஸ். சிவஞானராஜா | 26 -28 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 29 -31 |
| சீரடி சாயிபாபா | சி. விஜயராணி | 32 -36 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 37 -42 |
| ஓங்காரரூபாய நம | மு.க. மாசிலாமணி | 43 -48 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 49 -50 |
| எங்கே நிம்மதி! | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 51 -52 |
| இதுவே தர்மம் | பொ. திலகவதி | 53 -54 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 55 -56 |
| வழித்துணை | செ. சிவசுப்பிரமணியம் | 57 -58 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 59 -60 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 61 -63 |
| 2017இல் சந்நிதியான் ஆச்சிரம... | தொகுப்பு | 64 -66 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 66 -68 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

## வெளியீட்டுரைடன் கூடிய மதிப்பீட்டுரை:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் 235ஆவது மலருக்காகிய வெளியீட்டுரையினை ஆற்றுவதாக இருந்த பேராதனை பல்கலைக்கழக மாணவி செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் வருகைதராத பட்சத்தில் மதிப்பீட்டுரையை ஆற்ற வருகைபுரிந்த சைவப்புலவரும் ஆசிரியையுமாகிய திருமதி சசிலேகா ஜெயராஜன் வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்கள்.




அவர் தமது உரையில் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளின்மூலம் சமயம் சார்ந்தோரும், சமூகம் சார்ந்தோரும் பெறும் பயன் பற்றியும் கூறி, இவை எல்லாவற்றுக்கும் ஆச்சிரம சுவாமிகளுடன் சந்நிதி வேலவன் உடனுறைந்து நிற்பதனாலேதான் சகல பணிகளும் நிறைவாக நடைபெறுகிறது என்றார்.

ஆச்சிரம பணிகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக விளங்குவது ஞானச்சுடர் வெளியீடு என்றால் அதில் எவ்வித ஐயமுமில்லை. மாதா மாதம் தொடராக 234 மலர் வெளிவந்திருக்கின்றது என்றால் அது ஒரு சாதனை என்றே கூறவேண்டும். இச்செயற்பாட்டின்மூலம் பல வித எழுத்தாளர்களை ஆன்மீகத்தில் ஈடுபட வைத்துள்ளது. இதற்கு என்னையே உதாரணமாகக் கூறலாம் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் உட்பொருளை சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதராகிய நாம் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் புரியும் ஒவ்வொரு காரியமும் அவனது மனத்தின்கண் இருந்தே வெளிவருகின்றது. என்றைக்காவது ஒருநாள் எமது மன எண்ணங்களின்படி செயற்பட்டு அதன்மூலம் வரும் இன்ப துன்பங்களை நாம் அனுபவிக்கிறோம்.

உலகில் பிறக்கும் எல்லா மனிதர்களும் அறிந்தோ அறியாமலோ சில பாவங் களைச் செய்தவர்களாகவே இருக்கிறோம். ஒவ்வொருவரினதும் வேறுபட்ட சூழ்நிலை களின் காரணமாக எமது மனத்திற்கு விருப்பமற்ற பாவ காரியங்களை தவிர்க்க முடியாமல் செய்கின்றோம். "பாவம் செய்வதால்த்தான் மனிதன் பிறக்கின்றான்" என வேதநூல் கூறுகின்றது.


நாம் ஒவ்வொருவரும் வாலிப வயதில் அறியாமல் செய்யும் பாவங்களின் காரணமாக முதுமைப் பருவத்தில் அப்பாவங்களின் வினை வந்து நம்மை வருத்து கின்றது. இந்துமதம் பாவம் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. அதில் நாம் முன்னர் செய்த பாவங்களின் வினைகளை நிச்சயம் அனுபவிக்க வேண்டும். அப்பாவங் களின் வினைகளை அனுபவிக்காமல் விடுபட வழியே இல்லை என்ற கருத்து ஒரு சாரரிடம் அன்றுதொட்டு இருந்தே வருகின்றது. இன்னும் ஒரு சாரரிடம் எல்லாப் பாவ வினைகளில் இருந்தும் விடுபட பிராயச்சித்த முறைகள் உண்டு எனவும், அவ் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விடுபட தனித்தனியே முறைகள் வகுத்துள்ளது என்றும் கூறுகின்றனர்.

தற்கால மனோதத்துவ ஆராய்ச்சியின்படி பாவங்களை அகற்றும் வழியாக நமது மனத்தில் இருக்கும் பாவம் பற்றிய எண்ணக் கருத்துக்களை மனத்தின்கண் இருந்து முழுமையாக அகற்றிவிட வேண்டும். அவ்வகை எண்ணங்கள் எமது மனதில் தோன்றாது இருக்கவும் வழிசமைக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. இவ்வாறு உலகில் மனித ராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் பாவ காரியங்களைச் செய்யாமல் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ முயற்சிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 03. வேல் வகுப்பு



பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்த நகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும்
பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு
கவிப்புலவ னிசைக்குருகி வரைக்குகையை
யிடித்துவழி காணும்
பசித்தலகை முசித்தழுது முறைப்படுத
லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவரு ணேரும்:,

சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்குமரி தனக்குநரர் தமக்குமுறு
மிடுக்கண்வினை சாடும்
சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி
யொளிப்பஅலை யடக்குதழ லொளிப்பவொளி
ரொளிப்பிரபை வீசும்
துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு
மெனக்கொர்துணை யாகும்
சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுறுக்கியெழு
மறத்தைநிலை காணும்:,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**
(லண்டன்)

**Dr. G. பவானி**
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. றஜீந்திரன்**
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**
(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**
(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**
(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**க. தெய்வேந்திரம்**

(பண்டத்தரிப்பு)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**பொ. நாகலிங்கம்**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**தலைவர்**

(வாழ்வகம், சுண்ணாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை.ச. பரஞ்சோதி

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

சீ.சி. கந்தையா (பலாலி)

(ஆவரங்கால்)

மு. முருகதாஸ்

(சிறுப்பிட்டி தெற்கு)

T. தியாகலிங்கம்

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்

(மானிப்பாய் தெற்கு)

இ. தயாபரன்

(கோண்டாவில்)

S. சாம்பவி

(யாழ்ப்பாணம்)

செ. தர்மலிங்கம்

(சாவகச்சேரி)

திருமதி தி. பரமேஸ்வரி

(ஆனைக்கோட்டை)

S. பொன்னம்பலம்

(சுண்ணாகம்)

ப. திருக்குமரன்

(அமுதசுரபி, கட்டுடை)

சி. நவரெத்தினம்

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சுப்பிரமணியம்

(சமரபாகு, உடுப்பிட்டி)

சிறி மாதவன்

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

ந. பொன்னுத்துரை

(தொம்பை வீதி, உடுவில்)

ச. திவாகரன்

(உரும்பராய் மேற்கு)

க. சச்சிதானந்தன்

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

நா. மகேந்திரராசா

(பிறேம மகால், வல்வெட்டி)

சு. சிவராசா

(கொக்குவில்)

வ. சிவலிங்கம்

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

கா. அருளானந்தன்

(அராலிவீதி, சங்கானை)

பத்மநாதன் குணசுந்தரி

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்

(அச்சுவேலி)

வே. இராஜேந்திரா

(ஆவரங்கால்)

ச. மார்க்கண்டு

(ஊரெழு மேற்கு)

திருமதி கமலஹாசன் மஞ்சுளா

(வல்வெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக் கலாச்சாரமும் மேற்குக் கலாச்சாரமும்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

பட்டறிவும் பகுத்தறிவும் படித்த நூலறிவும்
நின்னடியின் கீழ் ஓய்வித்துத் தெளிந்த
சுட்டறிவும் சுடர் விட்டொளிர
நின்னருள் தந்து காப்பாய் கணபதியே.

கிழக்கும் மேற்கும் இணைந்திட்டால்
அழகிய உலகம் அமைந்திடுமே
இகபர சுகமும் இனிதாய் நாமும் அடைந்திடலாம்
ஆனந்த அமைதியில் திளைத்திடலாம்.

"கிழக்கும் மேற்கும்" என்ற விவேகானந்த சுவாமிகளின் நூலிலிருந்து அறிந்து கொண்டதையும்; என் குருநாதராம் சத்ய சாயிபாபாவின் வழிகாட்டலிலும்; இறைவனாம் சந்நிதியானின் அருட்சக்தியின் தூண்டுதலாலும் இதனை அடியார்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற அவா உந்தப் பெற்று எழுதத் துணிந்தேன்.

கிழக்கு என்றதும் "சூரியன் உதிப்பது கிழக்குத்திசை" என்று குழந்தைகட்குப் பாட்டின்மூலம் சொல்லிக்கொடுப்பது ஞாபகம் வருகின்றது. அதாவது ஒளி உதயமாவது கிழக்கில். இது ஆன்மீக ஒளியை மலரச் செய்து அறிவை விழிப்படையச் செய்வதாகும். மேற்குத் திசை மறைத்தலாகிய மாயாசக்தியால் இயங்கும் புற உலகமாகும். கீழைத் தேச கலாச்சாரமானது கடவுளை அறிதல் அதாவது கடவுளின் தன்மைகளைத் தேடியறிந்து அந்த உன்னதத் தன்மையில் இரண்டற்ற நிலையில் கடவுளுடன் ஒன்றாகி அந்த ஆனந்த நிலையில் நிலைத்திருப்பதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட உன்னத கலாச்சாரமாகும். இதற்கான படிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை அமைகின்றன.

முதலில் சரீரத்தால் இறைவனுக்குத் தொண்டு செய்தல் சரியைத் தொண்டு எனப்படும். இதற்கு விக்கிரக வழிபாடு அவசியமாகின்றது. கோயில்களில் இறைவனை விக்கிரகமாகப் பிரதிஷ்டை செய்து அவற்றைச் சுத்தம் செய்து; அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, நைவேத்தியம் ஆகிய உபசாரங்களை இறைவனுக்குச் செய்தல். இவற்றைச் செய்பவர்களுக்கு உதவியாளர்களாக இருந்து தொண்டாற்றுதல் என்பன சரியைத் தொண்டாகும். இதனால் மனத் தூய்மை உண்டாகின்றது. இறை தரிசனம் பெறுவதாலும் மந்திர, மங்கல ஒலிகளைக் கேட்பதாலும், மலர், சந்தனம், சாம்பிராணி, கற்பூரம் போன்ற நறுமணங்களை முகர்வதாலும் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பிரசாத உணவை உண்பதாலும், இறையருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பிய பாடல்கள், சத்சங்கங்கள் பக்தர்களின் அனுபவங்கள் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இவற்றைக் கேட்டு நாம் பக்குவமடைகின்றோம். பஞ்சேந்திரியங்களுக்கும் கிடைக்கும் இறைவிருந்தால் புனிதமடைந்து உயர்நிலையடையும் பக்குவத்தைப் பெற்று ஞானேந்திரியங்களாக மாறுகின்றன.

இதனால் செய்யும் தொழில்கள் புனிதமடைகின்றன. உலக நன்மை கருதி மழை வேண்டுதல், சமாதானம் வேண்டுதல், நல்லாட்சி, மக்கள் சுபீட்சம் என்பவற்றிற்காகச் செய்யும் ஹோமங்கள், யாகங்கள் என்பன கிரியைத் தொண்டாகும். இக்கிரியைகளையும் ஒருவர் தனக்கோ தன் குடும்பத்திற்கோ நன்மை வேண்டிச் செய்வதைவிட உலகம் தழுவியதாக உலக நன்மைக்காகச் செய்யும்போது அதன் பலன் பன்மடங்காகும். நாம் அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் சுகமாக அதாவது சொகுசாக வாழும்போது நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நோய், பிணி, வறுமை முதலியவற்றால் துன்பப்பட்டுத் துயரத்தில் இருந்தால் நம்மால் எப்படிச் சந்தோஷத்தை அனுபவிக்க முடியும்? நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமாயின் நம்மைச் சுற்றியிருப்பவர்களும் சந்தோஷமாக இருக்கவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லால் வேறொன்றறியேன் என்பதே உயர்ந்த பிரார்த்தனையாகும். இதையே, என் குருநாதர் (பாபா) உலக நன்மை கருதிச் செய்யப்படும் யாகம், ஹோமம், பிரார்த்தனை என்பன அதைச் செய்பவரும் இவ்வுலகத்தில் ஒருவராக இருப்பதால் அவருக்கும் அவரது மனத்தூய்மையால் அவரைச் சூழவுள்ள எல்லோருக்கும் நன்மை தருவதால் இவை உயர்ந்த கிரியைகளாகும் என்றும் இதனால் இவற்றைச் செய்பவர்களுக்கும் இவர்கள் வாழுகின்ற உலகிற்கும் நன்மையுண்டாவதால் இத்தகைய கிரியைகளைச் செய்பவர்கள் உயர் நிலையடைவர் என்றும் கூறியிருக்கின்றார். இதனால் சுயநலம் பொதுநலமாக மாறுவதால் செய்யும் தொழில்கள் தன்னலப் பற்றற்றதாக அமையும். அப்போது எத்தொழிலைச் செய்தாலும் அது இறைபணியாக வந்தமைகின்றது.

இவ்வாறு சுயநலப்பற்றுக் குறைந்து பொதுநல ஆர்வம் ஏற்படும்போது தன்னுடமைகளை இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை விருத்தியடைகின்றது. இரக்கம், தயை, பொறுமை, அகிம்சை, சகிப்புத்தன்மையாகிய நற்பண்புகள் (இறை குணங்கள்) விருத்தியடைகின்றன. இதனால் பற்றற்ற யோக நிலை தானே வந்தமைகின்றது. சிவபெருமான் யோகியெனத் துதிக்கப்படுகின்றார். அதே நேரத்தில் போகியாக இருந்து உலக இன்பங்களையும் அனுபவிக்கின்றார். என்றால் எப்படி ஒருவர் ஒரே நேரத்தில் யோகியாகவும் போகியாகவும் இருக்க முடியும் என்று கேட்டால், தானே எல்லாவற்றையும் படைத்த இறைவன் என்று தனதாக்கிக் கொள்ளாமல் உலக மக்களுக்கு அவற்றையளித்து எல்லோருடனும் சேர்ந்து அவற்றை அநுபவிப்பதால் தன்னலப் பற்றற்ற யோகியாகவும் உலக மக்கள் அநுபவிக்கும் போகங்களை அவர்களோடு சேர்ந்து அநுபவிக்கும் போகியாகவும் இருக்கின்றான். இதுவே ஒரு அரசனுக்குரிய குணாதிசயமாகும். இத்தகைய ஆட்சி இறையாட்சியாகும். இதனால் உலகில் அமைதியும் சாந்தியும் உண்டாகும். ஆகவே யாகங்கள் ஹோமங்களைச் செய்பவர்கள் தன்னலப் பற்றின்றிச் செய்வதோடு தான் என்ற கர்வத்தையும் விட்டுச் செய்தால் இறைநிலையாம் உயர் நிலையை அடையலாம். நான் உழைத்தேன், சம்பாதித்தேன் எல்லாவற்றையும் செலவழித்தேன், நானே உயர்ந்தவன் என்ற எண்ணத்துடன் செய்பவர்கள் மீண்டும்

*அரிசி அன்னமாவதுபோல மனிதன் சித்தனாகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இவற்றைச் செய்வதில் விருப்புக் கொள்கின்றனரேயன்றி அதற்குமேல் செல்ல முடிவதில்லை. என் உடமைகள் எல்லாம் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்டது. உல கமும் அந்த இறைவனால் உருவாக்கப் பட்டது. இத்தகைய செயல்களைச் செய்யத் தூண்டுவதும் அந்த இறைவனின் கிருபையே யாகும். ஆகவே இறைவனே கர்த்தா "நான்" அதாவது இக்கிரியைகளைச் செய்பவர், செய்விப்பவர் எல்லாரும் இறைவனின் கருவி களேயாகும். இத்தகைய எண்ணத்துடன் கடமைகளைச் செய்யும்போது எல்லாம் அவன் செயல் என்ற நிலையில் நமது சுமை கள் குறைகின்றன. இந்நிலையே மேலாம் நிலையான ஞானம் ஆகும். பலன் கருதாமற் பணிசெய்யும் கர்மயோகம் சித்திக்கின்றது.

இத்தகைய கீழைத்தேச கலாச்சார மான இந்து கலாச்சாரம் மனிதனைக் கீழ் நிலையாகிய மிருக நிலையிலிருந்து உயர்த்தி மனித நிலைக்குக் கொண்டுவந்து அதன்பின் உயர் சிந்தனை பணிகளால் புனிதனாக்கி நிறைவான இறை நிலையை அளிக்கின்றது. சுயநலப் பற்றற்று இப்படிகளில் வழுக்கி விழாமல் இலகுவாகவே மேலே செல்வதற்கு இறையருள் வேண்டும். இறையன்பும் கலாச் சாரப்பற்றும் செயலுமே எம்மை மேல்நோக் கிக் கொண்டு செல்வதாகும்.

ஆன்ம விருத்தி, ஆன்ம சக்தி என் பன நமக்குள் ஒளிந்திருக்கும் இறைசக்தியை விருத்தி செய்து அதை உலக நன்மைக் காகப் பயன்படுத்துவதே மனித வாழ்வின் நோக்கம். இதற்காக மனிதப்பிறவி இறை வனால் நமக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாத மாகும். மனிதன் தன் புலன்களால் புத்தியால் ஆராய்ந்து அறியும் அறிவைவிட மேலானது ஆன்மீக அறிவு இவை புலன்களுக்கோ புத் திக்கோ எட்டாததால் இதை வெளியே காட்டி நிருபிக்க முடியாது. அவரவரும் ஆன்மீக நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்து உணர்ந்து அனுபவிக்கவேண்டும். இதை இன்னொருவர் பெற்றுத்தர முடியாது. காசு கொடுத்து வாங் கவும் முடியாது. குரு வழியைக் காட்டுவார். குருவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து அவ்வழி சென்றுதான் இதனை அடைய வேண்டும். இதை பாபா தன் சொற்பொழிவில் அடிக்கடி கூறுவார். இதனை மூடநம்பிக்கை யெனப் "புத்திஜீவிகள்" எனத் தம்மைக் குறிப்பிடுவோர் கூறுகின்றனர்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு**

என்பதற்கிணங்க ஆன்றோர், அவ தார மூர்த்திகள் ஞானிகள் வேதமுணர்ந்தோர் கூறியவற்றைத் தன்னுள்ளே விசாரித்து ஆராய்ந்து உள்ளிருக்கும் இறை சக்தியை விழிப்படையச் செய்து உணர்ந்து அறிவதே மெய்யறிவு.

இத்தகைய ஆராய்ச்சியில் நான் உடலல்ல; மனமல்ல; புத்தியல்ல; நான் ஆன்மா என்பது நிலைநாட்டப்படுகின்றது. இந்த ஆன்மீக அறிவைச் செயற்படுத்த நமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட கருவி களே இந்த உடல் மனம் புத்தி என்பவை யாகும். இவற்றைத் தூய்மையாக எப்பொழு தும் வைத்திருக்க உதவுவது இறைவழி பாடும் இறை தொண்டுமேயாகும். நான் ஆன்மா உடலல்ல எனக் கூறும்போது உட லைப் புறக்கணிப்பது என்பது அர்த்தமல்ல. நம்மில் அனேகர் இதைத் தவறாகப் புரிந்துகொண்டு செயற்படுவதால் கீழைத்தேச நாகரீகம் புறக்கணிக்கப்படுகின்றது. உடம் பானது இறைவன் குடியிருக்கும் கோயில். இதைத் தூய்மையாகவும் ஆரோக்கியமாக வும் வைத்திருந்தால்த்தான் நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் சிவ தொண்டாகவும், சிவபூசையாகவும் இருப்பதை உணர்ந்து மன நிறைவு எய்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி மேலைத்தேசக் கலாச்சாரத்தைப் பார்ப்போம். இவர்கள் தங்கள் கலாச்சாரத்தை வேத கலாச்சாரம் என விளம்புவர். அதாவது இறைவனால் அருளப்பட்ட வேத வாக்கியங் களை மதித்து அதன்படி வாழ்தல் என்பர். இவர்கள் மனம், புத்தி, உடல் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த உடலே "நான்" என்ற நம்பிக்கையே தன்னம்பிக்கை எனக் கருதுபவர்கள் மனச்சாட்சிக்கு முக்கி யத்துவம் கொடுப்பவர்கள். ஒவ்வொருவரும் தத்தம் புத்திக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு தாம் கற்ற வேத வாக்கியங்களின் பொருளை உணர்ந்து மனச்சாட்சிப்படி வாழ்வதே உயர்ந்த வாழ்க்கையெனக் கருதுபவர்கள். இதனால் தாம் செய்வது சரியென்ற திடமனத்துடன் செயற்படுவர். இதனால் இவர்கள் ஆளுமை உடையவர்கள் என மதிக்கப்படுகின்றனர். ஆனால் இறப்புடன் தம் வாழ்வு முடிந்து விடுமென்றும்; இதன்பின் மறுபிறவியில்லை எனவும் நம்புகின்றனர். ஆகவே இப்பிறவி யிலேயே பொருள் சம்பாதித்துப் புலன்களின் இச்சைகளைப் பூர்த்திசெய்து உண்டு, உடுத் துக் களித்துப் புற வசதிகளைப் பெருக்கி அதனால் வரும் இன்பத்தை அனுபவிப்பதே வாழ்வின் குறிக்கோள் எனக் கருதுவர்.

இவர்கள் கல்வியும் பொருள் சம்பாதிப் பதையும் சொகுசு வாழ்க்கைக்கான கருவி களைக் கண்டுபிடிக்கவும் வேண்டிய அறி வைப் பெற்றுத்தருவதாகவே அமைகின்றது. இயற்கையில் இறைவன் கொடையாகிய பஞ்ச பூதங்களையும் தத்தம் தேவைகளுக் காகப் பயன்படுத்தும் புற அறிவையே மேலான அறிவாகக் கருதுகின்றனர். இத்தகைய புற அறிவினால் ஒருபோதும் திருப்தி ஏற்பட முடியாது. ஏனெனில் புற உலகம் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டேயிருக்கும் தன்மை யது. இன்றைய கண்டுபிடிப்பு நாளை உத வாது என்றபடி தினமும் மாறிக்கொண்டே இருக்கும். இதனால் என்றும் புற அறிவை விருத்தி செய்வதிலும் பொருள் தேடுவதிலும் தத்தம் அறிவை விருத்தி செய்வதால் கர்மா வைச் சம்பாதிக்கின்றனர். தத்தம் கர்மாவிற் கேற்ற பலனையும் அனுபவிக்கின்றனர். தத்தம் கர்மவினைகளின் பயனாகவே உலகம் இயங்குவதாகக் கருதுவார்களே யன்றி இறைவன் செயல் என்பதை உணர் வதில்லை. இறைவன் மேலே உள்ளான். தூதுவர் அவரால் அனுப்பப்பட்டு மக்கள் நலனுக்காகக் கூறிய வாக்கியங்களை தத் தம் புத்திக்கேற்ப அறிந்து வாழ்வதே சமய வாழ்க்கையெனக் கருதுவார்களேயன்றி; ஒவ்வொருவருக்குள்ளேயும் உறையும் இறை சக்தியாகிய ஆன்மசக்தியை விருத்திசெய் யும் அகவுலக வாழ்வை இவர்கள் நாடுவது மிகமிகச் சொற்பமாகும். இவ்வுலக வாழ் விற்குப் பொருளும் தேவை உலகத்தோடு ஒத்து வாழப் பொது அறிவும் தேவை. யாம் பெற்ற அறிவு தேடிய பொருள் அனுபவம் இவற்றால் கிடைக்கும் பயனை அளவோடு பெற்று அனுபவிக்கவும் மன, உடல், ஆரோக் கியத்தைப் பெற்று நிரந்தர அமைதியான வாழ்வை அனுபவிக்க இறையருள் நமக்குத் தேவை.

ஆகவே இந்த இறையருளைப்பெற இறைவனை நாடவேண்டும். இறை நம்பிக்கை, இறைதொண்டு, சமுதாயத் தொண்டு இறை வனுக்கும் மனிதனுக்குமான தொடர்புகளை விளக்கும் புராணங்கள், இதிகாசங்கள், அவதார மகிமைகள் இவற்றைக் கற்றறிந்து ஆன்மீக விருத்தியை ஏற்படுத்தி ஆன்மீக அறிவைப் பெற்று மனிதன் எப்படி வாழவேண் டும் என்பதை அறிந்தபின் புறக்கல்வியைக் கற்றுணர்ந்தால் அதனை எவ்வாறு நல்ல முறையில் பயன்படுத்தலாம் என்பதை அறிந்து செயற்படலாம். சரியான வழியில் மனித செயற்பாடுகள் அமைந்தால்; இயற்கை

*இயற்கையை மீறி எவரும் நடக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தங்கள் மற்றும் சுயநலம், பொறாமை, அவா காரணமாக எழும் இன, மத, கலாச் சாரத்து வேஷங்களால் ஏற்படும் சண்டைகள் இதனால் உலகுக்கு ஏற்படும் அனர்த்தங்கள் என்பவற்றை எதிர்கொள்ளாது முழு உலக மும் அன்பான அமைதியான திருப்தியான வாழ்வை வாழலாம்.

கீழைத்தேய ஆன்மீக அறிவை மேற் குலகில் விருத்தி செய்யவும், மேலைத்தேய விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பொது அறிவுகளைக் கீழைத்தேய நாட்டில் விருத்தி செய்யவும் கிழக்கும் மேற்கும் இணைய வேண் டும். இதற்குப் பரஸ்பர நம்பிக்கை அவசிய மாகும். அறியாமையால் விளையும் தீமை களை விடுத்து இரண்டிலுமுள்ள நன்மையை மட்டும் பற்றிக்கொண்டு வாழ்வதே எல்லாரும் இன்புற்றிருக்கும் அமைதியான தீங்கற்ற ஒற்றுமையான வாழ்வு என்பது விவேகானந்த சுவாமிகளின் “கிழக்கும் மேற்கும்” என்ற சொற்பொழிவின் சாரம்சமாகும்.

ஆன்மீகப் பாதையில் வழிநடத்திச் செல்லக்கூடியதாக ஆரம்பக்கல்வி அமைய வேண்டும். இதனை எல்லாக் குழந்தைகளும் பெற ஆவன செய்யவேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ப தும், இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதும் ஆன்றோர்களின் அனுபவ சித்தாந்த மாகும். மனிதருக்கு அடிப்படை அறிவான ஆன்மீக அறிவு நம்பிக்கையின் அடித்தள மாகும். விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு பொருளீட்டும் அறிவு என்பன அதன்மேல் கட்டப்படும் சுவர்களாகும். இறைவன் ஒன்று, உலகம் ஒன்று எல்லாரும் ஒரே இறைவ னான அம்மையப்பனின் பிள்ளைகளே. ஒவ்வோரிடத்திலும் உள்ள சீதோஷ்ண நிலைக் கேற்ப உணவு, உடை இயல்புகள் ஆகிய கலாச்சாரங்கள் வேறு வேறாக உள்ளனவே யன்றி எல்லாமே இறைவனின் லீலைகள் தான் என்ற உண்மையை அறிந்து தெளிந் ததே வேதாந்த கலாச்சாரமாகும். இது கூரை போன்றது. ஆத்ம சாதனையாளர்கள், அவ தார புருஷர்கள் ஆகியோரின் வரலாறுகள், உலக நீதி, மனுநீதி போன்ற நீதியைப் புகட்டும் நூல்கள், புராணங்கள், இதிகாசங் கள் என்பவை வீட்டின் சாளரங்கள் போன்றவை யாகும். இத்தகைய வீடே இன்ப வீடாகும்.

இக்கால இளைஞர்கள் குழந்தை களிடம் ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயம் என்ன வென்றால்; ஆன்மீகக் கல்வி முதியவர் களுக்கு உரியது. இளமையில் அனுபவிக்க வேண்டிய போகங்களை அனுபவித்தபின் முதியவர்களாகி ஆன்மீகக் கல்வியைக் கற் றறியலாம் என எண்ணுகின்றனர். ஆரம்பத் தில் ஆன்மீகம், ஒழுக்கம், கட்டுப்பாடு என் பவை கற்பிக்கப்படாவிட்டால் வாழ்வில் நம் பிக்கை ஏற்படாது. நம்பிக்கையற்ற வாழ்வு அத்திவாரமில்லா வீடு போன்றது. இதையே பாபா கூறியிருக்கின்றார். நாம் இந்த உல கைச் சுற்றிப்பார்க்க இறைவனால் அனுப்பப் பட்ட பயணிகள். எமது உடமைகளான மனம், புத்தி, அறிவு என்பவற்றை நம்பிக்கை யான இடத்தில் ஒப்புவித்துவிட்டுச் சரியான வழிகாட்டிகளோடு உலகைச் சுற்றிப் பயணத் தைத் தொடங்கினால் தவறான பாதையில் செல்லாது நம் பயணத்தை முடித்துக்கொண்டு நம்மை அனுப்பிய இறைவனின் காலடியில் சுகமாக இளைப்பாறலாம் என்று.

நம்பிக்கையான இடம் என்பது இறை வன் மேலுள்ள திடமான நம்பிக்கையே. உலக வாழ்க்கையில் மயங்கித் தவறான பாதையிற் சென்று அவஸ்தைப் படாமலிருக் கச் சரியான வழிகாட்டியைத் துணையாகக் கொள்ள வேண்டும். இறைதூதர்கள் அவதாரங் களே குருவாக இருந்து எம்மை வழிநடத்திச் செல்பவர்கள். உலக இன்பங்கள் மாறுந்தன்மை உடையன. ஒவ்வொரு மாற்றத்தின்போதும்

*பொறாமை மனித மேன்மைகளைத் தேய்த்து விடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகள் புதிது புதிதாகத் தோன்றும். இதனால் மனநிறைவு ஒருபோதும் ஏற்படாது. இதற்கு மூலகாரணம் அறியாமையே ஆகும். நாம் இறந்துவிட்டால் தொடர்ந்து வரும் ஆசைகளை அனுபவிக்க முடியாதே இறக்க முன் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர்.

ஆனால் உண்மையில் வாழ்க்கைப் பயணம் முடிவில்லாதது. அது ஒரு தொடர் கதை. சீவர்கள் களைப்படையும்போது இளைப் பாறுவதும் மீண்டும் வாழ்க்கையைத் தொடர்வதும் உலக இயக்கமாகும். ஒரு நாடகத்திற்காகப் போடப்பட்ட வேடத்திற்கான ஆடையைக் களைந்து சிறிது இளைப்பாறியபின் அடுத்த நாடகத்திற்காக வேடத்தைப் புனைவதே பிறப்பிறப்பாகும். இப்பிறவியிலேயே இந்த உண்மையை அறிந்து நாம் என்றும் உள்ளவர்கள் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை இருந்தபடியே இருக்கின்றோம் என எண்ணினால் எல்லாவற்றையும் உடனே அனுபவிக்க வேண்டுமென்ற அவா நீங்கி கிடைத்த வாழ்க்கையை (நமக்காகக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தை) அமைதியாக ஒழுங்காக நடிக்க முடியும். இதுவே நிம்மதியான வாழ்க்கை.

சரியான குருவை (வழிகாட்டியை)ப் பற்றிக்கொண்டால் பிறவிதோறும் முன்னேறித் தன்னையறிந்த சுகதேகியாக வாழலாம். தன்னை அறியாதவரை மனம் ஓய்வதில்லை. கொந்தளித்துக் கொண்டேயிருக்கும். குருவிடம் வைக்கும் பக்தியாலும் நம்பிக்கையாலும் இறையுணர்வைப் பெறுவதன்மூலமே மனம் அடங்கி அமைதியடைகின்றது.

ஆசைகள், எண்ணங்களின் பிறப்பிடமே மனம். மனம் உள்ளவன் மனிதன். மனத்தை இறைவனாகிய எஜமானிடம் ஒப்படைத்துவிட்டால் அங்கே இறை சங்கற்பங்கள் பதிவாகின்றன. இறை சங்கற்பத்தை நிறைவேற்றும் கருவியாக மனிதன் செயற்படுகின்றான். இறைவனின் சங்கற்பமும் மனதின் எண்ணமும் ஒன்றாயிருப்பதால் எடுத்த காரியத்தை மனச் சலிப்பின்றிச் செய்து முடிக்க இலகுவாகின்றது.

நான் நித்தியன் என்றுமுள்ளவன். தன்னையொருவன் எப்போது அறிகிறானோ அவன் பிறப்பிறப்புச் சூழலிலிருந்து விடுபட்டவனாகின்றான். நாளை எது நடக்குமோ என்ற பதட்டமின்றி நிகழ்காலத்தில் நிம்மதியாய் வாழ்வதற்கு இந்த ஆன்மீக அறிவு ஆரம்ப அறிவாகச் சிறார்களுக்குப் புகட்டப்பட வேண்டும். இதனைக் கிழக்கும் மேற்கும் இணைந்து செயற்படுத்தினாற்றான் நடைமுறைக்குச் சாத்தியமாகும். ஏனெனில் மேலைக் கலாச்சாரம் கிழக்குலகை விழுங்கிக் கொண்டிருக்கின்றது. மனித மனம் விழிப்படைய, ஆன்மீக அறிவு மலர்ந்து மணம்வீச இறையருள் சுரக்கவேண்டும். அப்போதுதான் ஒளியை இருள் ஒருபோதும் விழுங்கமுடியாதென்ற உண்மை உலகுக்குப் புலப்படும்.

இறைவன் ''ஏகன்'' (ஒருவன்) ஆனால், இவனே "அனேகன்" என்றும் சொல்லப்படுகின்றான்.

''ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க'' என்ற சிவபுராண அடியிலிருந்தும்,

"ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகி
பேதியாய் ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி''

என்ற திருப்புராணத்தின்மூலமும் அறிந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

*கடவுளை நேசிப்பவன் மனிதனை வெறுக்கமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய்- முதன் முதலாய், நடுவு மாகி- பின் நடுவாகி அளக்கமுடியாத அளவு மாகி- பேதியாய் ஏகமாகி பலபல கொள்கை களை ஒன்றுக்கொன்று முரண்படாமல் செய லாற்றுபவராகி, பேதியாய் என்பது பேதங்கள், பிரிவுகள் கட்சிகளை உண்டாக்கித் தர்க் கித்தபின் உண்மையை உணர்ந்து எல்லாம் ஒருவனேயென்றும், பெண்ணுமாய் ஆணு மாகி- அம்மையப்பனாகத் தோன்றுவதும் ஒருவனேயென்றும், சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகி- உண்மை யொளியை உணரச் செய்யும் உணர்வாக மலர்ந்து எல்லாப் பொருள்களிலும் உறைந் துள்ள உண்மைப்பொருள் தானேயென்று உணர்த்தி நிற்கும் தில்லைச் சிற்றம்பல வனான நடராஜ மூர்த்தியின் திரு நடனம் உணர்த்துகின்றது. அந்தத் திருநடமிடும் பாதங்களைப் போற்றித்துதித்து உண் மையை உணர்ந்து உலகில் நலமுடன் வாழ்வோமாக.

**நல்லையிலே தேரேறி வருகிறான்!**

நல்லையிலே தேரேறி வருகிறான்! - குரு
நாதனவன் நல்லருளைப் பொழிகிறான்!
வல் வினைகள் தீரும் அவன் வரவால்! - எங்கள்
வாழ்வில் இன்பம் பொங்கும் அவன் அருளால்!
வீதியெங்கும் பக்தர்களின் கூட்டம்! - எங்கள்
வேலன் புகழ் பாடியுமே காவடிகள் ஆட்டம்!
ஆதி சிவன் மைந்தன் வரும் காட்சி! - இங்கு
அனைவருக்கும் அற்புதமாய் தந்திடுமே மாட்சி!

நேர்த்திகளை நிறைவேற்ற வருகிறார்! - பக்தர்
நினைந்தவனை நெஞ்சுருகத் தொழுகிறார்!
பார்க்கும் இடம் எங்கும் பக்திப் பரவசம்! - உமை
பாலன் தேரில் வரும் காட்சி அதிசயம்!

பால் காவடி, பன்னீர் காவடி வருகுது! - வரும்
பாதையெங்கும் பக்தி வெள்ளம் பெருகுது!
வேல் முருகன் புகழ் எங்கும் ஒலிக்குது! - அவனை
வேண்டுகின்றோர் எண்ணமெல்லாம் பலிக்குது!

மங்கள மேளங்கள் எங்கும் முழங்குது! - அழகாய்
மாவிலைகள் தோரணங்கள் தொங்குது!
அங்கப் பிரதிட்டைகளும் நடக்குது! - அந்த
ஆறுமுகன் தேர்வரும்போ தானந்தமே பிறக்குது!

தேரின் வடம் பிடிக்க வருவார்கள்! - பக்தர்
தேன் தமிழில் திருப் புகழும் படிப்பார்கள்!
பாரில் முருகன் புகழுக் கீடில்லை! - அவன்
பதமலர் தொழுவோர்க்கு துன்பம் இல்லை.

- கி. குலசேகரன் -

*தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

41. வினையென் போலுடை யார்பிறர் ஆர்உடை யான்அடி நாயேனைத்
திணையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே,
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்,
இனையன் பாவனை யிரும்புகன் மனஞ்செவி யின்னதென் றறியேனே.

**ப-ரை:**

என்போல் வினை உடையார் பிறர் ஆர்- என்னைப்போல இறைவனைப் பிரிந்து உலகில் வாழ்வதற்கேதுவாகிய பிராரத்த வினையுடையவர் பிறர் யாவர் உளர்; ஒருவருமில்லை. உடையான் அடி நாயேனை திணையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு அன்று- என்னை ஆளாகவுடையான் அடிமையாகிய நாய் போன்ற இழிவுடையேனைத் திணையின் பாதியளவு பொழுதாயினும் பிரிந்திருத்தல் அவனது திருவுள்ளக் கருத்தன்று; அதனால்- அப்பிராரத்த வினையினால், முனைவன் பாத நல் மலர் பிரிந்திருந்தும்- வினையினீங்கிய விளங்கிய அறிவினையுடைய இறைவனுடைய திருவடிகளாகிய நல்ல மலர்களை அணுகியிராது பிரிந்திருந்தும், நான் தலை முட்டிலேன் கீறேன்- நான் அப்பிரிவினை ஆற்றாது தலையைக் காற்றூணில் மோதுதல் செய்திலேன்; அதனாற் பிளத்தலும் செய்திலேன்; இனையன் பாவனை இரும்பு- இத்தன்மையுடையேனது இடையறாத் தியானம் அன்பின்மையால் வன்மையான இரும்பாகவுள்ளது; மனம் கல்- எனது மனமும் இளகுதலில்லாத கல்லாகவுள்ளது; செவி இன்னது என்று அறியேன்- இறைவனது உபதேசத்தினைக் கேட்ட செவி இன்ன பொருளாகவுள்ளது என்று சொல்லுமாறறியேன்.

என்னைப்போற் பிராரத்தவினையுடையார் பிறர் யாவர் உளர்! என்னை ஆளாகவுடையான் அடி நாயேனைத் திணையின் பாதியளவு பொழுதாயினும் பிரிந்திருத்தல் அவனது திருவுள்ளக் குறிப்பன்று; அதனால் முனைவனுடைய திருவடிகளாகிய நல்ல மலர்களைப் பிரிந்திருந்தும் அப்பிரிவினை ஆற்றாது யான் தலையை முட்டிலேன்; கீறேன், இத்தன்மையுடையேனது பாவனை இரும்பு: மனம் கல்: செவி இன்னபொருளாகவுள்ளது என்று சொல்லுமாறறியேன் என்பதாம்.

வினை- என்போல் உடையார் பிறர் ஆர் என்றது இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளப் பெற்றிருந்தும் உடனே கதிபெற மாட்டாது உலகில் வாழ்வதற்கு ஏதுவாயிருந்த பிராரத்த வினையை என்னைப்போல உடையவர் பிறர் யாவர் என்றவாறு ஒருவருமில்லை என்பது குறிப்பு.

தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிநாயேனை- அடிமையாகிய நாய்போன்ற இழிவுடையேனை, "இங்கிருந்த லழகோ அடிநாயேன்" (பிரார்த்4) "அடிநாயேன் அரற்றுகின்றேன்" (குழைத்த10) என வருவனவும் காண்க. தினையின் பாகமும் பிரிவது அவன் திருக்குறிப்பன்று என்றது இறைவன் எப்பொழுதும் என்னை அணுகியிருப்பதன்றித் தினையின் பாதியளவு பொழுதாயினும் என்னைப் பிரிந்திருப்பது அவனது திருவுள்ளக்கருத்தன்று என்றவாறு. பாகம்- கூறு; பகுதி. "பாகத்தைப் படாத நெஞ்சிற் பல்லவதேய மன்னன்" சீவக 2278. தினையின் பாகம்- தினையின் கூறு. "தினைப் பிளந்தன்ன சிறுமையரேனும்" எனத் திருமந்திரத்து (2667) வருதலுங் காண்க. பொருளின் சிறுமையாற் காலத்தின் சிறுமையைக் கூறினார். "தினைத்துணையேனும் பொறேன் துயராக் கைத் திண்வலையே" (நீத்38) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. பிறிவது- பிரிவது "பிறிவிலாத வின்னருள் பெற்றிருந்தும்" (சத32) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருக்குறிப்பு- திருவுள்ளக்கருத்து, "தென்றில்லைக்கோனே உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின்கழல் கூட" (சத54) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பிறிவது திருக்குறிப் பன்று என்றார். இறைவன் தகுதியிருப்பின் வீடளிக்கும் விருப்புடையான் என்ற கருத்துப்பற்றி.

அதனால் என்றது உடனே கதிபெருமைக்கு ஏதுவாகத் தடுத்திருந்த அப்பிராரத்த வினையினால் என்றவாறு. "அதனால் இறைவன் திருவடி மலர்களைப் பிரியநேர்ந்தமையின் "அதனால் முனைவன் பாதநன்மலர் பிரிந்திருந்தும்" என்றார். அடிகள் இறைவனைப் பிரிந்திருந்தமை,

"ஆள்வதற்குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றிலா விளந்தளிர் பிரிந்திருந்தும்" சத 34.

"பொருளா வெனைப் புகுந்தாண்ட பொன்னே பொன் னம்பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்துவேனை"
கோயின்மூத் 8.

என வருவனவற்றாலுமறிக. முனைவன்- கடவுள். முனைவனே

"முறையோ" "முனைவனே ஆட்கொண்டாய்" (சத 22:27)

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

முட்டிலேன் தலைகீறேன் என்றது முட்டிப்பிளந்திலேன் என்றவாறு. தலையை மோதிப் பிளத்தற்கு மோதப்படும் பொருள் வலிதாயிருக்க வேண்டுமாதலின் கற்றூண் என்பது வருவிக்கப்பட்டது. "துள்ளித் தூண்முட்டுமாங் கீழ்" என்றார் நாலடியாரிலும். இனையன்- தன்மை ஒருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

பாவனை- இடைவிடாத் தியானம். "பாவனை யாய கருத்தினில் வந்த பராவமுதா காதே" (திருப்படையாட்சி 3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அதனை இரும்பு என உருவகித்தது அன்பாகிய கசிவின்மை பற்றியாகும். மனத்தைக் கல் என்றது இறைவனது அருளுருவக் காட்சியை உள்ளுணர்வாற் கண்டிருந்தும் அவன் பிரிவை ஆற்றியிருக்கும் தன்மைபற்றியாகும். செவி இன்னதென்று அறியேன் என்றது இறைவனது அருளுபதேசங் களைக் கேட்ட செவி இப்பொழுது யாதாயிற்று என அறிகிலேன் என்றவாறு.

இதன்கண், முனைவன் பாதநன்மலர் பிரிந்திருத்தற்கேதுவான பிராரத்த வினை யுடையேன் செய்யும் பாவனையும், அதற்கேதுவான மனமும், பாவனை செய்வதற்குரிய அருளுபதேசத்தைப் பெற்ற செவியும் உயிரின் தூய்மைக்கேற்ற நிலையில் நில்லாமையைக்

*இறைவன் தரிசனமின்றி உலக வாழ்க்கை வீண்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுமுகத்தால் அவற்றை அதற்கேற்ற முறையில் அமையுமாறு அருளவேண்டுமென வேண்டிக்கொள்ளுதலால் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 37.

42. ஏனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத,
தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலைச் சிவனையென் சிவலோகக்,
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம்,
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயிர் ஓயாதே.

**ப-ரை:**

ஏனை யாவரும் எய்திடல் உற்று இன்னது என்று அறியாத- மெய்யன்பரல்லாத மற்றை நான்முகன் முதலிய பிறர் எவரும் எய்தி இத்தன்மையுடையது என்று அறிய முடியாத, தேனை- தேன் போன்றவனும், ஆன் நெய்யை- பசுவின் நெய் போன்றவனும், கரும்பின் இன் தேறலை- கருப்பஞ் சாற்றின் இனிய தெளிவு போன்றவனும், சிவனை- சிவனெனும் நாமந்தனக்கேயுடையவனும், என் சிவலோகக் கோனை- என்னையாளாகவுடைய சிவலோக நாயகனும், மான் அன்ன நோக்கிதன் கூறனை- மானின் நோக்குப்போலும் நோக்கினையுடைய உமையம்மையை இடப்பாகத்திலுடையவனுமாகிய இறைவனை, குறுகிலேன்- யான் அடையப் பெற்றிலேன், யான் நெடுங்காலம் இருந்து ஊனை ஓம்புகின்றேன்- யான் உலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து ஊனுடம்பைப் பாதுகாக்க வேண்டியவனாகின்றேன்; அதனால், உயிர் ஓயாதே கெடுவேன்- அதனால் என் உயிர் ஒழியாது கெடப்பெறுவேன்.

மெய்யன்பரல்லாத பிறர் எவரும் எய்திடலுற்று இத்தன்மையுடையது என்று அறிய முடியாத தேன் போன்றவனும் பசுவின் நெய் போன்றவனும் கருப்பஞ் சாற்றின் தெளிவு போன்றவனும் செம்பொருளாயுள்ளவனும் எனது சிவலோகநாயகனும் உமையம்மையை இடப்பாகத்திலுடையவனுமாகிய இறைவனை அடையப் பெற்றிலேன்; யான் உலகில் நெடுங் காலம் வாழ்ந்திருந்து ஊனுடம்பைப் பாதுகாக்க வேண்டியவனாயிருக்கின்றேன்; அதனால் என் உயிர் ஒழியாது கெடப்பெறுவேன் என்றவாறு.

ஏனை யாவரும் என்றது இறைவனருளால் அவனைச் சார்ந்து அறிதற்குரிய மெய்யன்பரல்லாத மற்றையோரைக் குறித்தது. "யாவராயினுமன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியான்" (சென்னிப்1) என அடிகள் அருளியமையும் காண்க ஏனையோராவார், "திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்" (139) என்பது ஈறாகத் திருவண்டப்பகுதியில் அருளிச் செய்யப்பட்டவர்களாவர்.

எய்திடலுற்று இன்னதென்றறியாதவென்றது எய்திடலுறலும் இன்னதென்று அறிதலும் இல்லாதவென்றவாறு, "எய்திடலுற்று மற்றின்னதென்றறியாத" என்ற அடைமொழி, தேனை, ஆனெயை, கரும்பினின் தேறலை, சிவனை, சிவலோகக்கோனை, மானனநோக்கிதன் கூறனை என்பவற்றோம் தனித்தனி சென்றியையும்.

இன்னது என அஃறிணை வாய்ப்பாட்டாற் கூறியது பரம்பொருளை "அது" எனக்கூறும் வடமொழிக் கொள்கைபற்றியாகும். தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலை என்று அடுக்கிக் கூறியது தனித்தனி அவை போலுதலன்றி அவற்றின் கலப்புப் போன்றும் இருக்கும் இறைவன் அருளியல்பு பற்றியாகும்.

அடக்கம் வேண்டும். ஆனால் அடிமைப்படக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேனையும் பாலையுங் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து" நீம் 21.
"தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்து" அம் 14.
"தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்" அம் 16.
"தேனைப் பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையை" புணர்ச். 4.
"தேனா யின்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" ஏசறவு 10.

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. ஈறிலின்பம் பயக்கும் இறைவனொடு சார்த்தத் தேனும் ஆனெயும் கரும்பினின் தேறலும் இறப்ப இழிந்தனவேயாயினும் "பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின், மருளற வருஉ மரபிற் றென்ப" (தொல். மெய்ப்27) என்ப தனால் ஈண்டுச் சொல்லுவானது கருத்துவகையானும், உலகத்துப் பொருள்களுள் அவற்றினுங்கு மிக்கனவின்மையானும் உயர்ந்தனவாய் உவமையாயின என்க. இனி, இறைவனிடத்துள்ள இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி என்பனவற்றை முறையே தேனும் நெய்யும் கரும்பின் சாறும் குறிப்பாலுணர்த்தும் முறைமைபற்றியும் உயிர்களிடத்துள்ள அம்மூவகைச் சித்திகளுக்கும் முறையே இவை இன்பந் தருதல் பற்றியுமாகும். தேன் விருப்பத்திற்கும் நெய் நல்லறிவு விருத்திக்கும் கரும்பின் சாறு தொழிற்பாட்டின் பயனுக்கும் உரியவாதல் காண்க.

சிவன் என்பது இறைவனும் இறைவியும் ஒன்றுபட்டிருக்கும் நிலையைக் குறிப்பது. சிவன் என்னும் திருநாமம் எங்கள் இறைவனுக்கே யன்றிப் பிறர் எவர்க்கும் இல்லாதது. இத்திருநாமத்தினை இடைவிடாது நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் தியானிப்பவர்களுக்கு அருள் செய்தற்கு இறைவன் இறைவியோடு பின்றொடர்ந்து திரிவான். அதனை,

"சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவன்உமை யாளோடு திரிவன்- சிவனருளால்
பெற்றவிளங் கன்றைப் பிரியா துடனோடிச்
சுற்று பசப்போற் றொடர்ந்து"

என்னும் சிவசிவ வெண்பாவானும் உணர்க. சிவனே சிவனே என்பவர் பின்னே, சிவன் உமையாளொடு திரிவன் என்றதனால் சிவன் என்னும் திருநாமத்தில் இறைவனும் இறைவியும் அத்துவிதமாய் இயைந்திருக்கும் சிறந்த பொருள் இனிது விளங்கும்.

சிவலோகம்- சுவர்க்கம். அதர்வசிரசு, ஐதரேய முதலிய உபநிடதங்களிலே சிவலோக மானது சுவர்க்கலோகமென்று கூறப்பட்டுள்ளது. சிவலோகக் கோன்- சிவலோக நாயகன். "சிவலோகக்கோன் திருப்புயங்கன் அருளார் பெறுவார்" (யாத்திரைப் 10) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. எம் சிவலோகக்கோன் என்றது அடிகள் இறைவனிடத்துத் தொண்டு பூண்டு நிற்கும் உரிமைபற்றியதாகும்.

மானை நோக்கி என்றது மானின் நோக்குப் போலும் நோக்கினையுடைய உமையம் மையை. "வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்க" (அடைக்கலப் 5) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

"மானன நோக்கி தன்னோ டுடனாவது" ஞான 316:3.
"மானன மென்விழி யாளொடும் வக்கரை மேவியவன்" ஞான 318:5.
"மானேர் நோக்கி, அருமான வாண்முகத்தாள மர்ந்துகாண" நாவு 215:3.
"மானைப்புரையு மடமென் னோக்கி மடவாளஞ்ச" சுந் 41:8.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

*இறைவன் தூய பக்தர்களிடம் அதிக அளவில் பிரகாசிக்கின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிலேன்- குறுகப் பெற்றிலேன்; நெடுங்காலம் என்றது இறைவனைப் பிரிந்திருக்கும் நாட்கள் அடிகளுக்கு நெடுங்காலமாகத் தோன்றுதல் பற்றியதாகும். அது ஓம்புகின்றேன் என்பதனோடு முடிந்தது. ஊனை ஓம்புகின்றேன் என்றது ஊனுடம்பினாற் பெறவேண்டிய பேறுபெற்றவிடத்தும் உடனே கதி அடைய முடியாத பிராரத்த வினையுடைமையால் அவ்வுடம் பினை உணவு உடை முதலியவற்றால் ஓம்பவேண்டிய நிலையுளதாயிற்று என அடிகள் இரங்கிக் கூறியவாறு.

உயிர் ஓயாதே கெடுவேன் என்றது இறைவன் அருளால் ஆணவ வல்லிருளின் ஆற்றலும் சஞ்சித ஆகாமிய வினைகளும் ஒழியப் பெற்றிருந்தும் பிராரத்தவினையுண்மை யாலும் ஒழிந்த ஆணவ கன்மங்களின் வாதனையுண்மையாலும் என் உயிர் தப்பாது கெடவேண்டி நேரலாமென அடிகள் அஞ்சிக் கூறியவாறு.

இதன்கண், என் உயிர் தூய்மையடைதற்குப் பிராரத்த வினையையும் மற்றைய மலகன்மங்களின் வாதனையையும் நீக்கி அருள்செய்ய வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்ளுதல் புலப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

(தொடரும்...

## கலாநிதி ஆறு. திருமுருகனை வாழ்த்துகிறோம்



நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு யா. மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினரால் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கு "**யாழ் விருது**" வழங்கப்பட்டமையானது சைவ உலகிற்குக் கிடைத்த பெரு விருதாகும். சரியான நேரத்தில், சரியான நபரைத் தெரிவுசெய்து விருதினை வழங்கிக் கௌரவித்த யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினர் முழுமனதோடு பாராட்டப்பட வேண்டியவர்களே.

விருதினைப் பெற்றுக்கொண்ட கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தமது இளமைக் காலத்திலிருந்தே கல்விச் சூழலில் தம்மை வளர்த்துக்கொண்டதோடு சைவத்திற்கும்- பொது வாழ்விற்கும் தம்மை உளமார அர்ப்பணித்து பணிகள் பல ஆற்றிவரும் பெருந்தகையாளராகும். தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் சீரான வழிநடத்தலும், சிவபூமி அறக்கட்டளை நிர்வாகப் பணிகளும் பொதுப்பணிகளில் இவர் ஆற்றிவரும் சேவையின் உச்சமாகும்.

"**யாழ் விருது**" பெறும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களை வாழ்த்தி வணங்கும் சைவ உலகுடன், சந்நிதியான் ஆச்சிரமமும்- சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து கொள்கிறது.

வாழ்க பல்லாண்டு...

வாழ்க! வாழ்க!! நீடூழி வாழ்க!!!

*இன்பமும் துன்பமும் நம்மிடத்தேதான் பிறக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகத்தில் மானிட வாழ்க்கை குயில் வாழ்க்கை

–திரு பு. கதிரித்தம்பி அவர்கள்–

சிவன் "புறந்தோல் போர்த்தெங்கும் புழுவளுக்குமுடி" எழுவகை உயிரினங்களைப் படைத்துள்ளார். நிலம் வாழும் உயிரினங்கள், நீர் வாழும் உயிரினங்கள், பறக்கும் உயிரினங்கள் எனப் பல்வகை உயிரினங்களையும், ஓரறிவு முதல் ஆறுஅறிவு கொடுத்து, அவை வாழும் வகையில் உடலமைப்பையும் கொடுத்து எல்லா உயிரினங்களும் வாழ வழிசமைத்துள்ளார். ஆறறிவு படைத்த மனிதன் கலியுகத்தில் குயில் வாழ்க்கை வாழ்வதைக் காண்கின்றோம்.

அப்பர் கைலாயப் பதிகத்தில் இறைவனை,

"முன்னமே தோன்றி முழைத்தாய் போற்றி"
"அடியும் முடியும் இகலி போற்றி"
"மூவாய் பிறவாய் இறவாய் போற்றி"
"உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி"

எனப் பாடியுள்ளார். இறைவன் புகழைப் பாடிய அருணகிரிநாதர்,

"துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே"

என்ற பாடல்மூலம் குயில்கள் மெள்ள வந்து சோலையில் அமர்ந்து குதூகலம் செய்வதையும் உணர்த்தியுள்ளார். இறைவன் தத்தித்திரியும், புளினிப்பறவைகளையும், வானத்தில் சந்தோச மிகுதியால் உயர உயரப் பறந்து மகிழும் வானம்பாடியையும் படைத்துள்ளார். தேவுலோகத்தில் தேவர்களையும், பூலோகத்தில் மனிதரையும் படைத்து வினைகளை அனுபவித்து திரும்பவும் தனது திருவடியில் சேர அருளுகின்றார். இந்த உண்மையை உணராத சிலர் அறியாமைக் கடலில் வீழ்ந்து தத்தளிக்கின்றனர்.

குயில் வரலாற்றை ஆராயும்பொழுது குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. இதனால் காகத்தின் கூட்டில் களவாக முட்டையிட்டு விடுகின்றது. அதன்பின் குயில் முட்டை பொரித்ததா? குஞ்சுக்கு உணவு ஊட்டுவது யார்? என்பதை மறந்து, சோலைகளில் காய் கனிகளை உண்டு சந்தோசமாகக் காலத்தைக் கழிக்கின்றது. காகக்கூட்டில் பொரித்த குயில் குஞ்சு மற்றைய காகக்குஞ்சுகளுடன் உணவு உண்டு வளர்ந்து வருகின்றது. வளர்ந்த காகக் குஞ்சுகள் கா கா என்று கத்த, குயில் குஞ்சு வேறு ஒலி எழுப்ப, தாய்க் காகம் தனது குஞ்சு இல்லையென எண்ணி குயில் குஞ்சைக் கொத்தித் துரத்தி விடுகின்றது; அதுமட்டுமன்றி ஏனைய காகங்களும் குயில் குஞ்சைக் கொத்தித் துரத்துவதை நாம் காண்கின்றோம். இந்தக் குயில் குஞ்சு

*வெற்றிக்குத் திறமையைவிட ஊக்கமே காரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட வேதனையை முட்டை இட்ட குயில் அறியுமா? ஏனைய காகங்கள் குயில் குஞ்சைக் கொத்துவதைக் கண்டு குயில்கள் ஓடிவந்து காப்பாற்றுமா? இறைவன் குயில் குஞ்சு ஓடி ஒளித்து மரங்களில் வாழ குஞ்சுக்கு தாய் போல் வழிகளைக் காட்டிக் கொடுக்கின்றான். இதுபோல் இலங்கையில் நடந்த போர்க் காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளைக் காப்பாற்ற வெளிநாடு செல்லத் தூண்டினர். பல கஷ்டங்கள் ஊடே வெளிநாடு சென்றவர் பட்டதுயரை யார் அறிவார்? எத்தனை நாட்கள் பட்டினி கிடந்து, பல துயரங்கள்பட்டு வெளிநாட்டில் காலடி வைத்தனர். அவர்கள் வேலை தேடி எத்தனை நாட்கள் அலைந்தனர். அவர்களுக்கு கையில் பணம் கிடைத்ததும் தமது தேவைக்கேற்ற பணத்தை வைத்துக்கொண்டு மிகுதிப்பணத்தைப் பெற்றோர்களுக்கு அனுப்பினார்கள். பணத்தைக் கண்டதும் இங்குள்ளவர்கள் டாம்பீக வாழ்க்கை வாழ்கிறார்கள். பணம் அனுப்பிய பிள்ளை எப்படிக் கஷ்டப்பட்டு உழைக்கிறானென்பதையும் மறந்து விடுகிறார்கள். இங்குள்ளவர்கள் குயில்கள்போல் கூடிக் குலாவி நாகரீக உடையுடன் உலாவித் திரிவதை நாம் காண்கின்றோம். புதுப்பண மிடுக்கினால் சிலர் இறைவனையும் மறந்து விடுகின்றனர். இறைவன்தான் தன் பிள்ளையை வெளிநாடு செல்ல வழி செய்தான், பணம் எமக்கு அனுப்ப வழி செய்தான் என்ற உண்மையை உணர மறுக்கின்றனர். பிள்ளைகளை வெளிநாடு அனுப்பும்போது எத்தனை கோவில்களுக்கு நேர்த்திக்கடன் வைத்திருப்பார்கள். அவற்றை ஒரு கணம் சிந்திக்க மனம் இருக்குமோ? இல்லையோ யார் அறிவார்.

குயில்கள் தாங்கள் பட்ட துன்பங்களை மறப்பதற்கோ அதிகாலையில் எழுந்து கூ கூ என ஒலித்து மக்களைத் துயில் எழ வைக்கின்றன. ஆண் குயில்கள்கூட கூ கூ என ஒலி எழுப்பி எம்மையும் கூவும்படி கேட்கின்றன. குழந்தைகளும் கூ கூவென ஒலி எழுப்ப குயில்களும் ஒலி எழுப்புகின்றன.

வெளிநாடுகளில் வாழ்கின்ற எத்தனையோபேர் எமது கலை கலாச்சாரத்தை மறவாது பேணி வாழ்ந்து வருவதை நாம் அறிவோம். அதுமட்டுமன்றி நாம் ஏன் வெளிநாடு வந்தோம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாகவும், பிறர்க்கு உதவி செய்பவர்களாகவும் வாழ்வதைக் கண்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்கள் நமது நாடு வந்தாலும் ஆசார சீலராக கோவில்கள் சென்று வழிபடுவதையும், ஆலயங்களுக்கும், முதியோர், அநாதை, ஊனமுற்றோர்களுக்கும் உதவி செய்பவர்களாகவும் விளங்குவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

வெளிநாட்டில் ஒழுக்க சீலராய் வாழ்ந்த அநேக அடியவர்கள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் வந்து பிரதிட்டை எடுப்பதையும், சுவாமி காவுவதையும் சந்நிதியான் அடியவர்கள் நன்கு அறிவர். சந்நிதியான் ஆச்சிரமத்தின் உயிர்நாடியாக விளங்கும் முருகன், வரும் அடியார்களுக்கு அருள்புரிந்து, இடர்நீக்கி, சந்நிதியான் ஆச்சிரமத்தை சுட்டிக்காட்டுகின்றான். எனவே குயில் வாழ்க்கை வாழும் மனிதன் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று காதலாகி, கண்ணீர் மல்க வேண்டினால் எந்நிதியும் தரும் சந்நிதி வேல்வன் நிம்மதியும் தருவான் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

## அருளிய

# திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 61. அதுவாய் நிற்றல்

தூநிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்
தான் அதுவாய் நிற்கும் தரம்.

**பொருள்:**

வெயிலில் அலைந்து வருந்தியவன் குளிர்ந்த நிழலை உடைய இடத்தைக் கண்டால் பிறர் சொல்லாதிருக்கவும் தானே அவ்விடத்தை அடைந்து நிழலில் அடங்கி நின்று இன்புறுவான்.

அதுபோல, அறியும் நெறியால் திருவருளை உணர்ந்த உயிர் தான் வேறாய் நில்லாமல் அத்திருவருளோடு ஒன்றுபட்டு அதனுள் அடங்கி அதுவேயாய் நிற்கும்.

**சொற்பொருள்:**

தூநிழல் ஆர்தற்கு- (வெயிலில் மிகவும் துன்புற்று வருபவன்) நிழலை உடைய தூய இடத்தைக் கண்டால் அவ்விடத்தைப் பொருந்துதற்கு, ஆரும் சொல்லார்- யாரும் சொல்ல வேண்டாமலே, தொகும்- தானே அவ்விடத்தைச் சென்று சேர்ந்து இன்புறுவான், இதுபோல்- இதனைப் போன்றது, தான்- (அறியும் நெறியைப் பெற்ற) உயிர், அதுவாய்- மெய்ப்பொருளை உணர்ந்து அதனோடு ஒன்றி அதுவேயாய், நிற்கும் தரம்- அதனுள் அடங்கி நிற்கும் தன்மை.

**விளக்கம்:**

**சுவரும் அருளும்:**

இந்நாளில் எங்கேயும் சுவர் என்பதே தெரியாது! இது விளம்பர காலம். ஆதலால் எந்தச் சுவரையும் விட்டுவைக்க மாட்டார்கள். சுவரொட்டிமேல் சுவரொட்டியாக ஒட்டிச் சுவரே தெரியாதபடி செய்து விடுவார்கள்.

வழிச்செல்வோரில் சிலர் அந்தச் சுவரொட்டிகளைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள்; சிலர் அருவருப்பு அடைவார்கள். விருப்பு வெறுப்புத் தானே பற்று என்பது. பார்ப்பவர்கள் பற்றோடு பார்க்கிறார்கள் என்பது இதனால் விளங்கும்.

அவ்வாறு பார்க்கின்ற அவர்கள் ஒன்றைப் பார்க்கத் தவறிவிடுகிறார்கள். அவர்கள் பார்க்கத் தவறியது, அந்தக் கவர்ச்சி விளம்பரங்களை ஒட்டுவதற்கு ஆதாரமாய் உள்ள அந்தச்

*விசுவாசமான நண்பன் தெய்வத்தின் சாயல் ஆவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவராகும். வழிச் செல்வோரில் யாராவது அந்தச் சுவரை நினைக்கிறார்களா?

இன்றைக்கு ஒட்டிய சுவரொட்டி நாளைக்கு இருப்பதில்லை. அது கிழிக்கப்பட்டிருக்கும், அல்லது அதன்மேல் வேறொன்று ஒட்டப்பட்டிருக்கும். இவ்வாறு நிலையில்லாமற் போகின்ற சுவரொட்டிகளின் கவர்ச்சியில் ஈடுபட்டுப் பற்றோடு பார்ப்பவர்களே பலர். அவ் விளம்பரங் களுக்குப் பின்னால் ஆதாரமாய், நிலையாய் நிற்பதாகின்ற சுவரின் தன்மையை யாரும் நோக்குவதில்லை.

இந்த உலகிற் காணப்படும் பொருள்கள் யாவும் அந்த விளம்பரச் சுவரொட்டிகளைப் போன்றவை. நாம் உலகப் பொருள்களைத் தனித்தனியே நோக்கி அவற்றின்மீது பற்றுக் கொண்டு நிற்கிறோம். சுவரொட்டிகள் எப்படி நிலையில்லாமற் போகின்றனவோ அப்படியே அவையும் நிலையற்ற தன்மை உடையனவாகும். ஆனால், அதனை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

இந்த நிலையற்ற உலகிற்கு ஆதாரமாய் இருப்பது எது? சுவர்போல உலகிற்குத் தாரகமாய் நிற்பது திருவருளாகும். விளம்பரக் கவர்ச்சியில் ஈடுபட்டுச் சுவரை மறப்பவரைப் போல நாமும் உலகியற் பொருள்களில் பற்றுச் செய்து, திருவருளைப் பற்றாமல் விடுகிறோம்.

அடிப்படையாக உள்ள சுவரை நோக்குவார்க்கு அதில் ஒட்டப்பட்டுள்ள படக் காட்சிகள் சலனத்தைச் செய்யா; விளம்பரங்கள் அவரது கருத்திற் பதியா; அவரிடம் பற் றினைச் செய்ய மாட்டா. அவர்க்குச் சுவரின் தன்மையே புலப்படும். அதுபோல அறிவை மயக்குகிற உலகப் பொருள்களில் பற்று வைக்காமல் அவற்றைத் தள்ளி நோக்குவார்க்கு அவற்றிற்கு ஆதாரமாய் உள்ள திருவருள் இனிது புலப்படும்.

அறியும் நெறியில் நின்று இவ்வாறு பாசப்பற்றை நீக்கித் திருவருளை உணர்ந்தவர் பின் அதனோடு ஒன்றி நிற்கும் முறையினை இச்செய்யுள் உணர்த்துகிறது.

**பிறவி வெப்பமும் திருவருள் நிழலும்:**

திருவருளை இறைவன் திருவடி நிழல் என்று சிறப்பிப்பர். உயிர் திருவருளைச் சேர்ந்து பிறவியாகிய வெப்பம் நீங்கித் தண்மையாகிய இன்பம் பெற்று மகிழ்தலால் அது திருவடி நிழல் எனப்படுகிறது.

பிறவி எடுத்தவரெல்லாம் பிறவித் துன்பத்தை உணர்ந்தவர் அல்லர். வெயிலில் நடப்போர் எல்லாம் வெயில் தரும் துன்பத்தை உணராதிருப்பது போன்றது இது. "பிள்ளையைப் பள்ளியில் எப்பாடுபட்டாவது சேர்க்க வேண்டும். இவரைப் போய்ப் பார்த்தால் அது நடக்கும்" என்று அவரைப் பிடிப்பதற்காக வேகின்ற வெயிலில் வேகமாய் நடப்போர் உண்டு. வழியில் நிழலைக் கண்டாலும் நின்று இளைப்பாற மாட்டார். அதற்குள் அவர் போய்விட்டால் என்ன செய்வது? நட்ட நடுப்பகலில் சுட்டெரிக்கும் வெயிலில் திரையரங்கின் வாசலில் மணிக்கணக்காய்த் தவம் கிடப்போர் உண்டு. அவர் எல்லாம் வெயிலின் வெம்மையை உணராதவர் ஆவார்.

இனி, ஒரு பற்றும் இல்லாத ஏழை இரவலன் ஒருவனும் அந்த வெயிலில் வருகிறான். அவனுக்கு வீடில்லை; வாசலில்லை. யார் பரிந்துரையையும் நாடிச்செல்ல வேண்டியதில்லை. படக் காட்சியைப் பார்த்தே தீரவேண்டும் என்ற வெறியும் இல்லை. வேறு வருத்தமும் இல்லை. அவனை இப்பொழுது வருத்துவதெல்லாம் இந்த வெயில்தான். இதிலிருந்து விடுபடுவது எப்படி? சுற்றுமுற்றும் பார்க்கிறான். அதோ! ஒரு மரநிழல். ஓடிச்சென்று அதனை

*நிலையான உறுதிதான் மற்றப் பண்புகளுக்கெல்லாம் துணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகிறான்; வெயிலின் கொடுமையிலிருந்து விடுபடுகிறான்; உடலும் உள்ளமும் குளிர்கிறான்; இன்புறுகிறான். இவ்வாறு நிழலையடைந்து இன்புறும் இவனைப் போன்றவர் பிறவி வெப்பத்தை உணர்ந்து அறியும் நெறியில் நின்று திருவருள் நிழலை அடைந்து நிற்பர்.

**இயற்கையே செயற்கைபோலத் தோன்றுதல்:**

வழிச் செல்வோனுக்கு வேறாக இருக்கிறது மரநிழல். அவன் சென்று அதனை அடைகிறான். அதுபோலத் திருவருளும் உயிருக்கு வேறாக இருக்கிறது என்று கருதிவிடக் கூடாது; திருவருள் உயிரோடு என்றும் பிரிப்பின்றி ஒன்றாகவே உள்ளது. மல மறைப்பினால் உயிர் இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறது. ஆணவமலம் உயிருக்கு "நான்" என்ற தன் முனைப்பைக் கொடுத்து "நான் ஒரு தனி முதல்" என்று கருதும்படியாகச் செய்கிறது. அதனால் உயிர் தான் இறைவனுக்கு வேறாக இருப்பதாக உணர்கிறது. இது பொய்யுணர்வாகும்.

பின், ஞானம் பெற்று மலம் நீங்கித் திருவருளை உணரும் காலத்தில் அத் திருவருட்காட்சி அதற்குப் புதியதாகத் தோன்றுகிறது. இந்நிலையை ஓர் உவமையினால் விளக்கலாம். பிறவிக் குருடன் ஒருவனுக்குக் கண்பார்வை கிடைத்தால் அவனுக்குச் சூரியவொளி புதியதாகத் தோன்றும். ஆனால், அவ்வொளி புதிதாக வந்ததன்று. இதுகாறும் அவன் சூரியவொளியில் தான் நின்றான். அவனுடைய கண்ணிலும் சூரியவொளி பொருந்தி நின்றது. படலம் கண்ணை மறைத்திருந்தபடியால் சூரியவொளி புலப்படாமல் இருந்தது. இப்பொழுது படலம் நீங்கிக் கண்பார்வை வந்தவுடன் சூரியவொளி அவனுக்குப் புதியதாய்த் தோன்றுகிறது. அதுபோலப் பக்குவப்பட்ட உயிர் மலம் நீங்கித் திருவருட்காட்சி புலப்பட்டவுடன், அதனோடு தான் புதிதாக ஒன்றுபடுவதுபோல உணர்கிறது. சுருங்கக் கூறினால், இயற்கையே அதற்குச் செயற்கைபோலத் தோன்றுகிறது எனலாம். மலமறைப்பும் அதன் நீக்கமுமே உயிர் இவ்வாறு உணர்வதற்குக் காரணமாகும்.

**திருவருளோடு ஒன்றாய் நிற்றல்:**

தெளிவுணர்வால் திருவருளை இறுகப் பற்றிய உயிர், அதனோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையினைத் "தான் அதுவாய் நிற்கும் தரம்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர். உயிர் அதுவாய் நிற்றல் எவ்வாறு என்பதை நோக்குவோம்.

உயிர் தன்னை வேறாய் அறிகிற நிலை போகவேண்டும். நான் என்ற தற்போதம் நீங்க வேண்டும். "நான் என ஒரு முதல் இல்லை" என்று திருவருள் நிறைவில் அடங்கி நிற்க வேண்டும்.

பெத்த காலத்தில் இறைவன் உயிரிடத்தில் அடங்கி, தான் சிறிதும் புலப்படாமல், உயிர் ஒன்றே உள்ளது என்று சொல்லும்படியாக நின்றதுபோல இம் முத்திகாலத்தில் உயிர்தான் முனைந்து தோன்றாமல் அருளிடத்தில் அடங்கி நிற்றல் வேண்டும்.

எனவே, திருவருளைத் தெளிய உணர்ந்த உயிர் தன்னறிவு வேறாய் நில்லாமல் சிவனது அறிவாகிய அத்திருவருளிற் பொருந்தி நான் என்ற உணர்வை இழந்து அதனோடு ஒன்றி நிற்றலே அதுவாய் நிற்றல் என ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

*கவலைப்படுவதன்மூலம் வாழ்வில் உயர்வை அடைய முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 62. கசப்பும் இனிப்பும்

தித்திக்கும் பால் தானும் கைக்கும் திருந்திடும் நாப்
பித்தத்தின் தான் தவிரந்த பின்.

**பொருள்:**

பால் தித்திப்பதாக இருப்பது அதன் இயற்கை. அந்த இயற்கைக்கு மாறாகப் பால் கசப்பது நாவில் சேர்ந்த பித்தம் என்னும் செயற்கையினால் ஆகும். பித்தமாகிய செயற்கை நீங்கியபோது பால் இயற்கையான தித்திப்பையே உடையதாகும்.

அதுபோல, உயிருக்கு என்றும் உறவுப்பொருளாக இருப்பது திருவருள். அவ்வியல் புக்கு மாறாகத் திருவருள் பகைப் பொருளாக உயிர்க்குத் தோன்றுதல் அவ்வுயிரைப் பற்றியுள்ள ஆணவ மலமாகிய செயற்கையினால் ஆகும். அச்செயற்கை நீங்கியபோது, திருவருள் இயற்கையான உறவுப் பொருளாகவே தோன்றும்.

**சொற்பொருள்:**

நா பித்தத்தின்- நாவில் பித்தநோய் உள்ளபொழுது, தித்திக்கும் பால் தானும்- தித்திக்கின்ற பாலும், கைக்கும்- அதற்குக் கசப்பாகவே தோன்றும், தான்தவிரந்த பின்- அந் நாக்கு பித்தமாகிய குற்றம் நீங்கியபிறகு, திருந்திடும்- அப்பால் அதற்கு உள்ளவாறு தோன்றும்; அதாவது, இனிமை தருவதாய் விளங்கும். (இங்கு உவமை மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதனைக்கொண்டு ஆசிரியர் கூறவந்த கருத்தை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்.)

**விளக்கம்:**

உலகியலை விடாது பற்றி நிற்கின்ற மாந்தர், அனைத்துயிர்களையும் தாங்கி நின்று நடத்துகின்ற திருவருளினது இருப்பையும் இயல்பையும் சிறிதும் உணரார். இந்நிலைக்கு ஓர் உவமை சொல்லலாம்.

கடலுக்கு அருகிலே உள்ள கிணற்றில் ஓர் ஆமை வாழ்ந்து வந்தது. அதற்கு அந் தக் கிணறுதான் உலகம். அதைத் தவிர வேறு ஒன்றையும் அது அறியாது.

ஒருநாள் கடலிலிருந்து ஒரு பெரிய ஆமை கரைக்கு வந்து மெல்ல ஊர்ந்து இந் தக் கிணற்றை வந்தடைந்தது. கிணற்று நீரில் இறங்கியது. கிணற்றில் வாழ்ந்த ஆமைக்குக் கடலாமையைப் பார்க்கப் பார்க்க வியப்பு உண்டாயிற்று.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டது. "நான் கடலிலிருந்து வருகிறேன்" என்று கடலாமை கூறியது. கடலா அது எப்படியிருக்கும்? இது கிணற்று ஆமையின் கேள்வி. "அது நீர் நிறைந்த இடம். எங்கு பார்த்தாலும் தண்ணீர்தான் இருக்கும்" என்று விளக்கியது கடலாமை. கிணற்று ஆமைக்கு அது விளங்கவில்லை. "அந்தக் கடல் இந்தக் கிணறு அளவுக்கு இருக்குமா?" என்று கேட்டது! கடலாமைக்குச் சிரிப்பு வந்தது. "கடல் கிணற்றைவிட ஆயிரம் ஆயிரம் மடங்கு பெரியது. அதனை அளவிட முடியாது" என்று கூறியது. கிணற்று ஆமை அதை நம்பவில்லை. "இந்தக் கிணற்றை விடப் பெரியதொன்று எப்படி இருக்க முடியும்? நீ சொல்வது அத்தனையும் பொய்!" என்று மறுத்துச் சொன்னதாம். அந்தக் கிணற்று ஆமையின் நிலையில் இருக்கிறார்கள் மக்களில் பலர். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகியல் ஒன்றுதான். இதனின் மேம்பட்ட ஒரு வாழ்க்கை உண்டு என்பதை அவர் அறியார்.

தொன்றுதொட்டு இன்றுவரை உடல்கள் நீர்க்குமிழிபோலத் தோன்றியும் அழிந்தும் வருகின்றன. இப்பொழுது இருக்கின்ற உடல்கள் எதிர்காலத்தில் இருக்கப் போவதில்லை. நடைமுறை உண்மை இதுவாக இருந்தும் அவர்கள் தமது உடல் வாழ்க்கை என்றென்றும் நிலைத்திருக்கும் என்றே நினைக்கின்றனர்; உடலுக்கு வேண்டிய உணவும் உடையும் கிடைத்துவிட்டால் மகிழ்ந்து போகின்றனர்; இதற்குமேல் வாழ்க்கையில் பெறுவதற்கு என்ன இருக்கிறது என்ற முடிவுக்கு வருகின்றனர். வாழ்க்கையில் அதைவிட மேலான குறிக்கோள் இருக்கிறது என்பது அவர்களுக்கு விளங்குவதில்லை.

அருளே பெரிய பொருள் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. அருளே உயிரைத் தூய்மை செய்து பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்லும் என்று அறிந்தோர் சொன்னாலும் அதனை ஏற்காமல் எள்ளி நகையாடிப் போவர்.

இப்படி, அருளைப்பற்றிச் சிந்திக்காமல் அப்படி ஒன்று தமக்கு வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் வாழ்கிறவர்கள் இவர்கள். அவர்களிடத்தில் உள்ள ஆணவ மலம் நீங்காத வரையில், அவர்களுக்குத் திருவருள் என்பது வேண்டாத பொருளாகவே கசப்பான பொருளாகவே இருக்கும். நாக்கில் பித்தநோய் உள்ளவன் பால் கசக்கிறது என்று சொல்வான். அதற்குப் பால் காரணமன்று. அவனது நோயே காரணம். மலத்தின் வழிபட்டு, உலக இச்சை கொண்டவர்களுக்குத் திருவருள் இனியதாக இராது. அதற்குக் காரணம் அவர்களுக்குப் புலன் நுகர்ச்சியிலே நாட்டம் இருப்பதேயாகும்.

**திருவருள் இனித்தல்:**

ஓர் அறை நெடுங்காலமாகப் பூட்டியே கிடக்கிறது. அதற்குள் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. ஒருநாள் அதன் கதவுகள் திறக்கப்பெற்றன. கைவிளக்கு ஒன்று கொண்டுவரப்பட்டது. அந்த விளக்கொளியில் அறையின் சுவர்கள் பளிச்சென்று தோன்றின. அங்கே அரிய ஓவியங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவ்வுண்மை விளக்கொளியாலேயே விளங்கியது.

அதுபோல ஆணவமலம் சூழ்ந்த இருட்டறையாக நமது சிந்தை உள்ளது. ஞானம் ஆகிய ஒளி அங்கே வந்ததும் வாழ்க்கையைப்பற்றி முன்னே கொண்டிருந்த எண்ணம் அறவே மாறி விடுகிறது. உண்டு உடுத்து இன்புற்றிருப்பது வாழ்க்கையின் நோக்கமன்று. இறைவனைச் சார்ந்து இன்புற்றிருப்பதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பது தெளிவுபட விளங்குகிறது.

மலம் நீங்கிய தூய ஆன்மாக்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். அவர்கள் தமக்கு எதிர்காலத்திலும் எவ்விடத்திலும் துணையாக நிற்பது இறைவனது திருவருளே என்று அதனைப் பற்றிக்கொள்கிறார்கள். அன்பினால் அகங்குழைந்து அழுகிறார்கள். அவர்களுக்கு அமுதம்போல இனிக்கிறது திருவருள். நாவில் பித்தம் நீங்கியபோது பால் தித்திப்பது போன்றது இந்த நிலை.

“அன்போடு அழுவோர்க்கு
அமுதங்கள் காண்க
ஐயாறன் அடித்தலமே”

என்றாற்போல வரும் திருமொழிகளால் இதனை உணரலாம். (தொடரும்...

நல்லவனைக் கண்டுபிடி; நல்லவனாக நடிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகன் செய்த ஆனைமுகன் பூசை

– செல்வி பா.வேலுப்பிள்ளை அவர்கள் –

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் ஆட்சி செய்யும் வரத்தைக் கேட்டான் சூரன். அவன் தவத்தை மெச்சிய இறைவன் அப்படியே வரம் தந்தார்.

நான் என்ற அகங்காரம் கொண்டான் சூரன். தேவர்கட்குப் பல இன்னல்கள் செய்தான். தாங்கமுடியாத தேவர்கள் இந்திரன் தலைமையில் இறைவனைக் காண கைலாயம் சென்றனர். இறைவன் மௌன தவநிலையில் இருந்தார். தவத்தைக் கலைக்க அரும் பாடு பட்டனர். தேவர்களால் முடியவில்லை.



மன்மதனை அனுப்பினர். அவன் மலர்க் கணையை ஏவினான். இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பலானான்.

"ஓடி மீள்க என ஆடல் பார்த்திருப் பவன்" இறைவன். "போதித்து நம்மை வளர்த்தெடுப்பவளாய பெய்வளை சிவசக்தி கொடுத்த வரத்தை மாற்றவோ அழிக்கவோ முடியாதென்பதை இறைவி அறிவாள். இரக்கமே வடிவானவள் அவள். சிவன் மைந்தனாற்றான் தேவர்களைக் காப்பாற்ற முடியும். இறைவன் சக்தியின் எண்ணத்தைப் புரிந்து கொண்டார்.

அசுரர்களால் பட்ட, படுகின்ற துன்பங்களைக் கூறி தம்மைக் காப்பாற்றும்படி தேவர்கள் இறைவனை வேண்டினர். அசுரர்களை அழித்து தேவர்களைக் காக்க எண்ணி நெற்றிக் கண்ணைத் திறந்தார். ஆறு பொறிகள் பறந்தன. வெப்பம் தாங்க முடியாமல் வாயு சரவணப் பொய்கையில் சேர்க்க ஆறு பூக்களில் ஆறு குழந்தைகள் தோன்றி கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்பட்டனர். உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் ஒருங்குசேர அணைக்க ஆறுமுகனானான். அவனே முருகன்.

ஒரு சமயம் கயிலாயத்திலிருந்த சிவனும் உமையும் உலகம் முழுவதிலும் தம் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தனர். அப்போது, ஆயுள், ஆரோக்கியம், தனம், தானியம், புத்திரபாக்கியம் வேண்டி விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்களே இப்பேறுகளைத் தரக்கூடிய விரதம் யாது என உமையம்மை இறைவனிடம் கேட்டார். தேவீ! கேட்பாய், சிவப்பேறு விரும்புபவர் சிவனையும், தனம், தானியம் வேண்டுவோர் லக்சுமியையும், கல்வியை விரும்புபவர் சரஸ்வதியையும், வீரம் வேண்டி துர்க்கையையும் பகைவரை வெல்ல, நோய் பிணி நீங்க, பிள்ளைவரம் வேண்டி முருகனையும் நினைந்து விரதமிருப்பர். வரங்கள் யாவும் தரும் வரலக்ஷ்மி விரதமுமுண்டு. விநாயகர் வினைகளைப் போக்குபவர், சுப காரியங்கள் தொடங்கும்போது விநாயகரை வணங்கியே தொடங்குவர். சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, பரணி கார்த்திகை, ஏகாதசி, விநாயக சதுர்த்தி எனப் பல விரதங்கள் உள என விளக்கினார். அப்படியாயின் விரதங்களுள் சிறந்தது எது என உமையம்மை கேட்க, விநாயக சதுர்த்தியே சிறந்ததென இறைவன் கூறினார்.

கேட்டுக்கொண்டிருந்த முருகன் தந்தையிடம், "உலகில் எண்ணற்ற விரதங்கள் உள என்று சொல்கிறீர்களே அவற்றில் எது உயர்வானது. உன்னத பலனைத் தருவது? எளிமையான விரதம் எது? எனக் கேட்டார். அதற்கு இறைவன், மகனே! விக்கினங்கள் அனைத்தையும் நீக்கி விருப்பங்களை நிறைவேற்றும் விரதங்களுள் முதன்மையானது விநாயகருக்குரிய விநாயக சதுர்த்தியே" எனக் கூறினார்.

"தந்தையே! உங்களைக் குறித்துச் செய்யும் விரதங்களைவிட உயர்வானதா அது?" கேட்டார் முருகன். கந்தா! "சுப்பிரமணியோம்" என்று வேதங்கள் உன்னையும் என்னையும் ஒரே மந்திரத்தால் புகழ்கின்றனவோ அப்படியே கணபதியையும் மூல முதல்வனாகப் புகழ்கின்றன. ஆகவே விநாயகரை வணங்கிச் செய்யும் கருமங்கள் நிறைவேறும்.

தேவர்கட்கு இடுக்கண் செய்யும் அசுரர்களை அழிப்பதற்கென்றே உதித்தவன் நான். ஆகவே அண்ணன் ஆனைமுகனை எண்ணி விரதம் அநுஷ்டிப்பேன் என விரதம் பூண்டார் முருகன். பிள்ளையாரை மனதில் நினைந்தார். மானசீகமாக அவருக்குப் பிடித்தமான அப்பம், அவல், எள்ளுருண்டை, மோதகம், முக்கனிகளைப் படைத்தார். அறுகு, வன்னியிலை கொண்டு ஓம் கணேஷாய நம! ஓம் கணேஷாய நம! என அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி விரதமிருந்து அண்ணனின் அநுக்கிரகம் பெற்றார். தேவர்கள் கொடுத்த பல்வேறு ஆயுதங்களுடன் தாயார் தந்த வேலையும் கைக்கொண்டார். தந்தையையும் தாயாரையும் வணங்கி போருக்குச் சென்றார். அசுரர்கள் பாலன் இவன் என எதிர்த்தனர். தாரகன், சிங்கன் ஆகிய இருவரையும் அழித்தபின், சூரனை வேலினால் சேவலும் மயிலுமாக இரு கூறாக்கினார். தேவர்கள் மகிழ்ந்தனர்.

---

## வருந்துகிறோம்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையில் நீண்டகால போஷகராகவிருந்து, பயனுள்ள ஆலோசனைகள் பலவற்றையும் வழங்கி வழிநடத்தி வருகின்ற சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் (வல்வை, சிவன் தேவஸ்தான பிரதமகுரு) அவர்களின் தாயார் "தாட்சாயணி" அவர்கள் சிவபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துன்பத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினராகிய நாமும் இணைந்து கொள்கிறோம்.

"தாட்சாயணி" அம்மையாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிறர் உழைப்பில் வாழ்பவன் சமூக ஒட்டுண்ணி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 06

## கடமையும் அதன் பரிமாணங்களும்

### 06. எமக்கே உரிய கடமை.

நாம் உடம்போடு கூடிய தனிப்பட்டவர்கள். ஆதலால் எமக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையும் உண்டு. சமூகத்துக்காக நாம் எம்மைக் கொலைசெய்ய முடியாது. அதேபோல எமது தனிப்பட்ட நன்மைக்காகச் சமூகத்தை அழிக்க முடியாது. எந்தப் பிரச்சினையையும் தருக்க ரீதியாக அணுகும்போது ஒருவர் மனதில் கொள்ளவேண்டிய பல முக்கியமான விடயங்கள் உண்டு. சில தியாகிகள் தம்மைவிட மேலான ஒன்றுக்காகத் தம்மையே அழித்துக்கொள்கிறார்கள். வேறு சிலர் தமது சொந்த அகங்காரத்தைத் திருப்தி செய்ய சமூகத்தை அழிக்கிறார்கள். வரலாறு இவற்றுக்கான சான்றுகளை எமக்குத் தருகின்றது. நாம் எமக்காகச் சமூகத்தைச் சுரண்ட முடியாது. சமூகமும் எம்மைச் சுரண்டுவதற்கு எதிர்பார்க்கக் கூடாது. சமூக விதிகளின் கரங்களில் நாம் ஒரு நகைப்புக்கு இடமான பொருளாக இருக்க முடியாது. அத்துடன் நாம் மனித சமூகம் தான் நினைத்தபடி ஆட்டிவைக்கின்ற பொம்மைகளும் இல்லை. அதேபோல நாம் சமூகத்தை எமது அடிமையாகவும் கருதமுடியாது. மேலும் நமது தனிப்பட்ட நலனைப் பெறுவதற்கான ஒரு வழியாகவும் சமூகத்தைக் கருத முடியாது. கூட்டு வாழ்க்கையில் சமூகத்தின் முக்கியத்துவத்தையும், அந்த உறவுகளில் நமது முக்கியத்துவத்தையும் நன்கு கருத்தில் கொள்ளப்படவேண்டியுள்ளது.

### 07. பிரபஞ்ச இயற்கைக்கான கடமை.

மேற்கூறிய இவை எல்லாவற்றுக்கும் மேலாகவும் முக்கியமான சில விடயங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று நாம் வாழும் இப்பிரபஞ்சம் ஆகும். இந்தப் பிரபஞ்சத்தை மனித சமூகத்தினால் அழிக்க முடியாது. பறவைகள், மிருகங்கள், நதிகள், மலைகள், நாம் வாழும் இந்தச் சூரிய குடும்பம் முதலானவற்றோடு கூடிய இந்த உலகமும் முக்கியமானது ஆகும். இயற்கை உலகம் எமது புறக்கண்களினால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாம் வாழும் இந்த இயற்கை உலகமானது சமூகத்தையும், தனிப்பட்ட மனிதன் ஒவ்வொருவனையும் விட எந்தவகையிலும் முக்கியம் இல்லாதது அன்று. நாம் இந்த இயற்கை உலகோடு இணைந்து கூட்டுறவாக வாழும்படி எதிர்பார்க்கப்படுகின்றோம். அதுவும் நமக்கும் நமது சமூகத்துக்கும் அதிகபலன் கிடைக்கக்கூடிய வழியில் மிகத் திறமையாக அக்கடமையை நிறைவேற்றவும் நாம் எதிர்பார்க்கப்படுகின்றோம்.

அகங்காரமும் ஆணவமும் அண்ணன் தம்பிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. தெய்வீகக் கடமை.**

இவற்றிற்கும் மேலாக எமக்காக இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த இறைவனுக்கு நாம் நிறைவேற்றவேண்டிய கடமை மிக உயர்ந்தது ஆகும். எமக்கு உள்ளே உள்ள ஜீவாத்மா பூரணத்துவம் வாய்ந்த பரமாத்மாவின் ஓர் அடையாளம் ஆகும். எம்மிடமுள்ள அதே ஆத்மாதான் இந்தப் பிரபஞ்சம் எங்கும் நிறைந்துள்ள பரமாத்மாவும் ஆகும். இதனால், மனிதர் ஆத்மசக்தி என்று கூறும்போதும், ஜீவாத்மாவை நினைக்கும்போதும் அவ்வாத்மாவைப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றுக்கும் சாட்சியாகக் கருதுகின்றோம். அப்படியான பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் மனக்கண்முன் நிறுத்தும்போது அக்காட்சிக்குள் மனிதர் இறைவனைக் கொண்டு வருகின்றனர். அதே இறைவன் தனது பல்லாயிரம் கண்களுக்கு ஊடாக இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் பார்க்கின்றார். அங்ஙனம் ஒரு வெற்றிகரமான முறையில் இந்த உலகத்தில் வாழுவது எவ்வளவு கடினம் என்பதை ஒருவர் கற்பனை செய்து கண்டுகொள்ளலாம். அப்படிக் கற்பனை செய்யும்போது மேலே கூறிய எல்லாவற்றையும் மனநினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டி உள்ளது. மேற்கூறிய நான்கு விடயங்களையும் வடமொழிக் கலைச் சொற்களால் ஆதிபௌதிகம், ஆதியக்ஞம், ஆதி ஆத்மிகம், ஆதி தெய்விகம் என்று அழைக்கப்படும்.

**09. ஆதி தர்மிகம்.**

ஐந்தாவது ஓர் அம்சமும் உள்ளது. அதனைப் பொதுவாக ஆன்மிக நூல்களுக்கு விளக்க உரை செய்வோர் குறிப்பிடுவது இல்லை. அதுவே ஆதிதர்மிகம் ஆகும். பொதுவாக அதனை நாம் இறைவனது இராச்சியத்தில் உள்ள நீதி என அழைக்கின்றோம். இறைவனது இராச்சியம் முக்கிய ஆன்மிக உண்மையாகிய ஆதிதெய்விகம் ஆகும். அந்த இராச்சியத்தில் உள்ள நீதியே இந்தப் பிரபஞ்சத்தில் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. அந்த நீதியை வேதங்கள் சத்தியம் என்றும் ரிதம் என்றும் அழைக்கின்றன.

அதுவே பூரணத்துவமான நீதியும் பிரபஞ்சத்தில் இயங்கும் நீதிச்சட்ட விதியும் ஆகும். ஜனநாயகக் குடியரசு ஒன்றின் சட்டயாப்பு அந்நாட்டின் ஜனாதிபதியின் அதிகாரத்தில் இருக்கும். அதன்கீழ் பிரதம மந்திரியின் அதிகாரம் இருக்கும். இவை இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கி இருந்தாலும் ஒவ்வொன்றும் தனிப்பட்டது ஆகும். இதுபோலவே வேதங்கள் சத்தியம், ரிதம் என்பவற்றைப்பற்றிக் கூறுகின்றன. சத்தியம் என்பது மிக உயர்ந்த அதிகாரத் தத்துவம் ஆகும். எல்லாவித நீதிக்கும் அதுவே அடிப்படை ஆகும். படைப்பின் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் அது செயற்படும்போது அதனை ரிதம் என்கிறோம். எனவே, ஒவ்வொருவரும் இந்த நீதிக்கு இணங்க நடந்துகொள்ள வேண்டும். நீதி என்ற வார்த்தை மிகப் பொருள் பொதிந்த ஒன்றாகும். நீதி என்பது நடைமுறையில் செயற்படுவதும், வெளிப்படுவதும் பல்வேறு அளவுகளில் இருப்பதனால் அதனைப் புரிந்துகொள்வது இலகுவானது அன்று.

**10. வாழ்க்கைக்கு வேண்டிய பூரணமான போதனை.**

அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண பரமாத்மா கூறும் போதனையில் மேற்குறிப்பிட்ட அந்த அம்சங்கள் எல்லாமே அடங்கியிருக்கின்றன. இதனாலேதான் கிருஷ்ண பரமாத்மாவின் அப்போதனை வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு பூரணமான போதனையாகத் திகழ்கின்றது.

*பொறுமை பெருந்தன்மைக்கு அணிகலன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ண பரமாத்மா அப்போதனையில் வாழ்க்கைக்கு வேண்டிய எதனையும் கூறாமல் விட்டுவிடவில்லை. அர்ச்சுனனது பிரச்சினை முழுமையான ஒரு பிரச்சினையாக இருந்தமையால் கிருஷ்ண பரமாத்மாவும் முழுமையான போதனையைச் செய்யவேண்டி இருந்தது. அவனது பிரச்சினை அவனது ஆளுமையின் ஒரு பக்கத்தில் இருந்து மட்டும் தோன்றியது அன்று. இங்கு, அர்ச்சுனனது பிரச்சினை முழுமையானது என்று கூறுமிடத்து அந்த முழுமை எதனைக் குறிக்கின்றது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**11. பிரச்சினையின் முழுமை.**

சமூக மட்டத்திலும், மனதின் மட்டத்திலும், ஆற்றல் மட்டத்திலும், விவேகத்தின் மட்டத்திலும் அர்ச்சுனனது முழு ஆளுமையையும் அவனது பிரச்சினை தழுவி நின்றது. அர்ச்சுனனது மனதில் உள்ள பிரச்சினைகளை ஓரளவு முன்னைய அத்தியாயங்களில் அவதானித்து இருந்தோம். மனித சமூகத்துக்கு அவன் நிறைவேற்ற வேண்டியிருந்த கடமை அப்படியான பிரச்சினைகளுள் ஒன்றாகும். அவன் அந்த யுத்தத்தில் ஈடுபடுவதனால் வரக்கூடிய விளைவுகள் பற்றிப் பலவிதமான சந்தேகங்கள் உடையனவாக இருந்தான். ஒழுக்க அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் அந்த யுத்தம் அழிவைத் தரக்கூடிய ஒரு பாவச் செயல் என்று அவன் எண்ணினான். அதுமட்டுமன்றி அதனால் அவனது ஆளுமை முழுமையும் சிதறடிக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் அவன் புத்திசுவாதீனம் அற்ற ஒருவனாகச் சிந்திக்க முடியாதவனாக இருந்தான். அதற்குமுன் அவனிடம் இருந்த ஆளுமை ஒழுங்கு அப்போது முற்றாகக் கலைந்து விட்டது. அவனது முழுமை அப்போது துண்டு துண்டாகப் போகும் நிலைக்கு வந்துவிட்டது. “ஆ! எனது உடல் நெருப்பாக எரிகிறது; கைகள் நடுங்குகின்றன; ரோமங்கள் நிமிர்ந்து நிற்கின்றன; தலை சுழலுகின்றது; மனதினால் சிந்திக்க முடியவில்லை; எனது தருக்கம் என்னைக் கைவிட்டுவிட்டது” என்றுகூற அப்போது ஆரம்பித்துவிட்டான். அப்படியான நிலைமையில் ஒருவனிடம் எஞ்சியிருப்பதுதான் என்ன? அவனிடம் இருந்த எல்லாமே போய்விட்டன அல்லவா? அப்போது அவன் முன்னர் தன்னிடம் இருந்த எல்லாவற்றின்மீதும் உள்ள கட்டுப்பாட்டை இழந்துவிட்டான். அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்னும் ஐந்து அடுக்குகளிலும் இருந்த அவனது ஆளுமை அவற்றின் ஆணிவேர்களிலேயே ஆட்டம் கண்டன. அவனது ஆளுமை என்ற முழுமையான கட்டடம் நடுங்கி உருக்குலைவதுபோன்று இருந்தது. அப்படியான ஒரு சூழ்நிலையில் எதனைப்பற்றியும் அவனால் எக்கருத்தைத்தான் வெளியிட முடியும்? அப்போது அவனால் எடுக்கப்படும் எந்த நோக்கும் தவறாகவே இருக்கும்; எச்செயலும் தவறானதாகவும் தடுமாற்றம் உடையதாகவுமே இருக்கும்.

**12. முழுமையான கடமை.**

ஆன்மிக சாதகன் ஒருவனுடைய விதியும்கூட அப்படியானது ஒன்றே. ஆன்மிகப் பாதையில் செல்ல எமக்கு உள்ள ஆன்மிக நூலும், பெரியதோர் வழிகாட்டி ஒளியும் பகவத் கீதையே என்று நாம் அதனைக் கற்கின்றோம். ஆன்ம விடுதலைக்குக் கடவுளைத் தேடும் ஒவ்வொரு சாதகனும் அதனை அப்படியான வெளிச்சம் தரும் ஆன்மிக நூலென்றே பிரதானமாகக் கருதுவான். அதனை ஒரு வெறும் வரலாறு மட்டும் என்றோ ஒரு கதை மட்டும் என்றோ நாம்

பதவி சிந்தனையைக் கெடுத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பது இல்லை. அது கற்பனை, கதை, இதிகாசம் என்ற போர்வைகளோடுதான் இருக்கின்றது. ஆனால், அதன் சாரமும், மையக் கருத்தும் எந்த ஒரு தனிநபரையும் சாராத தூய ஆன்மிகமே ஆகும். அதனாலேதான் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு "மனித சமூகத்துக்கு நீ நிறைவேற்றவேண்டிய ஒரு கடமை உண்டு; உனக்கே நீ நிறைவேற்றவேண்டிய ஒரு கடமை உண்டு; உலகத்துக்கு நீ செய்யவேண்டிய ஒரு கடமையும் உண்டு; உனது அந்தராத்மாவுக்கு நீ செய்ய வேண்டிய ஒரு கடமையும் உண்டு; எந்தப் பிரபஞ்சம் எங்கும் நிறைந்துள்ளதோ அது உனக்கு உள்ளேயும் இருப்பதனால் அதற்கு உரிய ஒரு கடமையும் உண்டு" என்று கூறுகின்றார்.

### 13. வர்ணாச்சிரம தர்மம்.

மனித சமூகம் பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. எம்மிடம் வர்ணாச்சிரமம் என்று அழைக்கப்படும் ஒரு தர்மம் உள்ளது. ஆனால், அதனை இன்று சாதி அமைப்புமுறை என்று தவறாகக் கூறுகின்றனர். அது சமூக வகுப்பே தவிரச் சாதி அமைப்பு முறை அன்று. சமூகத்தில் உள்ள வகுப்புக்கள் உயர்ந்தவை என்றும் தாழ்ந்தவை என்றும் வகைப்படுத்தப்படுவன அல்ல. ஆனால், அந்த வகுப்புக்களில் ஒவ்வொன்றும் மற்றவற்றோடு சேர்ந்து அத்தியாவசியம் ஒத்துழைக்கவேண்டும்.

### 14. பொருளாதாரம்.

சமூகத்தில் உள்ள ஒருவர் தன்னைப் பொருளாதார ரீதியாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. ஒருவரது பொருளாதார வாழ்வின் அடிப்படையை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கின்றோம். அதனை விளக்குவதற்கு எமக்குப் பெரிய விளக்க உரை ஏதும் தேவை இல்லை. ஆனால், உற்பத்தி, நுகர்வு என்ற இரண்டையும் தவிரப் பொருளாதார வாழ்க்கையில் வேறேதும் இல்லை. எனவே பொருட்களை உற்பத்திசெய்ய வேலை செய்வதும், அதை நுகரும்பொருட்டுப் பொருளாதாரப் பெறுமதியை உருவாக்குவதும் அத்தியாவசியமாகும். அவற்றால் மனித சமூகம் பொருளாதார ரீதியாக உடலைப் பேணிப் பிழைத்துக்கொள்ளும். அதற்காக நாம் கடுமையாக வேலைசெய்யவேண்டி உள்ளது. எனினும் எல்லோரும் ஒரே வேலையையே செய்யவேண்டும் என்பது அதன் அர்த்தம் அன்று. (தொடரும்...

### செல்வச் சந்நிதியுறையும் செல்வ வடிவேல்!



நாடிவரும் அடியார்க்கு நல்வாழ்வு தந்திடும்
நான்மறை புகழ்ந்தேத்தும் ஞானவடி வேல்!
கோடி சூரியன்போல் பிரகாசித்து நின்றிடும்
கோலமா மஞ்ஞைகுலவும் கூர்வடி வேல்!
தேடிவந்து தொழுவார் கொடியவினை தீர்த்திடும்
செல்வச் சந்நிதி உறையும் செல்வ வடிவேல்!
கூடிநின்று பஜனைபாட ஓடிவந்தருளிடும்
சூரனைச் சங்கரித்த சுடர்வடிவேலே சரணம்!

-இராசையா ஸ்ரீதரன்-

*நேர்மையாக வாழ்வதே மனிதனுடைய கடமை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருமே இது குறித்து வருந்தவேண்டாம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

திருச்சுழியில் பெருஞ்சுழியாக விளங்கிய மாபெரும் வலஞ்சுழியாம் பகவான் ஸ்ரீ ரமணர் அவர்கள், சென்ற நூற்றாண்டில் உலகமதை வழிநடாத்திச் சென்ற ஆன்மீக ஒளிவிளக்கு என்று கூறுவதிலும் பார்க்க உலகம் உள்ளவரை அவரது போதனைகளும், வாழ்ந்து காட்டிய பாதையும் கலங்கரை விளக்காக நிச்சயம் திகழும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.



பகவான் ஸ்ரீ ரமணரைப்போல உலகத்தில் இறங்கி வாழ்ந்த துறவி வேறு யாருமே இருக்க முடியாது என்று கூறலாம். கௌபீனம் அணிந்து குருவருளையும், திருவருளையும் ஒருங்கே மானிடர்க்கு வழங்கியவர் ரமணர்.

## பிறப்பு

மீனாட்சி ஆட்சிபுரியும் மதுரையின் கிழக்கே அமைந்த அழகான திருப்பதி, திருச்சுழி என்ற இடம். தந்தை பெயர் சுந்தரம் ஐயர். தாய் பெயர் அழகம்மை. 1879 மார்கழி முப்பதாம் திகதி ரமணர் பிறந்தார். இவருக்குப் பிள்ளைத் திருநாமம் வேங்கடராமன். 1895இல் தந்தையார் காலமானார். நாகசாமி, நாகசுந்தரம் இருவரும் ரமணரின் சகோதரர்கள். தந்தையாரின் மரணத்திற்குப் பின்னர் சிறிய தந்தையாரின் அரவணைப்பில் வேங்கடராமன் பருவநிலையை எய்தினார்.

## விளையாட்டு

ஆண் பிள்ளைகள் பொதுவாகவே விளையாட்டில் அதீத விருப்பம் கொள்வது இயற்கையே. ரமணரும் இதற்கு விதிவிலக்கல்ல. விளையாட்டில் இருந்த அக்கறை படிப்பில் இல்லாதிருந்ததினால் குடும்பத்தினர் வருத்தம் கொண்டனர். ரமணர் ஏனையவர்களின் கோபங்களைச் சம்பாதித்துக் கொண்டார்.

## மரணபயம்

1896ஆம் ஆண்டு ஆடிமாதம் ஒரு கனத்தநாள். வீட்டு மாடியில் இருந்தபோது உள்ளம் உணர்வோடு இருக்க, உடல் விறைத்து மரத்துப்போனது. ரமணருக்கு மரண பயம் ஏற்பட்டது. உடலுக்கும் அப்பால் உள்ள ஒரு உள்ளார்ந்த ஆற்றல் ஒன்றுதான் உடலை வேறுபடுத்துவதை உணர்ந்தார். அந்த சக்தியே மனதுக்குச் சுகமளிக்கிறதென்பதை உணர்ந்தார். ஊனினையுருக்கி உள்ளொளி பெருகிட மரணபயம் நீங்கிற்று. அத்தோடு சாதாரண வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணியவராய் அதிலிருந்து விலகி, சமாதி வாழ்வு வாழ ஆசைப்பட்டார். அவரது ஆசையை நிறைவேற்றும் முகமாகச் சிறிய தந்தையாரின்

*தீயோர் நேசத்தைவிட தனிமை மேல்னது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஒருவர் திருவண்ணாமலையிலிருந்து வந்து அற்புதங்களையும், அருணாசலேஸ்வரர் மகிமையையும் வாயூற இனிக்கப் பேசினார். இதனை உற்றுக்கேட்ட ரமணருக்கு, துறவின்மீதும், பிரம்மச்சாரிய வாழ்வின்மீதும், அருணாசலேஸ்வரர்மீதும் தீராத காதல் ஏற்பட்டது. அருணா சலேஸ்வரரும் ரமணரை ஆட்கொள்ள நினைத்தார்போலும். ரமணர் நினைத்ததும் இறைவன் எண்ணியதும் எந்தவித இடையூறின்றி ஒன்றையொன்று கௌவிக் கொண்டது. மரணபயம் ரமணரை விட்டோடியது. திருவண்ணாமலையில் இருந்து அழைப்பு வந்தாற்போல ரமணர் ஆயத்தம் செய்தார். புறப்படப் பக்குவம் செய்தார்.

## புறப்பாடு

தன்னை மறந்த ரமணர் திருவண்ணாமலை செல்ல, முழுமனதோடு புறப்படத் தலைப்பட்டார். அழைப்பும் கிடைத்தது. கடிதம் ஒன்று எழுதினார்.

"எனது தந்தையாரின் அழைப்பின்பேரில் அவரைத்தேடி யான் திருவண்ணாமலைக்குப் புறப்படுகின்றேன். நல்லதோர் கடமைக்கு என்னைத் தயார் பண்ணிவிட்டேன். யாரும் இது குறித்து வருந்தவேண்டாம்'' என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரு கடிதத்தை எழுதுவதற்கு ரமணருக்கு ஏற்ற பக்குவத்தை இந்த உலகமே கற்றுக்கொடுத்தது. எதுவுமே நிலையற்றது என்பது அவருக்குச் சின்ன வயதிலே ஏற்பட்டுவிட்டது பெரும் பாக்கியமே! துறவுக்கும் பிரம்மச்சாரியத்திற்கும் அடிப்படையானது தன்னை மறத்தலாகும். தன்னை மறந்தால் அதுவே தவமாகும். கௌபீனம் ஒன்றின்மூலம் உடலை வெறுத்து பிரம்ம ஒளியை வெளிப்படச் செய்தார். ஸ்ரீ ரமணரின் முகத்தில் ஆன்மீக ஒளி பீறிட்டது. உடலெங்கும் ஆன்மீக விளைச்சல். ஆசையென்பது இம்மியளவுகூட இல்லை. தன்னாமத்தைக் கூட அவர் மறந்து அண்ணாமலைக்கு நடந்து சென்றார்- களைத்தார்- விழுந்தார்- நொந்தார்- காயப்பட்டார்- உடலை வெறுத்தார். உறவுகளை வெறுத்தார். உணர்வுகளை வெறுத்தார். ஒரு தடி! ஒரு சிரட்டை! ஒரு கௌபீனம்! (கோவணத் துண்டு) வாயில் புன்சிரிப்பு மட்டும்!

## இது எப்படி?

இன்று நாம் சின்னச் சுகங்களுக்காகவும், சின்னச்சின்ன ஆசைகளுக்காவும், சின்னச் சின்னப் பதவிகளுக்காகவும், சின்னச் சின்னப் புகழுக்காகவும் இந்த உலகில் விலையாகிக் கொண்டு இருக்கின்றோம். தனியாகவும், பரபரப்பின்றியும், ஜனரஞ்சகமின்றியும், பதவியின்றியும், பட்டமின்றியும், விருப்பு வெறுப்பின்றியும் வாழ எம்மை எப்போது தயார்படுத்துகிறோமோ அப்போதுதான் இறைவனும் எம்மோடு சேர்ந்து பயணிப்பான்! இப்போ நாம் என்ன செய்கிறோம் என்றால், இறைவனை எமக்குப் பின்னால் வருமாறும், நமக்கு முன்னே நாமே தலைமை தாங்கியும் அவனை அழைத்துச் செல்கின்றோம். இதற்குப் பெயர்தான் முனைப்பு. நான் பொறுப்பேற்ற பின்னர் நான் செய்தவற்றைப் பட்டியலிட்டு விளம்பரம் செய்தலாகாது. இலங்கையில்- கோவிலுக்கு உதாரணம் நல்லூர்தான்! யாருடைய பெயரும் யாருக்குமே தெரியவே தெரியாது. மூலமூர்த்தியை முதன்மையாகப் பிரபல்யப்படுத்தவே திருமுறைகள் எமக்குப் பாடம் சொல்லித் தருகின்றன. பட்டத்தில் எப்போது கைவைக்கின்றோமோ அது பறக்கவே செய்யும். எமது சமயத்திற்கு விளம்பரமில்லாத ஒரு தலைமை கட்டாயம் தேவை. ஒருவரை உதாரணமாகக் கூறுங்கள் என்று கேட்டால் எவருமே சரியான பதிலைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமாட்டார்கள். காரணம் எனக்குத் தெரிந்த வரையில் பெரும்பாலும் யாரையுமே குறிப்பிடமுடியாதுள்ளது. எங்கள் சமயத்தில் அடி மட்டத்திலுள்ள ஒரு கோவிலுக்குச் சென்று அவர்களுடைய சடங்குகளில் கலந்து சிறப்பித்த ஒரு தலைவரை நாம் காணமுடியாதுள்ளது. அந்த அடிமட்டத்திலேதான் பல சமயக் கோட்பாடு வளர்கிறது. மனத்தில் மாற்றம் ஏற்பட்டா லன்றி, கட்டிடங்களாலும், சாப்பாட்டாலும் எந்தவித மாற்றமும் வெற்றிபெறப் போவதில்லை.

**பரம்பொருள்**

மேற்சொல்லப்பட்ட விடயங்களுக்கு அப்பால் ஸ்ரீ ரமண பகவான் எவரையுமே உயர்வு தாழ்வு உச்சம் என்று எண்ணியதும் இல்லை. பார்த்ததும் இல்லை. பேதம் அவரிடம் குடிகொண்டதுமில்லை. இதனால் பரம்பொருள் ரமணரிடம் விரும்பிக் குடிகொள்ள, ரமணரும் ஞானம் கொண்ட அவதார புருஷரானார். 1896 புரட்டாதி முதலாந் திகதி திரு வண்ணாமலையையடைந்து, ஒரு முக்கியமான செய்தியை அந்த இறைவனிடத்தே கூறினார். அந்தச் செய்தி என்னவாக இருக்கும்? வேறொன்றுமல்ல இதுதான்!

"அப்பா! உன்னிடம் நான் வந்துவிட்டேன்! இனி எனக்கு எல்லாமே நீதான்" என்றதும் ஒரு அசரீரி. "வா மகனே வா" என்று கருவறையிலிருந்து ஒலித்தது. அந்த மகிழ்வோடு தியானத்தில் ஆழ்ந்தார். மணித்தியாலங்கள் நாட்களாயின. அவ்வப்போது எழுந்து நீராடுவார். யாராவது உணவு கொடுத்தால் உண்ணுவார். சிலவேளைகளில் உண்டதையும் மறப்பார். மலைக் குகைகளில் உறங்குவார். தியானிப்பார். குளவிகள் தொடக்கம் யானை, புலி, கரடி, சிங்கம், பாம்பு என எதற்கும் அஞ்சாமல் தியானம் இருப்பார். சிலர் இவருக்குத் தொந்தரவுகள் செய்தபோதும் சளைக்காமல் தியான சொரூபியாகத் திகழ்ந்தார். கல்லால் எறிந்தும் சொல்லால் எறிந்தபோதும் புண்களினால் ரமணர் வருந்தியதே இல்லை. மாறாக உடலைத் தூர வைத்து உடலால் நான் ஒருபோதும் வருந்தமாட்டேன் என்றார். இதனால் கல் எறிந்தவர்கள் கூடக் கைகூப்பினார்கள். சொல்லால் கணை வீசியவர்கள்கூட நில்லாமல் பின்வாங்கி ஓடினார்கள். பரம்பொருள் பக்கத்துணையாக இருந்தபடியால் இரும்பென வந்த வர்கள் கரும்பென மாறினர். சரியான ஒரு "குரு" கிடைத்ததை எண்ணி அடியார்கள் திரண்டனர். ரமணரின் பார்வை ஒன்றே பக்தர்களை நல்வழிப்படுத்தியது. ரமணர் கௌபீனத் தோடு காட்சியளித்தாலும் அவரிடம் திருவருள் சுபீட்சம் மேலோங்கியது. சுகம் விளைந்தது. அதனால்,

அருணாசல பஞ்சாட்சரம், அருணாசலப் பஞ்சரத்தினம்,
அருணாசல உபதேச சாரம், அருணாசல உபந்நியாசம்,
அருணாசல அட்சர மணிமாலை, அருணாசல அற்புதங்கள்
போன்ற பல நூல்களை அருளியுள்ளமை அற்புதந்தான்.

வழமைபோல, மன்னாரில் அம்மை அப்பன் திருக்கேதீஸ்வர மடத்திலும் 24.02.2017 அன்று ஸ்ரீ ரமணரின் குருபூஜை சிறப்பாக நடந்தேறியது. 1950.04.16ஆம் திகதி ரமணர் சமாதி அடைந்தாலும் அவரின் ஜோதி அதோ வானில் பிரகாசமாக இன்றும் ஜொலிக்கிறது. அதுவே எம் சித்தத்துள் தித்திக்கும் தேனாக இனிக்கிறது. நீங்கள் சாப்பிட்டால்த்தானே அது இனிக்கும்! இது உடலுக்கு அல்ல!

*ஒன்றும் தெரியாதவனுக்கு எதிலும் சந்தேகமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

விதுரர் சொன்ன பிறப்புக் கதையைக் கேட்ட திருதராஷ்டிரன், "விதுரா! தத்துவத்தை தரிசனம் செய்த உன்னால் ஆச்சரியமான இந்தக் கதை சொல்லப்பட்டது. உன்னுடைய வாக்கு என்னும் அமுதத்தை மீண்டும் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது" என்றான்.

சாமர்த்தியசாலிகள் எதைக் கேட்டதால் குடும்ப வாழ்விலிருந்து விடுபடுகின்றார்களோ. அப்படிப்பட்ட இந்த வழியை விரிவாக மறுபடியும் சொல்கிறேன் கேளுங்கள். மன்னா! நீண்ட வழியில் பயணம் செய்யும் மனிதன், எப்படி ஒவ்வொரு இடத்திலும் ஓய்வெடுப்பதற்கு இடத்தை ஏற்படுத்திக் கொள்கிறானோ அதுபோல மூடர்கள் சம்சாரப் பரம்பரையில் கர்ப்ப வாசம் செய்கின்றார்கள். கல்விமான்களோ, சம்சாரத்திலிருந்து விலகுகின்றார்கள். அதனால்த்தான் தத்துவத்தை அறிந்த மக்கள் இந்த வழியாகவே செல்கின்றார்கள். சம்சாரம் என்பதை நுழைய முடியாத காடு என்று வித்வான்கள் சொல்கிறார்கள். அழிந்து போகத் தகுந்த, அசைபவைகளுக்கும் அசையாதவைகளுக்கும் இந்த உலகமானது ஒரு நீர்ச்சுழல். கல்விமான்கள் அதில் ஆசைப்படக்கூடாது.

மனிதர்களுக்கு உடம்பையும், மனதையும் அடுத்து கண்ணில் படும்படியாகவும் மறைவாகவும் உள்ள நோய்கள்தான் கொடிய மிருகங்கள். தங்களுடைய வினைகள் என்னும், அந்தப் பெரிய கொடிய விலங்குகளால் தினமும் துன்பத்தை அடைகின்றவர்களும், இதனால் விரைவில் இறந்துபோகும் நிலையை அடைபவர்களும் சம்சாரத்தில் (குடும்ப வாழ்வில்) வெறுப்பை அடைவதில்லை.

நோய்கள் அந்த மனிதர்களை விட்டாலும், பலவிதமான ஆசைகளாலும், உருவங்களாலும், சுவைகளினாலும் தொடுதல், வாசனைகளாலும் நான்கு பக்கங்களிலும் கட்டில்லா பெரிய சேற்றில் மூழ்கும் அந்த மனிதனை அழகை அழிக்கும் முதுமை மூடுகிறது. நாளடைவில் பகல் இரவு, வளர்பிறை தேய்பிறை, மாதங்கள், இரண்டு மாதங்கள் சேர்ந்த பருவங்கள், ஆண்டுகள் முதலானவை மனிதனுடைய உருவத்தையும் ஆயுளையும் கவர்ந்துகொள்கின்றன. இவை காலத்தின் விதிகள். இவற்றை அறியமுடியாதவர்களே மூடர்கள் ஆவார்கள்.

எல்லா உயிர்களையும் அவற்றின் கர்மவிதிப்படி பிரம்மதேவர் உண்டாக்குகிறார். உயிர்களுக்கு உடம்பு இரதம்; புத்திதான் சாரதி. இந்திரியங்கள் குதிரைகள். மனது கடிவாளம். எவன் ஓடுகின்ற குதிரைகளின் போக்கை அனுசரித்து ஓடுகிறானோ அவனே இந்த சம்சார சக்கரத்தில் சுழலுகின்றான். எவன் அந்தக் குதிரைகளை புத்தியால் அடக்குகிறானோ, அவன் திரும்புவதில்லை- அதாவது அவனுக்கு மறுபிறப்பு இருப்பதில்லை. சம்சார சக்கரத்தில் வட்டமாகச் சுழன்று கொண்டிருந்தாலும், யார் மயங்குவதில்லையோ அவர்கள் மறுபடியும் சுழல்வதில்லை. சம்சாரத்தில் அதிசயம் (பிரமிப்பு) காண்பவர்களுக்கு இந்தத் துக்கம் உண்டாகிறது. கற்றறிந்தவன், இதை நிவர்த்தி செய்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

பொறுமை என்ற கவசத்தை எப்போதும் அணிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் புறக்கணிக்கவே கூடாது. புறக்கணித்தால் இது, நூறு கிளைகள் கொண்டதாக வளர்கிறது.

இந்திரியங்களை அடக்கி, குரோதத்தையும் கருமித் தனத்தையும் நீக்கி, மகிழ்ச்சி உள்ளவனாகவும் உண்மை பேசுபவனாகவும் எவன் இருக்கின்றானோ, அவனே சாந்தியை-அமைதியை அடைகின்றான்.

தீயபுத்தி உள்ளவர்கள் எதனால் மோகத்தை அடைகிறார்களோ அதை, யமனுடைய ரதம் என்று சொல்கிறார்கள். நீங்கள் எதை அடைந்தீர்களோ (துக்கத்தை) அதை அவனுமடைவான். ஆசைதான் அனைத்து துக்கத்திற்கும் மூலமாகும்.

அரசு, நண்பர்கள், பிள்ளைகள் முதலானவர்களுடைய அழிவானது; மிகுந்த துயரங்களுக்குக் காரணம். நல்லவன், அவனுடைய துயரங்களுக்கு மருந்தைத் தேட ஆரம்பிக்க வேண்டும்; மனதை அடக்க வேண்டும். இலட்சியத்தை அடைய "அறிவு" எனும் உயர்ந்த மருந்தைப் பெற்றுத் துன்பம் எனும் பெரிய நோயைப் போக்கிக்கொள்ள வேண்டும். மனிதனைத் துயரத்திலிருந்து விடுவிப்பது உறுதியான மனமேயாகும். பலமோ, பொருளோ, நண்பனோ துயரத்திலிருந்து விடுவிக்க முடியாது.

ஆபத்தில் உதவும் நட்பு, மனதை அடக்குதல், தீயவற்றை விடுதல் இந்த மூன்றும் பிரம்ம உலகத்தை அடையச் செய்யும் குதிரைகள். ஒழுக்கம் என்னும் கடிவாளம் கொண்டு மனம் எனும் தேரில் நிலைபெறுபவன் எவனோ, அவன் மரணபயத்தை விட்டுப் பிரம்ம உலகத்தை அடைகிறான்.

எல்லா உயிர்களுக்கும் அபயம் கொடுப்பவன் எவனோ, அவன் அழிவில்லாத பரம்பொருளின் உத்தமமான இடத்தை அடைகின்றான். அபயம் கொடுப்பதால் உண்டாகும் பலனை, ஆயிரம் யாகங்களும் கொடுக்காது. உபவாசங்கள்கூட (விரதம்) அந்தப் பலனைத் தராது.

உடலுக்கு ஆத்மாவைவிட மிகுந்த பிரியமானது வேறொன்றுமில்லை என்பது நிச்சயம். மரணமென்பதை எல்லா உயிர்களும் வெறுக்கிறது. கல்விமான்கள் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்ட வேண்டும். பலவிதமான தீய வழிமுறைகளைக் கொண்டவர்கள், நுணுக்கமான சிந்தனை இல்லாதவர்கள், சோம்பேறிகள் செய்வதறியாது திகைக்கிறார்கள். நுணுக்கமான சிந்தனையுடையவர்கள் பிரம்ம இராச்சியத்தை அடைகிறார்கள்.

மன்னா! நீங்கள் இந்த விபரங்களை அறிந்து, யுத்தகளத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கு உத்தர கிரியைகளை- இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்கு செய்யுங்கள். நீங்கள் அதனால் பலனை அடைவீர்கள் என்று தத்துவங்களை விரிவாக எடுத்துச் சொல்லி, விதுரர் திருதராட்டிரனைத் தேற்றினார்.

மகாபாரதக் கதையில் புதைந்து கிடக்கும் விதுரநீதி எனும் பகுதியை முடிந்த வரை இலகுபடுத்தி ஞானச்சுடர் வாசகர்களுக்கு கடந்த சுமார் இரண்டு ஆண்டுகளாக எழுதி வந்துள்ளேன். இதற்கு சந்நிதியானின் திருவருளே காரணமாகும். மகாபாரதத்தில் திருதராட்டினனுக்கு விதுரர் கூறுவதாக உள்ள இந்தப் பகுதி அனைவருக்கும் பொதுவான தத்துவமாகும். இத்தொடரில் சொன்னதைத் திரும்பத் திரும்ப எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு காரணம் ஒரு உண்மையை தகுந்த இடத்தில் மீண்டும் மீண்டும் சொல்வதில் தவறில்லை என்று கருதினேன். வாசகர்கள் இது பொறுப்பார்கள் என நம்புகிறேன்.

இதிகாசங்கள், புராணங்கள் என்பவை நமது சொத்துக்களாகும். இதிகாசங்கள் பல தர்மங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைச் சொல்பவையாகும். புராணங்கள்

*மருந்தைவிட மனக்கட்டுப்பாடே வியாதியை நீக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தர்மத்தை மட்டும் சொல்வதற்கு எழுந்தவையாகும். இந்த வகையில் மகாபாரதம் போதித்துள்ள தத்துவங்களில் சாரமாக அமைவது விதுரநீதியாகும். வழமைபோல காலத்திற்கு உகந்தவற்றை மட்டும் கருத்திற் கொண்டு எழுதியுள்ளேன். முருகன் அடியார்கள் (ஞானச்சுடர் வாசகர்கள்) அடியேனின் பிழைகளைப் பொறுத்து நல்லவற்றை ஏற்பார்கள் என நம்புகிறேன். சந்நிதியான் ஆச்சிரமம் செய்துவரும் அரும்பணிகள் எண்ணிலடங்காதவையாகும். இப்பணிகளில் அடிமட்டத் தொண்டனாக இருப்பதில் மகிழ்வடைகிறேன். மீண்டும் ஒரு நெடிய தொடரில் வாசகர்களாகிய உங்களுடன் உரையாடுவேன். (முற்றும்)

---

## நேரம் தவறாமை

### காகம் கற்றுத் தந்த பாடம்

பாபு ஆறாம் ஆண்டில் படிக்கும் ஒரு மாணவன். ஒரு நாள் கா... கா... என்று கத்திக் கொண்டு காகம் ஒன்று பறந்து வந்து அவன் வீட்டின் அருகிலுள்ள மரக்கிளையில் அமர்ந்தது. பாபுவுக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க ஆசை, பிடிக்க ஓடினான். உடனே அது பறந்து சென்றது. ஏமாற்றத்துடன் திரும்பி வந்து காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து அங்கும் இங்கும் நடந்தது. பாபு தான் தின்று கொண்டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்துக்குப் போட்டான். காகம் வேகமாக ஓடி வந்தது. வடையைக் கொத்திக்கொண்டு பறந்தது. பாபுவுக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. வெகுநேரம் காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை. இரண்டாம் நாள் அந்த இடத்துக்கு, அதேநேரத்துக்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவுக்குள் நடந்து வந்தது. பாபு தன்னிடம் இருந்த நிலக்கடலையை காகத்தின்முன் வீசினான். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித் தின்றது. பாபு அருகில் சென்றதும் உடனே பறந்தது. மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் பாபுவின் அருகில் வந்தது. பாபுவின் கையை ஆவலோடு பார்த்தது. பாபு வீட்டுக்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டான். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது. பாபு காகத்தைப் பிடிக்க எழுந்தான். காகம் பறந்தோடியது. ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்துக்கு வந்தது. பாபுவும் காகமும் நண்பர்களானார்கள். பாபு சொல்வதைக் காகம் புரிந்துகொண்டதுபோலத் தலையை ஆட்டும்.

சரியான நேரத்துக்கு வரும் காகத்தைக் கண்டு பாபு வியந்தான். காகத்தால் எப்படி முடிகிறது? மணிக்கூடு இல்லை, பேசவோ, எழுதவோ தெரியாது. ஆனால், சரியான நேரத்துக்கு அந்தக் காகம் எப்படி வந்து போகிறது என்று வியந்தான். தனது நண்பனான காகத்தைப்போல, தானும் சரியான நேரத்துக்குப் பாடசாலை செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக்கொண்டான். சரியான நேரத்துக்குப் பாடசாலைக்குச் சென்று அனைத்தையும் முறையாகச் செய்யும் பாபுவை அனைவரும் பாராட்டினார்கள்.

நேரத்தைத் தவறவிடுவது, வாழ்க்கையை தொலைத்துவிடுவதற்குச் சமம். “காலம் கண் போன்றது. கடமை பொன் போன்றது” என்பது பழமொழி. அதற்கேற்ப நாம் காலத்தின் அருமையை உணர்ந்து செய்யும் வேலையை சிறப்பாகவும், விரைவாகவும், சரியான நேரத்திலும் செய்யவேண்டும்.

*சிறந்த ஆற்றல் மனித குலத்தை உயர்த்துகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரடி சாயிபாபா

– சி. விஜயராணி அவர்கள் –

தர்மங்கள் தாழும்போதும், அதர்மங்கள் ஓங்கும்போதும் இறைவன் பல ரூபங்களில் உலகில் அவதரித்து, தர்மத்தை நிலைநாட்டி மானிடத்தை உய்விக்கிறார். இந்த அவதாரங்களில் சீரடி சாயி பாபாவின் அவதாரமும் மிக முக்கியமானதாகும்.



இந்தியாவில் மகாராஸ்டிரா மாநிலத்தில் உள்ள அகமதாபாத் மாவட்டத்தில், சாயி பாபா ஒரு சின்னஞ் சிறு குக்கிராமமான சீரடியில் 16 வயது நிரம்பிய வாலிபனாக, கடவுளின் அவதார புருஷனாக பாமர மக்களின் முன்னிலையில் காட்சி அளித்தார். சீரடி மிகவும் எளிமையான மக்கள் வாழும் இடம். அங்கு ஒரு வேப்பமரம், மசூதி, ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பல சிறுசிறு கோயில்கள் அருகாமையில் இருந்திருக்கின்றது. சாயி பாபா 1854ஆம் ஆண்டு வேப்பமரத்தடியில் தியான நிலையில் அமர்ந்திருந்த காட்சியை மக்கள் பார்த்து வியந்தனர். கடும் குளிர், வெப்பம், பகல், இரவு எந்தச் சூழ்நிலையிலும் நல்ல அழகும், சுறுசுறுப்பும் உள்ளவராகவும், எளிமையுடனும் காட்சி அளித்தார். இந்தக் காட்சி மக்களுக்குப் புரியாத புதிராகவும் இருந்து வந்தது.

சில நாட்களிலேயே அந்த ஊர் மக்கள் அவரை "சா" என்றழைத்தார்கள். "சா" என்றால் கடவுள் என்று பொருள். அம்மக்கள் பாபாவை நம் காலத்தில் தோன்றிய அவதார புருஷன் என்று போற்றினார்கள். ஆரம்ப காலத்தில் சாயி பாபா சில வீடுகளில் பிச்சை கேட்பதை வழக்கமாக வைத்து வாழ்க்கையை ஓட்டினார். சில வீடுகளில் பிச்சை கேட்டால் "இல்லை" என்று ஒருசில பெண்கள் கூறி விடுவார்கள். அவர் அவற்றைப் புரிந்துகொண்டு, உன் வீட்டில் இன்ன சமையல் என்பதையும் ஞான நிலையில் கூறிவிடுவார். அப்பெண்கள் வியந்துபோய் பாபாவைத் தேடிவந்து உணவு அளிக்க ஆரம்பித்தனர்.

அதன் பின்பு "ஒரு சற்புத்திரரின் கை அன்னபூரணியின் அட்சய பாத்திரத்தைத் திறந்து விடும்" என்பதற்கிணங்க, சீரடி பாபா தாம் வைத்திருந்த மண்பானையில் சமைத்து அவரிடம் எத்தனை பேர் வந்தாலும் உணவு பரிமாற போதுமானதாய் வளர்ந்து கொண்டிருக்கும்.

சாயி பாபாவுக்கு குழந்தைகளிடம் விளையாடி மகிழ்வதில் அதிக ஆர்வம். நகைச்சுவையுடன் பேசி சிரிக்க வைப்பார். சாயி பாபா தன் பக்தர்களின் ஆனந்தமயமான பாடல்களைக் கேட்டு களிப்பார். ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து அவர்களை மகிழ்வித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளை வளர்த்தார். அவர் இசையின்மூலம் தெய்வ அனுபவம் பெற்றார். நடராஜர் போல் உலகங்களை ஆட்டிவைக்கும் நடனத்தின்மூலம் தன்னுள் ஐக்கியமாகி விடுவார்.

சீரடி சாயி பாபா துன்பப்படுபவர்களுக்கு ஒரு தாயைப்போல் இருந்து தம் அன்பையும் ஆதரவையும் அளித்து வந்தார். தொழு நோயாளியின் கால் புண்ணைக்கூடக் கழுவிச் சிகிச்சை அளித்தார்.

**சீரடி பாபா செய்த அற்புதங்கள் சில...**

தண்ணீர் இல்லாத கிணற்றில் தாமரை இதழ்களை, சீரடி ஊர் மக்களிடம் போடச் சொன்னார். அதற்கிணங்க ஊர் மக்களும் அவ்வாறு செய்து பூஜித்தனர். அவ்வேளையில் அந்தக் கிணற்றில் நீர் ஊற்று வந்து அவ்வூர் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. வரட்சி நிலவிய அந்த சீரடி மண் பாபாவினால் பசுமையானது.

அந்தணனின் வெண்குஷ்டம் நீக்கினார்.

மலட்டெருமையை பால் சொரிய வைத்தார்.

தண்ணீரில் விளக்கேற்றினார்.

பதி இறந்த பத்தினியின் கணவனை உயிர்ப்பித்து துயர் துடைத்தார்.

கங்காதரனின் மகனை உயிர்ப்பித்தார்.

தாமு என்பவருக்கு ஜாதகத்தில் கோளாறும், புத்திர பாக்கியம் இல்லை என்று வருந்தி அழுதபோது மாங்கனிகள் கொடுத்தனுப்பினார். சில நாட்களில் தாமுவிற்கு சந்தான பாக்கியம் கிடைத்தது.

கொடிய நஞ்சுகொண்ட சர்ப்பம் தீண்டிய சாமாவைக் காத்தருளினார்.

விதியை மீறும் அற்புத அருள் பாபாவிற்கு இருந்ததால் அவர் செய்த லீலைகள் எண்ணுக்கணக்கற்றவை. மேலும் பாபா ஜாதி மத பேதம் அற்று சாஸ்திரங்கள், கீதை, குரான் ஆகியவற்றைப் பற்றி முழுவதும் அறிந்து வைத்திருந்தது பெரும் பண்டிதர்களைக்கூட ஆச்சரியத்தில் மூழ்கச் செய்வதாய் இருந்தது.

துவாரகமாயி தர்பாரில் பாபா வீற்றிருந்ததைப் பார்த்த மக்கள் சாய் மகராஜ் என்று போற்றி வாழ்த்தி வழிபட்டனர். அனைத்து நோய்களுக்கும் மக்கள் விபூதியை அருமருந்தாகக் கருதி எடுத்துக்கொண்டனர். நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாபா மூட்டிய நெருப்பில் இருந்து எடுக்கப்படும் சாம்பல்தான் அந்த விபூதி. மகாராஜாபோல பாபா தன் பக்தர்களுடன் துவாரகமாயிலிருந்து சாவடிக்கு ஊர்வலமாக செல்வது அற்புத காட்சியாய் இருக்கும்.

1918ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் திங்கட்கிழமை 18ம் நாள் சீரடி கிராமத்திற்கு பெரும் துயரநாள் ஆகும். ஆயிரமாயிரம் பக்தர்களுக்கு விபூதி கொடுத்து உபதேசங்களைச் செய்து பேருதவியாய் விளங்கிய பாபா அன்று சமாதி அடைந்தார். அன்றுமுதல் அவர் ஆத்மா அங்கு நின்று நம்மைக் காத்து ரட்சித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீரடி சாயி பாபா சமாதி அடைய முன் பதினொரு உறுதி மொழிகளை வழங்கினார்.**

01) சீரடியில் காலடிபடும் பக்தனுக்கு வரும் ஆபத்து விலகிவிடும்.
02) என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துக்கங்களையும் போக்குவேன்.
03) இவ்வுலகை விட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடோடி வருவேன்.
04) திடபக்தி, நம்பிக்கை, விசுவாசத்துடன் யாசிப்பவன் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.
05) இன்றும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுதும் உணரவும். இதனை சத்தியம் என்று அனுபவம் பெறுவீர்.
06) என்னைச் சரணடைந்து வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்குக் காண்பியுங்கள்.
07) பக்தன் என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணருகிறானோ, அப்படிப்பட்ட அனுபவங்கள் அவனுக்குத் தருவேன்.
08) எப்பொழுதும் உங்கள் சுமைகளை நான் சுமக்கிறேன். என் வாக்குப் பொய்யாவதில்லை.
09) நீங்கள் கேட்பது எல்லாம் நான் கொடுப்பேன். என் உதவியையும் அருளையும் அள்ளித்தர நான் காத்திருக்கின்றேன்.
10) பக்தியுடன் என் மொழிகளை மனதில் ஏற்பவனுக்கு நான் கடன்பட்டவன் ஆவேன்.
11) என் திருவடிகளை அடைந்த பக்தன் பெரும் பாக்கியவான் ஆவான்.

**சாயி பாபாவின் அன்பு மொழிகள் சில...**

01) நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருக்கிறேன். உங்கள் இதயமே என் இருப்பிடம்.
02) என்மீது உங்கள் சுமைகளை வையுங்கள். நான் நிச்சயமாக அதைத் தாங்கி உங்களுக்கு உதவுவேன்.
03) உடலால் உலகத்துக் கடமைகளைச் செய்யுங்கள். மனதை கடவுளுக்கு அளித்து விடுங்கள்.
04) முதலில் பசியோடு இருப்பவர்களுக்கு உணவு கொடுத்து பின்பு நீ உண்ணுவாயாக. அதுவே சிறந்த தர்மம்.
05) ஒருவருக்கொருவர் அன்பாக இருந்தும் சேவை செய்தும் நாம் மகிழ்வுடன் இருப்போம். அப்போது உலகமும் மகிழ்ச்சியாக இருக்கும்.
06) அகங்காரம் மிக்கவனுக்கு குருவின் போதனைகள் கூடப் பயனற்றவையே. அதனால் முதலில் அகங்காரத்தை ஒழியுங்கள்.
07) பேராசையும் கடவுளும் எதிரெதிர் துருவங்கள். எங்கே பேராசை நிலவுகிறதோ, அங்கே கடவுள் இருப்பதில்லை. பேராசையை ஒழியுங்கள்.
08) மனிதனின் உண்மையான இலட்சியம் மோட்சமே ஆகும். மற்ற அனைத்தும் பயனற்றவையே. மோட்சம் என்றால் சொர்க்கம் அல்ல; வேறு உலகங்களும் அல்ல. அது சூட்சுமமானது. கண்ணுக்குத் தென்படாத பிரபஞ்சத்தின் உற்பத்தி மையம். அதுவே சுத்த அழிவற்ற நிலையும் ஆகும்.

*மனிதன் தன் அகங்காரத்தினால் குருடன் ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) தத்துவங்களைக் கற்று விவாதங்களில் பிறரை ஏளனம் செய்து தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது விவேகமாகாது. அவர்கள் விவேகிகளும் அல்லர். அவர்களால் பிரம்ம ஞானத்தை அடைய முடியாது. இதயத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே ஞானத்தை அடையும் வழி.

10) வைராக்கியம் என்பது என்ன? இந்த உலகச் செல்வங்களையோ மறு உலகச் செல்வங்களையோ, வேறு எந்த சிறந்த பொருளையோ சிந்திக்காது இருப்பதே வைராக்கியம்.

11) எது இன்பமாகத் தெரிகிறதோ உண்மையில் அது இன்பமாகாது. துன்பமும் அதுபோலத்தான். உலக வாழ்க்கையில் ஈடுபடுகின்ற மனிதன் எதை இன்பம் என்று நினைக்கிறானோ அது உண்மையான இன்பமாக இருக்க இயலாது. அது நிலையானதும் அல்ல. இன்பம், துன்பம் இரண்டுமே மாயை மற்றும் பூர்வ கர்மாவின் பலனே ஆகும்.

12) பிறருக்கு தர்மம் செய்யும்போது கோபம் கொள்ளாதீர்கள். கடுமையான வார்த்தைகளைப் பேசாதீர்கள். நாம் கொடுக்கின்ற தர்மம் போதாது என்று ஒருவேளை அவர்கள் மீண்டும் கேட்டால், சாந்தமான வார்த்தைகளைக் கூறி அவர்களை அனுப்பி வையுங்கள். அதுவே சிறந்த தர்மம் ஆகும்.

13) பிறர்மீது குறை கூறிக்கொண்டு, குதர்க்கம் செய்கிறவர்கள் அனைவரும் என் உள்ளத்தைத் துளைத்து காயப்படுத்துகிறவர்கள்தான். எல்லாத் துன்பங்களையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டு என்னைச் சரணடைகிறவன் என்னை மிகமிக அதிகமான மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான்.

14) இந்த உலக வாழ்க்கை என்னுடையதல்ல; கடவுளுடையது என்று எண்ணுபவர்கள் கவலைகொள்ளாது இவ்வுலகத்தின் நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

15) பிறர் துன்பப்படுவதைக் கண்டு சந்தோஷம் கொள்ளாதீர்கள். இது மிகக் கொடிய பாவம். அதுபோல நடந்துகொள்ளாதீர்கள். புண்ணியங்களில் சிறந்த புண்ணியம் பிறர் இன்பம் கண்டு தான் இன்புறுவதே ஆகும்.

16) பிறருக்குத் தீங்கு செய்யாதவர்களுக்கே நான் வரம் அருள்கிறேன்.

17) மனிதனும் ஈயும் ஒன்றுபோலவே காணப்படுகிறார்கள். ஈயானது நல்லது- கெட்டது எல்லாவற்றிலும் போய் அமரும். ஆனால் தீயைக் கண்டால் பறந்துவிடும். அதுபோலவே மனிதன் தன்னிடம் உள்ள எல்லா ஆசைகளிலும் மூழ்குகிறான். ஆனால் தெய்வீகத்தைக் காணும்போதே வேறுபக்கம் திரும்பி விடுகின்றான்.

18) முதலில் கடவுளை உருவங்களில் வழிபடுவதனால் மனம் ஒருநிலைப்படும். ஒரு உருவச்சிலையை பக்தியுடன் பூஜை செய்யும்போது உன் மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுப்பதை நீயே உணர்வாய்.

19) மனிதரிடையே ஏற்றத்தாழ்வு இருப்பதாக நீ கருதினால் அது பெரிய தவறே. ஒவ்வொரு உயிர்களிடத்திலும் அதனதன் கர்மாவைப் பொறுத்தே வேறுபாடு உண்டாகிறது என்பதை அறிந்துகொள்வாய்.

20) கல்லறைக்குள் இருந்தாலும் நான் உயிரோடும் சக்தியோடும் இருப்பேன். நீ எங்கு இருந்தாலும் என்னை நினைத்தால் உன்னுடன் இருப்பேன்.

*கலக்கமற்ற உள்ளம் உடையவனே புனிதமான மனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உயிருடன் உள்ளபோதும் இல்லாதபோதும் பல அற்புதங்களைச் செய்தும் நன்நெறிகளை மக்களுக்கு புகட்டியும் சீரடி சாயிபாபா ஒரு சிறந்த குருவாக விளங்குகின்றார்.

இவர் குருவாக விளங்குவதனாலேயே வியாழக்கிழமைதோறும் பாபாவிற்கு சிறப்பாக பூஜை செய்வதைப் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இன்றும் அவர் தனது ஆசிகளை வழங்கிக்கொண்டே இருக்கின்றார்.

பக்தர்களே! ஒரு சிறந்த குருவிடம், முழு இதயத்தோடு சரணாகதியடைவீர்களானால் இவ்வுலக வாழ்வெனும் பெருங்கடலுக்கு அப்பால் அவர்கள் நம்மைப் பத்திரமாக இட்டுச் செல்வார்கள். இக் காரணத்திற்காகவே முனிவர்கள் உலகில் அவதரிக்கிறார்கள்.

இவ்வாறு மகான்களின் அறிவுரைகளைக் கேட்டு நாம் நன்நெறியில் வாழ்வோமாக.

## திருமணத்தில் அட்சதை தூவுவது எதற்காக?

மணமக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க, தமது குழந்தைகளுக்கு மற்றும் புதிதாக தொழில் துவங்கும் தமது வாரிசுகளுக்கு "அட்சதை" பயன்படுத்துகின்றனர். இதனால் என்ன பயன்?

முனை முறியாத அரிசிதான் அட்சதை, நன் மங்களங்களை நல்குவது மஞ்சள். அது சென்றடைய ஒரு ஊடகம் தேவை. அதுவே அரிசி. இந்த இரண்டையும் இணைக்கும் இணைப்பான பசு நெய். கோமாதாவின் திரவியம். பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி, பூமிக்குக் கீழ் விளையும் பொருள் மஞ்சள். இந்த இரண்டையும் இணைக்க தூய பசு நெய் தேவை.

சற்றே யோசித்தால் இயற்கையில் மணமக்களை வாழ்த்தும்பொழுது மணமக்கள் இருமாண்பினர்; வெவ்வேறு குணநலன்கள் கொண்டவர்கள்; ஒருமித்து வாழத்தக்கவர்கள்; அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசு நெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர். இதுவே தத்துவம்.

மணமக்களை வாழ்த்தும்பொழுது, மணமேடைக்கு அருகே வந்து ஒருவர் பின் ஒருவராக மணமக்களை அட்சதை தூவி ஆசி வழங்குவதே சரியான முறையாகும். மொத்தமாக மாங்கல்ய தானம் செய்யும்பொழுது தூவி வாழ்த்துவது நன்மையான பலன்களை, அதிகம் வழங்குவது இல்லை என்பது சாஸ்திர உண்மை.

மேலும் தமது வாரிசுகள் புதிதாக தொழில் ஆரம்பிக்கும்பொழுதும் சந்திரன் சக்தி அதிகம் அமைந்த அரிசியும் குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹாலக்ஷ்மி பரிபூரண சக்தி கொண்ட நெய்யினை கலந்து, உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் அவர்களை ஆசீவதிக்கும்பொழுது அந்த புதியதாகத் துவங்கப்பட்ட தொழில் வாழையடி வாழையாக அவர்களுக்கு அதிஷ்டத்துடன் கூடிய முன்னேற்றத்தை வாரி வழங்கும் என்பது சாஸ்திர உண்மை.

இந்த அமைப்பில் அமையும் திருமணம் மற்றும் தொழில்கள், சுபகாரியங்கள் அனைத்தும் வெற்றிமேல் வெற்றிபெற்று, சகல நலன்களையும் அடையும் என்பது உறுதி.

*தீர்மானமுள்ள மனதிற்குக் கவலை இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 33

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர் பாரம்பரியத்தில்தோன்றிய பெண் சித்தர்கள்

நமது சமயப் பாரம்பரியத்தில் சைவப் பண்பாட்டை பேணி வளர்ப்பதில் பெண்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். திருமுறை ஆசிரியர்களில் ஒருவராக இருந்த காரைக் காலம்மையார் பக்தி இயக்கத்தின் முன் னோடியாகப் போற்றப்படுகின்றார். "தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை" என்றும், மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்றும் மங்கையர்க்கரசியாரைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் போற்றித் துதிக் கின்றார். இந்து தர்மத்தையும் இல்லற தர்மத் தையும் பேணி வாழ்ந்த பெண்கள் மனை யறம் காத்த மங்கைகளாக நமது மண்ணில் மிளிர்ந்தார்கள். தொண்டு நெறியையும், பக்தி நெறியையும் பேணி வாழ்ந்த நமது பெண் களில் சிலர் சித்தர்களாகவும் இருந்தார்கள். இவர்களில் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சடையம்மாவும், சுண்ணாகத்தைச் சேர்ந்த செல்லாச்சி அம்மையாரும் குறிப்பிடத்தக்க வர்கள்.

ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆட்சிசெய்த காலத்தில் நல் லூர் இராஜதானியாகத் திகழ்ந்தது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஈழத்தில் வாழும் சைவத்தமிழ் மக்கள் அனைவரினதும் தேசக் கோயிலாகப் போற்றப்படுகிறது. சைவ சேனாதி பதியாகவும், சைவத்தின் காவலராகவும் திகழ்ந்த நாவலர் பெருமான் நல்லூரிலேயே திரு அவதாரஞ் செய்தார். நல்லூரின் வட பால் அமைந்திருக்கும் கிராமம் திருநெல் வேலி. பசுவதையை எதிர்த்துப் பாரதநாடு சென்று சைவ சித்தாந்த தத்துவ நூல் களுக்கு விளக்கவுரையை வடமொழியிலும் தமிழிலும் எழுதிய சுவாமி ஞானப்பிரகாசர் திருநெல்வேலி மண்ணிலேயே பிறந்தார். நாவ லர் பாரம்பரியத்தைப் பேணிவாழ்ந்த பண்டித மணி கணபதிப்பிள்ளை திருநெல்வேலிக் கலாசாலை வீதிக்கு அருகில் பல வருடகாலம் வாழ்ந்து இங்கேயே இறைவனடி எய்தினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சைவாசிரிய கலாசாலை மூன்று தசாப்தங்களுக்குமேல் இங்கு சிறப்பாக இயங்கியது. சைவக் கல்வி நமது மண்ணில் எழுச்சி பெறுவதற்காகத் தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்துப் பணியாற்றிய இந்துபோட் இராசரத்தினம் செயலாற்றிய சைவ வித்தியா விருத்திச் சங்கம் திருநெல்வேலியில் இருந்தே செயற் பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கத் தின் கீழ் இயங்கிய சைவச் சிறுவர் இல்லம் திருநெல்வேலியில் இன்றும் சிறப்பாக இயங்கி வருகிறது. சைவப் பண்பாட்டுச் சூழலில் ஆண்பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காக சேர். பொன். இராமநாதன் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியே 1974ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக மாற்றம் பெற்றது.

### 01) சடையம்மா:

இத்தகைய சிறப்புக்கள் மிக்க திருநெல் வேலிக் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் நெசவுத் தொழிலையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு ஒழுகும் செங்குந்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வாழ்ந்து வருகின்றார்கள். இத்தகைய செங்குந்தர் மரபில் தோன்றிய வீரகத்திப் பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு புத்திரியாக 19.08.1865இல் சடையம்மா தோற்றம் பெற்றார். இவருக்குப் பெற்றோர்கள் முத்துப்பிள்ளை என்ற பெயரினை இட்டு கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வளர்த்தனர். வீரகத்திப்பிள்ளை தம்பதிகள் தெய்வ பக்தி நிறைந்தவர்கள். இருவரும் சட்டநாதர் கோயிலில் உள்ள சிவனையும், நல்லூர் முருகனையும் தினமும் தவறாது வழிபடும் நியமம் பூண்டவர்கள்.

இவருக்குப் பதினொரு வயதாகியபொழுது பெற்றோர் அவ்வூரிலுள்ள கதிரேசு என்பவரை இவருக்குத் திருமண நிச்சயதார்த்தம் செய்து வைத்தனர். இந்துக்கள் மத்தியில் நிலவிய பால்ய விவாக முறையிலேயே இவருடைய திருமணமும் நிச்சயிக்கப்பட்டது. இருவரும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார்கள். சிறிது காலத்தின் பின் பூர்வீக ஊழ்வினையின் பயனாகக் கதிரேசனாருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இராம கிருஷ்ண பரமஹம்சர் தெய்வ பக்தியில் தீவிரமாக மூழ்கியிருந்தபொழுது அவரைச் சூழ இருந்தவர்கள் அவரைப் பைத்தியம் பிடித்தவர் என்றே நினைத்தார்கள். மற்றவர்களுடைய துன்பத்தில் மகிழ்ச்சி கொள்பவர்கள் பலர் இன்றும் நம்மிடம் வாழ்ந்து வருகின்றார்கள்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்று மறியேன் பராபரமே"

என்று தான் தாயுமானவர் பாடுகின்றார். ஆனால் வக்கிரம் பிடித்த சில மனிதர்களின் சிந்தனை மிக மோசமாகவே உள்ளது. பக்தர்களைப் பித்தர்கள் என்று அழைக்கும் மரபு நமது சமூகத்தில் தொன்றுதொட்டு நிலவிவருகிறது.

"அத்தா அரியே என்றுன்னை அழைக்கப்
பித்தா என்று பிறர் பேசுகின்றார்"

எனத் திருமங்கையாழ்வார் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். இராம கிருஷ்ணரைப் பைத்தியம் என்று கூறியவர்கள் சாரதாமணி அம்மையாரைப் பைத்தியக்காரனின் பெண்டாட்டி என்றே குறிப்பிட்டார்கள்.

சடையம்மாளின் கணவருக்கு ஏற்பட்ட மனநோய் அம்மையாரின் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது. அம்மையார் ஒருநாளிரவு ஒரு கனவு கண்டார். நல்லூர் முருகப் பெருமானுடைய கோயிலின் வடக்கு வீதியிலே வைரவப் பெருமானுடைய திருக்கோயில் ஒன்று உண்டு. அந்த வைரவப் பெருமான் அம்மையாரின் கனவிலே தோன்றி தம்முடைய திருக் கோயிலுக்கு வருமாறு கட்டளையிட்டார். கணவனும் மனைவியுமாக இருவரும் சென்று வைரவப் பெருமானை வழிபட்டதோடு அங்கே தங்கி கடுந்தவம் ஆற்றினர். கோயில் சுற்றாடலில் நந்தவனம் அமைத்தலும் வீதியைக் கூட்டி நீர் தெளிப்பதுமான சரியைத் தொண்டில் இருவரும் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் கோயிலிலே சரியைப் பணி செய்து வருங்காலத்தில் கடையிற் சுவாமிகளின் பெருமையைக் கேள்வியுற்றார்கள். இருவரும் வண்ணார்பண்ணைக்கு கடையிற் சுவாமிகளைத் தேடிச் சென்றனர். சுவாமிகள் இவர்களை நாடிவருவதுபோன்று எதிரே வந்தார்கள். இருவரும் சுவாமிகளின் காலில் வீழ்ந்து வணங்கினார்கள். அம்மையாரின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோட சுவாமிகளின் திருக்கண்களையே நோக்கி நின்றார்கள். கடையிற் சுவாமிகள் எல்லாம் சரிவரும் என்று ஆசிகூறியதுடன் "கந்தனை மறவாதே அவன்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குச் சொந்தம்" என்று கூறி இருவரையும் வழியனுப்பி வைத்தார்கள். அன்றைய தரி சனத்துடன் கதிரேசுவின் பைத்தியம் முற்றாக நீங்கிவிட்டது. இருவரும் வீடு சென்று கந்த னைக் கனவிலும் மறவாது இல்லற வாழ்வில் ஈடுபட்டனர்.

திருமணமாகி நான்கு வருடங்களாகி யும் மக்கட் செல்வம் கிடைக்காததனால் இவர்கள் பெரிதும் மனக்கவலை அடைந் தனர். பிள்ளைப் பாக்கியம் கிடைக்கவேண் டும் என்று விரும்பிய இருவரும் விரதங்களும் தவங்களும் மேற்கொண்டனர். இதனால் இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் வாரிசுகளாகக் கிடைத்தார்கள். இரண்டாவது குழந்தைக்கு வயது ஆறுமாதமாக இருக்கும் போது கதிரேசர் கனவு ஒன்று கண்டார். "நீ உன் மாங்கல்யத்தை வாங்கிக்கொண்டு உன் மனைவியைக் கதிரமலைக்கு அனுப்பி வை" என்பது கனவில் வந்த செய்தியாகும். இதே நேரத்தில் மனைவி முத்துப்பிள்ளையும் ஒரு கனவு கண்டார். நீ அணிந்திருக்கும் மாங்கல்யத்தைக் கழற்றி உன் கணவனிடம் உடனே கொடுப்பாயாக" என்பது கனவில் இடப்பட்ட கட்டளையாகும். கணவனும் மனைவி யும் தாம் கண்ட கனவினை ஒருவருக்கொரு வர் பரிமாறிக் கொண்டனர். இருவரும் ஒரே நேரத்தில் ஒரே கனவினைக் கண்டார்கள். அதனால் அதனைப் பொய் என்று சொல்லி விட முடியாது என இருவரும் நினைத்தார் கள். ஆனால் ஆறுமாதக் குழந்தையை எப் படி விட்டுச் செல்வது என்ற பிரச்சினை தாயார் உள்ளத்திலே உதித்தது.

இதனால் முத்துப்பிள்ளை கனவின் படி நடக்க அஞ்சினார். உனது முலையில் நாளை காலை பகல் பத்து மணிக்கு ஒரு கட்டி தோன்றும் என்று யாரோ கனவில் சொல் வது போன்ற வார்த்தைகளைக் கேட்டார். அவர் கண்ட கனவின்படியே ஸ்தனத்தில் கட்டியொன்று தோன்றி, பெரிய வேதனை யைக் கொடுத்தது. வேதனை மாத்திரமல்ல, குழந்தை பாலும் குடிக்க முடியவில்லை. மாங்கல்யத்தைக் கணவரிடம் கழற்றிக் கொடுத்துவிட்டு குழந்தைகள் இருவரையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு தெய்வமாக விளங்கிய தமது கணவராகிய கதிரேசனாரை வணங்கி விடையும் பெற்றுக்கொண்டார்.

நேரில் நல்லூர் முருகப் பெருமானி டம் சென்று உள்ளம் உருகி வழிபட்டார். குருபூஜை மடத்தில் ஆறுநாட்கள் தங்கி இருந்து அலகிடுதல், மெழுகுதல், நந்தவனத் திற்கு நீர் பாய்ச்சுதல் போன்ற சரியைத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தார். ஆறாவது நாள் முலையில் இருந்த கட்டி உடைந்தது. அடுத்தநாள் பகலே மற்றைய அடியார் களுடன் சேர்ந்து கதிரமலை புறப்பட்டார். கதிர்காமத்திலே முருக தியானத்தில் முழு வதும் தன்னையே இணைத்துக்கொண்ட பால்குடிபாபாவைத் தரிசித்தார். பால்குடி பாபாவின் ஆசியும் கிடைத்தது. கடையிற் சுவாமிகளினதும், பால்குடிபாபாவினதும் ஆசி யும் முருகப்பெருமானுடைய திருவருளும் ஒருங்கே கிடைக்கப்பெற்ற அம்மையார் ஆன் மீக சாதனைகளிலே மிக வேகமாக முன் னேறினார். அம்மையாரின் கூந்தல் மிக நீள மாக வளர்ந்து சடையாக விளங்கியமையால் பக்தர்கள் இவரைச் சடையம்மா என்றே அன்புடன் அழைத்தார்கள்.

கதிர்காமத்திலிருந்து நல்லூருக்கு வந்த அம்மையார் அங்கு நான்கு நாட்கள் தங்கியபின்பு இராமேஸ்வரத்திற்கு யாத்திரை செய்து சேது தீர்த்தம் ஆடியபின்பு தமிழ் நாட்டில் உள்ள மற்றைய திருத்தலங்களெல் லாம் யாத்திரை மேற்கொண்டு இறை வழி பாடு செய்தார். மீண்டும் நல்லூருக்கு வந்து கதிர்காம யாத்திரை செய்து வந்தார். ஏழு முறை கதிர்காம யாத்திரையை மேற்கொண்ட

*நம்பிக்கை இல்லாதவனை யாரும் மதிக்கமாட்டார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஆறுமுகத் தம்பிரான், முத்தையாத் தொண்டர் ஆகியோருடன் நல்லூரை அடைந்து வடக்கு வீதியில் உள்ள மேல்மாடியில் சிவ யோகத்தில் இருந்தார்.

அம்மையார் சிவயோகத்தில் இருந்த காலத்தில் ஞானபண்டிதனாகிய முருகப்பெரு மான் பஞ்சாட்சர மந்திரத்தின் மகிமையை யும், தேவிகா மந்திரங்களின் உட்பொருளை யும் வேலவனைக் குறிக்கும் சடாட்சர மந்திரங் களையும் இவருக்கு உணர்த்தி அருளினார். முத்தியைக் கொடுக்கும் யோக சமாதி நிலை யும் கைவரப் பெற்றார்.

இவர் தமது சீடர்களுடன் வட இந்தியா விற்கு யாத்திரை செய்து காசிமுதல் கைலா யம் ஈறாகப் பல தலங்களையும் தரிசித்தார். யாத்திரை செய்து மீளும்போது தெலுங்கு நாட்டு அந்தணர் ஒருவரை ஆட்கொண்டு அருள்பாலித்தார். முருகப் பெருமானுடைய உத்தரவுக்கிணங்க நல்லூரில் மடாலயம் அமைத்து அன்னதானப் பணியினைச் செய்து வந்தார். அம்மையாருடைய அடியார்கள் உதவிய பண உதவிகொண்டு கதிர்காமத் திலும் ஒரு மடாலயம் அமைத்தார்.

அம்மையாருடைய பூர்வாச்சிரமக் குழந்தைகள் இரண்டும் முறையே ஐந்து வயதிலும், மூன்று வயதிலும் இறைவனடி சேர்ந்தன. அதன் பின் கணவராகிய கதிரேச ரும் அம்மையாரின் அடியார்களில் ஒருவ ராகிச் சிவத்தொண்டுகள் புரிந்துவரலானார். சட்டநாதர் சிவன் கோயில் நந்தவனம் ஆடு களாலும், மாடுகளாலும் அழிவுறுவது கண்டு நந்தவனத்தைச் சுற்றி மதில் ஒன்று எடுப் பித்தார். அம்மையார் (05.08.1936) இல் சிவபதம் அடைந்தார். அம்மையாரின் சமாதி கீரிமலையின் கிழக்குப் பக்கத்திலே அடியார் கள் வேத மந்திர கோஷங்களையும் திரு முறைகளையும் ஓத, யோகர் சுவாமிகளின் வழிகாட்டலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## 02) செல்லாச்சி அம்மையார்:

இவர் சுண்ணாகத்திலே பரம்பரை யாகத் தமிழும் சைவமும் பேணப்பட்டு வந்த குடும்பத்திலே திரு அவதாரம் செய்தார். இவருடைய வீட்டுச் சூழலே கல்விக்குரிய சூழலாக இருந்தது. பாடசாலைக்குச் செல் லாமலே வீட்டிலிருந்து நாவலர் பெருமான் எழுதிய பால பாடங்களையும் சைவ வினா விடைகளையும் கற்றுக் கொண்டார். “நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற்பொருட்டே யாம்” என்ற நாவலருடைய இரண்டாம் பாடத் திலுள்ள முதலாம் வாக்கியம் அம்மை யாருடைய மனத்தில் மிகச் சிறிய வயதி லேயே ஆழமாகப் பதிந்துவிட்டது. நான்காம் பால பாடத்தில் உள்ள கடவுள், ஆன்மா, கல்வி, தர்மம், நல்லொழுக்கம், கற்பு, ஆகிய பாடங்களைப் பலமுறை படித்து அவற்றைத் தனது வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டு அம்மையார் வாழ்ந்து வந்தார். சிறிய வயதி லேயே ஆலய வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். சுண்ணாகம் ஐயனார் கோயி லுக்கு அருகில் இருக்கும் விநாயகப் பெரு மான் சந்நிதிக்கு நாள்தோறும் சென்று வழி பட்டு வந்தார்.

அம்மையார் வைத்தியப் பகுதியில் உதவி மருத்துவராகக் கடமையாற்றிய திரு முதலியார் தம்பு என்பவரை 1889ஆம் ஆண் டில் திருமணம் செய்தார். இவர்களுடைய இல்லற வாழ்வின் இனிய பேறாக ஒரு புத்திர னும் புத்திரியும் தோன்றினார்கள். அம்மை யார் ஆத்மீகத்தில் முன்னேறி வந்த பொழு திலும் கணவருக்குச் செய்யும் கடமைகளி லும் குடும்பக் கடமைகளிலும் சிறிதும் தவறவில்லை. கோயிலில் சரியைத் தொண்டு செய்வதில் ஈடுபட்டதோடு அங்கு நடை பெறும் புராண படனங்களையும் தவறாது கேட்டுவந்தார்.

*கல்வி என்பது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆயுதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் பூட்டனாராகிய முத்துக்குமாரக் கவிராஜர் முத்தமிழ் வித்தகராய் இருந்ததோடு ராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளைக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியராகவும் இருந்தார். முத்துக்குமாரக் கவிராஜரின் நான்கு பெண் பிள்ளைகளும் தமது தந்தையிடமிருந்து நன்கு பயின்று பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். ஆலயங்களில் புராணபடனம் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தனர். 1905ஆம் ஆண்டு மாவிட்டபுரம் தேர்த்திருவிழா முடியும் சமயத்தில் அம்மையாரின் கணவர் தம்பு சிவபதம் அடைந்தார். இவர்களுடைய இல்லற வாழ்க்கை பதினாறு வருடங்களே நீடித்தது. கணவன் இறந்த பின்பு தான் அணிந்திருந்த அணிகலன்களையெல்லாம் துறந்து, வெள்ளாடை தரித்து, உணவைச் சுருக்கித் தவ வாழ்க்கையில் ஈடுபட்டார். உலக விஷயங்களையும் தம்மையும் மறந்து நீண்டநேரம் சிவபூஜையில் இருப்பார். அம்மையாருக்கு இறைவனே குருவாகக் கனவில் தோன்றி உபதேசஞ் செய்துள்ளார். இறைவனின் திருவருள் வாய்க்கப்பெற்றவர்களுக்கு அவர்களை அறியாமலே அவர்களிடம் பேராற்றல்கள் உண்டாகின்றன. இவர்கள் சித்துக்கள் பல கைவரப்பெற்ற சித்தர்களாகவும் மாறிவிடுவார்கள். இவ்வாறு அம்மையாரிடமும் பல சித்திகள் கைவரப்பெறவே நோயாளிகளும், துன்புற்றோரும் அவரிடம் வரத்தொடங்கினர். அவர் கொடுக்கும் திருநீறோ அல்லது அவரது ஸ்பரிசமோ, அவரது வாய்ச்சொல்லோ, அவர் வீட்டுக்குளிர்ந்த நீரேதான் நோய் நீக்கும் மருந்தாக அமைந்திருந்தன.

ஏழாலையைச் சேர்ந்த பூசாரிக் கிழவனார் ஆறுமுகம் அவர்கள் நைட்டிக பிரமச்சாரியாக இருந்து சிவவாழ்வு வாழ்ந்து வந்தார். இவர் சமய அறிவும் சைவ சித்தாந்த ஆராய்ச்சி அறிவும் உடையவர். பல மணித்தியாலங்கள் மன ஒருமைப்பாட்டுடன் தியானம் செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தார். செல்லாச்சி அம்மையாருடன் தொடர்பு கொண்டிருந்த பூசாரிக் கிழவனார் இவருடைய ஆன்மீகப் பணிகளுக்குத் துணையாக இருந்தார். எந்த விடயமானாலும் அம்மையார் இவருடன் கலந்து ஆலோசித்தே செயற்படுவார்.

தீய நோக்கங்களுடன் அம்மையாரை நாடி வருபவர்களை இவர் முன்கூட்டியே அறிந்து விடுவார். அவர்களைக் கண்டவுடன் பத்திரகாளிபோல உக்கிரகோலம் கொண்டு விறுவிறுப்பான பேச்சுக்களை நிகழ்த்துவார். அகோரம் தோன்றினால் அவருடைய உடல் நெருப்புப்போல இருக்கும். குறித்த பேர்வழிகள் அம்மையார்முன் நிற்கமுடியாது பின்வாங்கி விடுவார்கள். ஆத்மார்த்த பூசையாகிய சிவ பூசையை நாள்தோறும் தவறாது செய்து வந்தார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஞான புருஷராகத் திகழ்ந்த யோகர் சுவாமிகள் அம்மையாருடைய இல்லத்தை நாடி அடிக்கடி வருகை தருவார். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். அம்மையாரைப்போல ஆன்மீக நிலையில் உயர்ந்து நிற்பவர்களை யாரும் எங்கும் கண்டதில்லை எனச் சுவாமிகளும், யோகர் சுவாமிகள் போல ஒரு மகானை என் வாழ்க்கையில் கண்டதில்லை என அம்மையாரும் கூறுவார்களாம்.

1914ஆம் ஆண்டு அம்மையாருக்கு அத்துவித ஞானி ஒருவரின் நட்புக் கிடைத்தது. அதன்பின் அம்மையார் தானே அதுவாய் அதுவே தானாய் விளங்கினார்கள். நான் எனது என்னும் நிலை அவரிடம் முற்றாக மறைந்தது. “நானும் இல்லையடி, நாதனும் இல்லையடி” என்னும் அதீத அனுபவப் பேறு பெற்று விளங்கினார்கள். இறைவனிடம் தம்மை முற்றாக ஒப்புக் கொடுத்து அவர் இட்ட கட்டளைப்படியே நடந்து வந்தார்கள். தனது பூதவுடலை உதறவேண்டிய காலம்

*சிறு சிறு விஷயமானாலும் யோசித்துப் பேசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டதை உணர்ந்துகொண்ட அம்மையார் உடம்பினுள்ளே எடுக்கும் உணவின் அளவைக் குறைத்துக் கொண்டார். நீராகாரம் மாத்திரம் ஒருமாத காலம் உண்டார். இறுதியில் அதனையும் நீக்கிவிட்டார்.

18.01.1929இல் அம்மையார் மகா சமாதி அடைந்தார். யாரும் அழவில்லை; துக்கம் அனுஷ்டிக்கவில்லை; முழுநாளும் பிரார்த்தனையும், வழிபாடுமே இடம்பெற்றது. அம்மையாரின் சமாதிநிலை கேட்டு மக்கள் கூட்டம் பெருகியது. யோகர் சுவாமிகளின் ஆலோசனையின் பேரில் அவருடைய உடல் சமாதி வைக்கப்படாமல் தகனம் செய்யப் பட்டது. அன்பர்கள் உடலுக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்துச் சங்கு நாதத்துடனும், மணி ஓசையுடனும், திருமுறைப் பாராயணத் துடனும் மயானத்துக்குக் கொண்டு செல்லப் பட்டுச் சந்தனக்கட்டை, கர்ப்பூரம் முதலிய வற்றின்மீது வைத்து அன்பர்கள் வழிபாடு செய்ததன் பின் பூதவுடலுக்குத் தீ மூட்டப் பட்டது. மனையறம் காத்த மங்கையராக இருந்ததோடு சிறந்ததொரு ஆன்மிக ஞானி யாகவும் அம்மையார் மிளிர்ந்தார்.

(தொடரும்...

## அறுமுகா இன்னும் மௌனம் ஏனோ

நாட்டு நடப்பு நாசமாய் போச்சு
நாளும் பொழுதும் ஏதோ நடக்குது
கேட்டுக் கேட்டுச் சலித்து விட்டது
கேவல மான சமுதா யமாச்சுது
காட்டு விலங்கும் கண்ணியம் காக்குமா
காலம் மாறி ஓலம் இடுகுது
வேட்டை நாயாய் ஓடித் திரிகிறார்
வேள்விக் கடாவாய் வெட்டிச் சரித்திடு
நேற்று இன்று நாளை என்னவோ
நேர்ந்த கதியை நினைக்க முடியுமோ
காற்றுப் புயலாய் மாறி வீசுதோ
காலம் எல்லாம் அழிவு நேருதோ
கூற்று வந்து கொன்று குவியாதோ
சூரா னவேலால் கொன்று விடாயோ
ஆற்றங் கரையில் அமர்ந்த வேலா
அறுமுகா இன்னும் மௌனம் ஏனோ.

-வ. யோகானந்தசிவம்-

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| செப்டெம் 16 | ஆவணி 31 | சனி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்டெம் 22 | புரட்டாதி 06 | வெள்ளி | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் 04 | புரட்டாதி 18 | புதன் | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் 16 | புரட்டாதி 30 | திங்கள் | அருணந்திசிவாச்சாரியார் |
| ஒக்டோபர் 20 | ஐப்பசி 03 | வெள்ளி | மெய்கண்டதேவர் |

நேர்மையாக வாழ்வதே மனிதனுடைய கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்காரரூபாய நம

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

"வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்"



இந்துக்களின் வழிபாட்டு மரபில் கணபதி வழிபாடு மிக முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கின்றது. இந்துக்கள் எதனை எழுதத் தொடங்கும்போதும் பிள்ளையார் சுழி எழுதியே தொடர்ந்து எழுதுவர். எக்கருமத்தினை ஆரம்பிக்கும்போதும் விநாயகரை வணங்கியே தமது கருமங்களைச் செய்யத் தொடங்குவர். நூல் பாடும் புலவரும் கணபதிக்குக் காப்புச் செய்யுள் பாடியே தொடர்ந்து நூலைப் பாடுவர். இவ்வாறு விநாயகரை முதலில் வணங்கி ஆரம்பிக்கும் கருமங்கள் யாவும் வெற்றியாகவும் சிறப்பாகவும் சித்தியாகும் என்பதில் இந்துக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. இந்துக்களின் எந்த வைபவத்திலும் மிக எளிமையான பொருள்களான மஞ்சள்மா, பசுவின் சாணம், அறுகம்புல் ஆகியவற்றில் விநாயகர் ஆவாஹனமாகி அங்கு காட்சி அளிப்பதனைக் காணலாம். இவை மட்டுமன்றிக் கோயிற் பூசை வழிபாட்டு முறையிலும் கணபதிக்கே முதன்மையும் முக்கியத்துவமும் இருப்பது கவனிக்கத்தக்கது. விநாயகரை மூலமூர்த்தியாகக் கொண்டிராத சிவன், உமை, முருகன் போன்ற தெய்வங்களை மூலமூர்த்தியாகக் கொண்ட கோவில்களிலும் தென்மேற்கு மூலையில் கணபதிக்குத் தனிக் கோயில்கள் அமைந்திருப்பதும் முதலில் விநாயகருக்குப் பூசை உபசாரங்கள் இடம்பெற்ற பின்னரே மூலமூர்த்தி உட்பட ஏனைய பரிவார மூர்த்திகளுக்குப் பூசை, உபசாரங்கள் இடம்பெறுவதும் வழக்கம். நமது வீடுகளில் இடம்பெறுகின்ற வழிபாடுகளிலும் இம் மரபையே நாம் கண்ணும் கருத்துமாகப் போற்றி வருகின்றோம். திருமண வைபவம், புதுமனை குடிபுகும் நிகழ்வு போன்ற எந்த வைபவமானாலும் கணபதி பூசையுடன்தான் ஆரம்பிக்கின்றோம். வடமொழி மந்திரங்களை ஓதுபவர்களும்,

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புயம்",
"கஜானனம் பூத கணாதி சேவிதம்"

என்ற விநாயகர் வழிபாட்டுச் செய்யுட்களைப் பாடியே வடமொழி மந்திரங்களை ஓதிப் பூசை ஆராதனைகளை நிகழ்த்துவர். இவையெல்லாம் கணபதி வணக்கம். இந்துக்களுடைய

*வெறும் வார்த்தையால் வயிற்றை நிரப்ப முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த பிரிக்க முடியாத ஒன்றாக முக்கியத்துவம் பெற்றுவிட்ட தென்பதையே தெட்டத் தெளிவாக விளக்குகின்றன.

இறைவனுக்குரிய பல்வேறு ஆற்றல்களில் இடர் நீக்குதலும் ஒன்று. அவ்வாற்றல் முனைப்புற்று விளங்குந் தெய்வமே விநாயகர்.

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன்"

என "வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர் நற்கொன்றையா னடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தர்" எனச் சிவனையன்றி வேறு தெய்வம் போற்றாதவர் எனச் சுந்தரரால் போற்றப்பட்ட சம்பந்தரே திருவலிவலம் பதிகத்தில் விநாயகப் பெருமான் தோற்றத்தை விரித்துப்பாடி விக்கினம் நீக்கும் விநாயகர் வழிபாட்டை வற்புறுத்துவர்.

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்"

எனச் சைவத் திருமுறைகளை வகுத்து, பக்தித் தமிழின் வளத்திற்கு வலுச்சேர்த்த நம்பியாண்டார் நம்பி தனது திருவிரட்டை மணிமாலையிலும்,

"இடர் முழுதும் விநாயகர் அருளால் எரி விழும் பஞ்சென மாயும்" என விநாயகர் புராணமும் கூறுவன விக்கினம் விலக்கும் கடவுளே கணபதி என்பதனைத் தெளிவாக்குகின்றன.

"விநாயகர்" என்றால் தனக்குமேல் வேறெவரும் தலைவனாக இல்லாத தனி முதற் கடவுளே கணபதி. மேலுந் தன்னை அன்போடு வழிபடும் அடியவர்களின் விக்கினங்களை நீக்குபவராகையால் "விக்கினேஸ்வரர்", கணங்களுக்குத் தலைவராகையால் கணநாதன்- கணேசன்- கணபதி- அடியவர்களைப் பீடிக்கும் கொடிய மாயையைத் துண்டிப்பவராகையால் "வக்கிரதுண்டர்", பிரபஞ்சம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கொள்பவராகையால் "லம்போதரர்" (பெருவயிறர்) எனப் பல பெயர்கள் கணபதிக்குண்டு.

கணபதியின் ஆனைமுகம் அறிவையும் ஆற்றலையும் துதிக்கை இப்பிரபஞ்சம் முழுவதற்கும் பொதுவான "அ,உ,ம்" என்ற மூன்று ஒலிகளும் சேர்ந்து உருவானதும் எல்லா மந்திரங்களுக்கும் மூலாதாரமாக விளங்குவதுமான "ஓம்" என்னும் ஓங்கார ஒலியாகிய பிரணவத்தையும் பேழை வயிறு பிரபஞ்சம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கருணையுடன் காக்குந் தன்மையையும் குறிக்கும். மேலும் விநாயகரின் பாசம் ஏந்திய கை படைத்தலையும் ஒற்றைக் கொம்பு ஏந்திய கை காத்தலையும் அங்குசம் ஏந்திய கை அழித்தலையும் துதிக்கை மறைத்தலையும் மோதகம் வைத்துள்ள கை, அருளுதலையும் குறித்துப் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய ஐந்தொழில் புரியும் மூர்த்தங்களும் கணபதியே என்றும் ஆகவே அவரை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்கியதற்குச் சமமாகுமென்றும், ஆனால் பிற தெய்வங்களை வழிபடுபவர்களும் முதலில் கணபதியை வழிபடவேண்டுமென்றும் விளக்குவர். இது கணபதிக்குரிய தனிப்பட்ட மகிமையாகும். கணபதியையே பரம்பொருளாகக் கருதி அவரை மட்டும் வணங்குபவர்கள், ஆதிசங்கரரால் வகுக்கப்பட்ட சைவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், வைஸ்ணவம், சௌரம் ஆகிய ஆறு பிரிவுகளைக் கொண்ட இந்து சமயத்தில் "காணாபத்யம்" என்ற ஒரு தனிச் சமயப் பிரிவினராவர். காணாபத்தர்களான இவர்கள்- ஐம்பூதங்களின் அதிபதியாகவும் பரம்பொருளின்

*கடமையை மறந்தவன் இன்பத்தையும் மறந்துவிட வேண்டியதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாகவும் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்ட ஓங்கார வடிவினனாகக் கணபதியே வீற்றிருக்கிறார் என்ற கோட்பாடுடையவர்கள்.

"ஓங்காரருபாய நம" என்பது கணபதியை அர்ச்சிக்கும் விசேட மந்திரங்களில் ஒன்று. எல்லா எழுத்துக்களின் ஓசைகளுக்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓயாது ஒலி எழுப்பிக்கொண்டிருக்கும் "ஓம்" என்னும் ஒலியே ஓங்காரம் எனப்படும். இறைவனை வழிபடும் மந்திரங்களுள் தலைசிறந்த ஒன்றாக "ஓங்காரம்" என்பதனைக் கண்டறிந்தனர் நம்முன்னோர். எல்லா ஓசைகளுக்கும் முற்பட்டதான இவ் "ஓங்காரம்" வடமொழியில் "பிரணவம்" எனப்பட்டது. நால் வேதங்களும் "ஓம்" என்ற பிரணவத்திலிருந்தே ஆரம்பிக்கின்றன. மூலாதாரமான இவ் ஓங்காரமே எங்கும் எதிலும் நிலையாயுள்ளது. அனைத்து மந்திரங்களுக்கும் சாத்திரங்களுக்கும் அடிப்படையும் அதுவே. "ஓம்" என்ற பிரணவத்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றி அதிலேயே அடங்கியும் விடுகின்றது. அனைத்திற்கும் அடிப்படை ஆதாரமான அவ் "ஓம்" என்னும் பொருளின் முழு உருவமாக ஓங்கார வடிவாகவே திகழும் பெருங் கடவுளே கணபதி. அவரின் ஆனைமுகம், காது, வளைந்த தும்பிக்கை இம் மூன்றையும் சேர்த்துப் பார்த்தால் "ஓம்" என்ற பிரணவ வடிவமாகவே தோன்றும் விநாயகரின் அதியற்புதமான தரிசனத்தைக் கண்டனுபவிக்கலாம். நாத வடிவில் இறைவன் நமக்குக் காட்சி தருவதற்கே பிரணவமாகிய "ஓம்" எழுத்தைப் போன்றமைந்துள்ள யானையின் முகத்தைத் திருமுகமாகக் கொண்ட கணபதி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். கணபதியின் உருவ அமைப்பானது அவருக்குள்ள நான்கு கைகள் தேவ வடிவு போன்றும் முகம், புருவ வடிவம் மனித வடிவு போன்றும் பேழை வயிறு குறுகிய கால்கள் பூத வடிவு போன்றும் யானைத் தலை, காது, தும்பிக்கை ஆகியன மிருக வடிவு போன்றும் யானை முகம் அஃறிணையாகவும் ஏனைய சரீர அமைப்பு உயர்திணையாகவும் விளங்கும். அதுவே தேவ, மனித, பூத, விலங்கு ஆகிய தோற்ற அமைப்பின் தொகுப்பே விநாயகரின் வடிவம் என்றும் விளக்குவர்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் நரசிம்மனின் சேனாதிபதியாக விளங்கிய சிறுத்தொண்டர் சாளுக்கிய மன்னர்களுடன் வாதாபிப் போரில் வெற்றியீட்டி அங்கிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் விநாயகர் சிலையுடனேயே அவ்வழிபாடு ஆரம்பிக்கின்றதென்று பொதுவாகக் கூறப்பட்டாலும் கிறிஸ்துவுக்கு மிக முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு மிகப் பெரு வழக்காகவிருந்ததென்பதற்கான இலக்கிய, தொல்பொருட் சான்றுகள் பலவுண்டு. இருக்கு வேதத்தில் "கணாநாம் தீ வாம் கணபதி ஹம் ஹவா மஹே" என வரும் கணபதி பற்றிய குறிப்பு கி.முற்பட்ட இருக்கு வேத காலத்தில் விநாயகர் வழிபாடு இருந்துள்ளதென்கிறது. 5ஆம் வேதமெனக் கூறப்படும் மகாபாரதத்தை வியாச முனிவர் சொல்ல விநாயகரே தனது வலது தந்தத்தை ஒடித்து எழுதி முடித்தார் என்ற செய்தி வியாசர் காலத்திற்கு முன்னரே கணபதி வழிபாடு வழக்கிலிருந்தது என்றும், "ஓம்" என்ற பிரணவ மந்திரம் அநாதி என்றும் அதன் திருவுருவ அமைப்பான விநாயகர் வழிபாடும் அநாதியானதே என்றும் விளக்குவர். மேலும் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் செய்யுளியலில் வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தடந்தாட்கு ஒத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர
வென்றாடு திருத்தாதை வியந்து கை துடிகொட்ட
நின்றாடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே"

என்ற பாடல் தாண்டவமாடும் தில்லைக் கூத்தனாகிய தந்தை, வாத்தியக் கருவியான உடுக்கையினை அடிக்க அதற்கேற்றவாறு நடனமாடும் மகனான மழகளிற்றைகணபதியை நினைந்து வழிபடுபவர்களுக்கு வினையில்லை என்று கூறும் செய்தி தொல்காப்பியர் காலத்திலேயே விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டில் பெரு வழக்காக இருந்திருக்கின்றது என்பதனைத் தெளிவாகப் பேசுகின்றது.

"கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை" என மணிமேகலை என்ற பௌத்த காப்பியம் விநாயகர் காக்கை வடிவம் கொண்டு அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி ஆறு பாயச் செய்த வரலாற்றினையே கூறுவதாகும். விநாயகர் வழிபாட்டின் தொன்மையினை மேற்குறித்த இலக்கியச் சான்றுகளுக்கு மேலாகத் தென்னிந்தியாவில் அமராவதிக் குகையிலும் தமிழ்நாட்டில் பிள்ளையார்பட்டி, திருச்செங்காட்டாங்குடி போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட கணபதி சிலைகள் விநாயகர் சிவனை வணங்கிய கணபதீஸ்வரம் என்ற கோயில் ஆகியன கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விநாயகர் வணக்கம் தென்னகத்தில் சிறப்பாக இடம்பெற்று வந்திருக்கின்றதெனத் தொல்பொருளாய்வாளர்கள் Archaeologist நிறுவுவதற்கு ஆதாரமாகின்றன. தமிழர் வாழ்வியலுடன் மிகத் தொன்மைக் காலத்தில் இருந்தே இணைந்திருந்த விநாயகர் வழிபாடு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவ சேனாதிபதியின் வாதாபி வெற்றியுடன் மேலும் சிறப்படைந்தது என்று கொள்ளலாம். விநாயகர் வழிபாடு செய்யத் தவறின் இடையூறுகள் நேரிடுமெனக் கந்தபுராணம் மிகத் தெளிவாக அறிவுறுத்துகின்றது. "முப்புரம் எரிசெய்த அச் சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா..." என அருணகிரிநாதர் திருப்புகழில் பாடுவது விநாயகரை வணங்காது திரிபுர தகனம் செய்யப் புறப்பட்ட சிவபெருமானின் தேர் அச்சு முறிந்த செய்தியையே யாகும். இதன்மூலம் தனக்குமேல் வேறு தலைவன் இல்லாதவனே விநாயகன் என்பதனை நிரூபித்தும் கஜமுகாசுரனை அழித்துத் தேவர்களைக் காத்தும் தனது தந்தத்தை முறித்து அதனால் மகாபாரதத்தை எழுதியும் நம்பியாண்டார் நம்பி நிவேதித்த அமுதை உண்டும் மறைந்திருந்த திருமுறைகளைக் காட்டிக்கொடுத்தும் இவைபோல் பல அற்புதங்களை நிகழ்த்தியவர் கணபதி என விநாயகர் புராணம், கந்தபுராணம் போன்ற நூல்கள் விரிவாக விளக்குகின்றன.

விநாயகர் வழிபாடு மிக இலகுவானது. குளக்கரை, ஆற்றங்கரை, தெருச் சந்திகள், அரசு, ஆல், வன்னி போன்ற மரங்கள் மலை, கோயில்கள் என ஊரின் மூலை முடுக்கெல்லாம் விநாயகர் வீற்றிருந்து அருள் பாலிப்பர். "பிடித்து வைத்தால் பிள்ளையார்" என்பது போல மஞ்சள் மா, பசுவின் சாணம், களிமண் என்ற சாதாரண பொருட்களினாலும் கருங்கல், உலோகம் ஆகியவற்றினாலும் பிள்ளையார் உருவாக்கப்படுவார். வெள்ளெருக்கு வேரில் உருவான விநாயகர் சிலை இறை சாந்நித்தியம் நிறைந்ததாக இருக்குமென முனிவர்கள், ரிஷிகள் கூறியதாக எடுத்துக்காட்டுவர். விநாயகர் 32 வடிவங்களில் வழிபடப்படுவதாகவும் அவைகளில் மகா கணபதி, சங்கடகர கணபதி, விக்னராச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி, சித்தி கணபதி, ஏரம்ப கணபதி, நிருத்த கணபதி, பஞ்சமுக கணபதி ஆகிய மூர்த்தங்களே ஆலயங்களில் விசேடமாக வழிபடப்படுகின்றன.

விநாயகரை இந்துக்கள் மட்டுமன்றிச் சமணர்களும், அவர்களிலும் அதிகமாக உருவ வழிபாட்டுக்கு முக்கியம் கொடுக்காத பௌத்தர்களும் வழிபடுகின்றார்கள். வைஷ ணவர்கள் விநாயகரைத் தும்பிக்கை ஆழ் வார் எனப் பக்திபூர்வமாக வழிபடுவர். இந் தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தில் விநா யகர் வழிபாடு மிகப் பிரசித்தமானது. பாரத பூமியில் இமயம் முதல் கன்னியாகுமரிவரை இலங்கை, நேபாளம், தீபேத்து, பர்மா, தாய்லாந்து, மலாயா, சிங்கப்பூர், கம்போடியா, சீனா, யாவா, சுமத்திரா, இந்தோனேசியா, பாலித்தீவுகள், மொரிசியஸ் போன்ற இந்து, பௌத்த பண்பாடு ஆழ வேரூன்றியுள்ள உல கின் பல நாடுகளிலும் விநாயகர் வழிபடப்படு கின்றார். கி.பி. 4ஆம் நூற்றாண்டினரான பாகியான் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி யிருந்த விநாயகர் வழிபாடு பற்றிக் குறிப் பிட்டுள்ளார். அண்மைக் காலங்களில் பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளிலும் அவுஸ் திரேலியா போன்ற தூர கிழக்கு நாடுகளிலும் விநாயகர் வழிபாடு பரவியுள்ளமை விசேட மாகக் குறிப்பிடத்தக்கது. எங்காயினும் ஒரு ஊருக்குச் சென்றால் அங்கு ஏனைய கட வுளர்களுக்குக் கோயில்கள் இல்லாவிட்டா லும் கணபதிக்குக் கோயில்கள் இருப்பது கவனிக்கத்தக்கது.

கணபதியின் பெரும் புகழைப், பெருங் கருணையைப் பேரருளாற்றல்களை எல்லாம் விதந்து, போற்றிப்பாடி அவரின் அருளுக் காளான அருளாளர்கள் பலர். திருமுறை ஆசிரியர்களான ஞானசம்பந்தர், நாவுக்கரசர் போன்றோர் தம் திருமுறைகளில் கணபதி யைச் சிவனின் மைந்தனாகவும் வழிபடுபவர் களின் இடர்களைக் கடிபவராகவும் பாடியுள் ளனரெனினும் விநாயகர் வழிபாட்டைத் தமிழ் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் எடுத்துச் சென்ற பெருமை ஔவையாருக்கேயுரியது. விநாயகரின் அதீத பக்தையான ஔவையார் “பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நான்கையும் கொடுத்துச் சங்கத்தமிழ் மூன் றையும் விநாயகரிடம் கேட்டுப் பெற்ற ஔவை யார் அவருக்கு அவலும் கொடுத்து அக வலும் கொடுக்கின்றார். விநாயகர்மீது ஔவை யார் பாடிய அகவல் இந்துக்கள் தமது தினசரி வழிபாட்டின்போது மனமுருகிப்பாடும் தலைசிறந்த ஒரு தோத்திர நூலாக விளங்கு கின்றது. உயிரோட்டமான சிறந்த கவிதை அமைப்பில் கடவுளைப் போற்றித் துதிப்பதற்கு ஏற்ற அகவல்யாப்பில் இனிமையான மொழி நடையில் ஆற்றொழுக்கான ஒலி அலை களை எழுப்புகின்ற தாள ஒழுங்கில் 72 அடிகளில் ஆக்கப்பட்ட சிறு ஆக்கமேயாயி னும் “கடுகு சிறிது காரம் பெரிதென்பது” போல மிகமிகவுயர்ந்த யோக, ஞான இரகசி யங்கள் எல்லாம் ஒருசேர அடங்கிய ஞானப் புதையலே விநாயகரகவல். மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் என்ற பொருள்படும் அக வல் யாப்பில் அமைந்த இவ்வகவலில் விநா யகரின் அவயவங்களை முதலில் அடுக்கடுக் காகக் கூறிக் கவிதையினை நகர்த்திச் செல் வதனால் அதனை ஓதுகின்ற பக்தனின் மனத் திரையில் விநாயகரின் உருவம் பதிந்து விடு கின்றது. நிறைமொழி மாந்தரான ஔவை யாரின் நாவிலிருந்து வேதசாரம்போல் வெளி வந்த மந்திர ஆற்றலுடைய எளிமையான சொற்கள் விரவிவரத் தாய்மொழியில், வழி படும் கடவுளிடம் மனம் திறந்து ஓதுவதற்கு மிகப்பொருத்தமான தாள அமைப்புக் கொண்ட அகவல் யாப்பில் அது பாடப்பட்டுள்ளதால்

*செல்வம் வளரும் அளவு அதன்மீது பற்றும் வளரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபவனுடைய எண்ணங்கள் சிந்தாமல் சிதறாமல் விநாயகரின் திருவடியில் ஒன்றி விடுகின்றது. அடியவர்களின் அல்லலை நீக்கும் இறைவனுடைய திருவடியில் சரணாகதி அடைதலென்பது மிகமிக மேலான நிலை என ஆன்மிக நூல்கள் விபரிக்கும். வழிபடும் அடியவர்களின் குரலாகவே உலக நன்மைக்காகவே அருளவேண்டுமென விநாயகரிடம் விண்ணப்பிக்கும் ஔவையாருக்குக்

“குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென...”

அனைத்து யோக, ஞான இரகசியங்களையும் உபதேசித்து அவையூடாக

“எல்லையில்லா ஆனஞந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிய” விநாயகரைச் “செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பு” என ஆரம்பித்து “வித்தக விநாயக விரைகழல் சரணே” என அகவலை நிறைவு செய்கின்ற ஔவையார் அடியவர் சரணடைய மிகப் பொருத்தமான இடம் இறைவனின் திருவடி மட்டுமே என்பதனை விநாயகரகவலின் ஆரம்பத்திலும் இறுதியிலும் அழுத்தியுரைத்து பக்தர்களை விநாயகரின் திருவடி வழிபாட்டில் லயிக்க ஆற்றுப்படுத்துகின்ற இவ்வகவல் கம்பியில் ஓடும் மின்சாரம் மின்குமிழில் ஒளிபரப்புவதுபோல விநாயகராகிய பேரொளிப் பிளம்பில் மனம் ஒடுங்கக்கூடிய மின் ஆற்றல் நிரம்பிய ஒப்பற்ற ஓர் மந்திரமாகும். கவிதைக்குக் கவிதையாகவும் இசைப்பாடலுக்கு இசைப்பாடலாகவும் மந்திரத்திற்கு மந்திரமாகவும் விளங்கு வதோடு மனுக்குலத்தை உய்விக்கத் தோன்றிய அதியற்புதமான தோத்திர நூலாகவுமுள்ள விநாயகரகவலைத் தினமும் ஓதி விநாயகர் அருள் பெறுவோமாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

- திரு அன்னைதாசன் அவர்கள் -

ஆம்! இங்குள்ள தொழில்நுட்பக் கூடம் மிகப் பிரம்மாண்டமாக இருந்தது. இதேபோல எல்லா நவோதய பாடசாலைகளிலும் அமைக்கவேண்டும் என்ற கொள்கைக்கமைவாக அருமையாக வடிவமைத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. வெள்ளித் தகட்டினாலான பெரிய எழுத்துக்களால் பெயரிடப்பட்டு வெள்ளை வெளேரென வருவோரை வரவேற்றுப் பார்க்கத் தூண்டும் வண்ணம் புற அழகு காட்சிதர, உள்நுழைந்ததும் மாணவர்கள் விரும்பிக் கற்று தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்வதற்கேற்ற வகையில் தளபாட மேசை, உபகரண, இலத்திரனியல் சாதன உதவிகளுடன் கூட ஒளி, நீர் வசதி என்பன நவீன பாணியில் செய்யப்பட்டிருந்தது. எம்போன்றவர்களையும் கற்றாலென்ன எனும் வகையில் தூண்டும் வண்ணம் இருந்தது. இவற்றைப் பார்த்து எம்மவர்கள் வியந்தவண்ணமிருக்க சுவாமிகள் வந்த நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் அவர்களுக்கான யோகா பயிற்சியை வழங்குவதற்கான ஆளணியினரை தயார் செய்து யோகா பயிற்சி நடைபெறும் இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். எம்போன்ற சிலர் அவற்றையும் அவதானித்தபடி மேலும் சில தகவல்களைப் பெறுவதற்காக அங்குள்ள ஆசிரியர்களுடன் அளவளாவினர். அவற்றிலிருந்து பெற்றதையும் உங்களுக்குத் தர விழைகிறேன். அவ்வாசிரியர்களின் குறைபாடு இங்குவரும் பிள்ளைகளின் பெற்றோரது அறிவீனத்தாலும் அவர்களின் பண்டைய பாரம்பரிய நம்பிக்கைகளாலும் பிள்ளைகளிடத்தில் படிக்க வேண்டும், படித்து உயர வேண்டும் என்ற மனப்பாங்கு இல்லை என்றும் ஏதோ எழுத வாசிக்கத் தெரிந்தாலே போதும் அது தங்கள் பெற்றோர்களைப்போல தொழில் செய்வதற்குப் போதுமானது என்ற மனப்பாங்கில் பெரும்பாலானோர் இருப்பதாகவும் இதற்கு ஏற்றவகையில் அவர்களின் வீட்டு, குடும்ப சமூகச் சூழல் இருப்பதாகவும், குறிப்பாக இந்த லயன்களின் வாழ்க்கைச் சூழலே இவர்களை இந்த மனநிலையில் வைத்திருப்பதாகவும் குறைபட்டுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. நாம் சென்ற காலங்கள் மழைகாலங்களாக இருந்தமையால் அங்குள்ள லயன்களின் நேரடித் தரிசனத்தையும் எம்மால் பெறமுடிந்தது. பல கூரைகளில் தகரம்- அதுவும் உக்கியநிலை, சில இடங்களில் தார்ப் பீப்பாத் தகரங்களும் கூரைகளாக மிளிர்வதையும் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் செல்வந்தர்களின் வீடுகளோ சில நெருப்புப் பெட்டிகளை அடுக்கியதுபோல அத்தகு ஏற்ற இறக்கங்களிலும் அழகுற அமைந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. அத்துடன் ஒரு குடும்பத்தில் 4-5 பிள்ளைகள். சிறிய பிள்ளைகளை இப்பள்ளிப் பருவப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டிய கட்டாயச் சூழல் இவை ஒருங்குசேர பிள்ளைகளின் வரவுகூட இதனால் வீழ்ச்சியடைந்து காணப்படுவதாகவும் மனம் வருந்தினர். ஒருசில பிள்ளைகள் படித்து முன்னேறினாலும் விஞ்ஞானப் பிரிவின் இடைஞ்சலைச் சுட்டிக்காட்டியிருந்தனர். இதுபற்றி நாம் ஏலவே விபரித்திருந்தோம். ஆனாலும் துக்கத்திலும் ஒரு மகிழ்ச்சியாக இப்போ எம்மவர்களில் கலைப்பிரிவுக்கு உரிய ஆசிரிய வளவணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பிள்ளைகளிலிருந்தே இப்படியான பள்ளி களூடாகப் பெற முடிகின்ற பொழுதிலும் விஞ்ஞானப் பிரிவிற்குரிய ஆசிரிய வளத்தை கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து வரும் ஆசிரியர்களிடமேயிருந்து பெறவேண் டிய நிலையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி னார்கள். ஆம்! அது இன்றைய காலத்தின் வளர்ச்சியே என்று சொல்லலாம். ஏனெனில் அந்த நாட்களில் எம்மவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்து கற்றவர்கள் 8ஆம் வகுப்புச் சித்தியடைந்ததுமே இங்குவந்து ஆசிரியர் களாகக் கற்பித்ததை வரலாறு காட்டும் இந்தநிலை மாறி கலைப் பிரிவிற்காவது தங்களைத் தாங்களே நிறைவு செய்யும் இம்மக்கள் பெற்றுள்ளமை இலவசக் கல்வி யைத் தந்த கன்னங்கரா பெருந்தகையையே சாரும். இவர்களது விஞ்ஞானப் பிரிவை வளர்க்கும் தாகத்தையும் தீர்ப்பதற்கு சந்நிதி யானும் ஏதோ ஒரு வகையில் கால்கோளிட் டுள்ளான் என்பதை இப்பயணக் கட்டுரையை தொடர்ந்து வாசிக்கும் அன்பர்கள் புரிந்து கொள்வர். அதனாற்றான் நான் குறிப்பிடுவேன் இது வெறும் பயணக் கட்டுரையல்ல. சந்நிதி யான் ஆச்சிரமத்தின் குறிப்பாக மலையகத் தில் எம்மாச்சிரமஞ் செய்யும் சமய சமூகப் பணிகளின் ஆவணப் பொக்கிஷம். ஆக எம்மவர்களே இவ்விஞ்ஞானப் பிரிவின் வளர்ச்சி என்பது ஆக இவர்களுக்கு மட்டு மென ஒரு பிரச்சனை அல்ல. இது தீவின் ஒட்டுமொத்தப் பிரச்சனை. ஏன் எம் யாழ் மண்ணே இப்போ இவ்வளவு வசதிகள் வாய்ப்புகள் இருந்த பொழுதிலும் விஞ்ஞான ஆளணியினரைப் பெறுவதில் சங்கடங்கள் உள்ளது. விஞ்ஞான கணித ஆசிரியர் தட்டுப்பாடு, தாதியர் பயிற்சிக்கு விஞ்ஞானம் கற்றவர்கள் போதாத, மன்னிக்கவும் கற்ற வர்கள் அல்ல எல்லோரும் கற்கிறார்கள்தான் ஆனால் சித்தியடைபவர்கள் போதாது. விரும்பித் தெரிவதில் உள்ள சிக்கல் இப்படி பல சொல்லலாம். அத்துடன் யாழ் மாவட் டமே பரீட்சைப் பெறுபேறுகளின்படி கடை நிலை என்பதை எம்மில் எத்தனைபேர் அறி வர். ஆக இவர்களது பிரச்சினைக்கும் விரை வில் தீர்வைப் பெறுவார்கள் என்று நம்புவோ மாக. இறைவனிடம் இவர்கள் வளர்ச்சிக் காகப் பிரார்த்திப்போமாக.

இப்படியான அளவளாவல்களுடன் நாமிருக்க அங்கே யோகாப் பயிற்சியை முடித்து மாணவர்களும் ஆசிரியர்களும் மிகத் தெம்புடன் அளவளாவியதைக் காணமுடிந் தது. உண்மையில் அப்பிள்ளைகளின் முகங் களில் காணப்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. உடலுழைத்து யோகாவை முடித் திருந்த வேளையிலும் அவர்கள் சுவாமி களிடம் ஆசீர்வாதம் வேண்டி வணங்கி, “ஐயா நீங்கள் அடிக்கடி எம்மிடம் வந்து இப்படியான ஊக்கத்தைத் தந்து எமக்கு வழிகாட்ட வேண்டும்” என்று கேட்டார்கள். சற்று மேல் வகுப்பில் உள்ள மாணவர்களின் கோரிக்கை மட்டுமல்ல இது. ஒட்டுமொத்த அதிபர், ஆசிரியர் அனைவரதும் கோரிக் கையுமாக இது இருந்தது. சுவாமிகளும் தமக்கேயுரிய பாணியில் சந்நிதியான் எல் லாம் உங்களுக்குத் தருவான் நாமும் முயற் சிப்போம் என்று வாழ்த்தினார்கள். தொடர்ந்து அவர்களால் அளிக்கப்பட்ட அன்பான உப சரிப்பில் மதிய போசனத்தையும் முடித்துப் பின் மீண்டும் சிவசுப்பிரமணியர் ஆலயத்தை அடைந்து ஓர் இனிய பஜனையை நிறைவு செய்து மகளிர் இல்லத்தையும் தரிசித்து அடுத்தநாள் காலை 6.30 மணியளவில் எமது ஆச்சிரமத்தை அடைந்தோம். தொடர்ந்து...

(காட்சி தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி!

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

வாழ்க்கை இனிமையானது. எப்போது என்று நினைக்கிறீர்கள்? எமது கடமை களைத் தவறாது செய்யும்போது. நாம் எதிர் பார்த்தவை கிடைக்கும்போது. நிஜமாக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டு மானால் இறை நம்பிக்கை எமக்கு அவசியம் வேண்டும். அதற்கு எமது பெற்றோர் அயல வர் நாம் வாழும் சூழல் யாவும் உயர் நோக்கம் கொண்டவையாக அமையவேண் டும். இறை நம்பிக்கை எமது வாழ்க்கைக்கு பக்கபலமாகவும் ஆதாரமாகவும் அமைய வேண்டும்.

இறைவழிபாட்டின் முதற்படி பிரார்த் தனை. இதுவே சமய வாழ்வின் பால பாடம். என்னவெல்லாம் எமக்கு அவசியமோ எவை எவையெல்லாம் எமக்கு அமையவேண்டி யுள்ளதோ அவற்றையெல்லாம் இறை நம் பிக்கைமூலம் பெற்று விடலாம் என்பதை அருளாளர்களின் வாழ்க்கை வரலாறு மூலம் யாம் அறியமுடிகின்றது. இங்கேதான் நிம்மதி பிறக்கின்றது.

இறை நம்பிக்கையும் பிரார்த்தனை யும் எமக்கு அளிக்கும் பற்பல நன்மைகளில் மிகச் சிறந்தவை உயர்ந்த மன நிம்மதி, மனோலயம். நிம்மதி எமக்குக் கிடைக்கு மாயின் வேறென்ன எமக்கு வேண்டும்? எல் லாமே கிடைத்த மாதிரித்தான். எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் மனதிலே, வீட்டிலே, நாட்டிலே. இது அனுபவ உண்மை இல்லையா?

அறஞர் "Tolstoy"யின் வாழ்வில் ஒரு சம்பவம். "Tolstoy" என்ற மிகப்பெரிய அறிஞரிடம் கல்வி அறிவு இருந்தது. புகழ், செல்வம், வளமான வாழ்வு மொத்தத்தில் எல்லாமே இருந்தது. ஆனால் அவருக்கு என்னவோ மனதிலே நிம்மதியிருக்கவில்லை. நிம்மதியைத் தேடினார் அவர். நிம்மதியற்ற நிலையில் வயல் வெளியே அவர் சென்று கொண்டிருந்தபோது ஒரு ஏழை விவசாயி யைச் சந்திக்கிறார். அவன் கடுமையான வயல் வேலை செய்யும் சாதாரண ஒரு மனித னாக வாழ்ந்தபோதும் அவன் மிகுந்த நிம்மதி யோடும் மன நிறைவோடும் பாடிக்கொண்டு உல்லாசமாகக் காணப்பட்டதை உணர்ந்தார் "Tolstoy". அவன் பாடிக்கொண்டிருந்த பாடலே அவனது மனதின் நிறைவை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

அவனது நிம்மதியான வாழ்க்கை யின் காரணத்தை அவனிடம் அறிய முயன் றார். "Tolstoy". அதற்கு அவன் அளித்த பதில், "நான் எனது கடமைகளைச் சரிவரச் செய்கின்றேன் மிகுதி நேரத்தை இறை சிந்தனையில் செலவிடுகின்றேன். வேறு பெரி தாக ஒன்றும் யான் செய்து விடவில்லை. எனது மனம் நிறைவாகவே இருக்கின்றது." இது விவசாயி அவருக்கு அளித்த பதில்.

வீடு திரும்பிய "Tolstoy" தன்னைச் சுய பரீட்சை செய்தார். எவ்வளவோ படித் தேன், என்னென்னவற்றை எல்லாம் எழுதி னேன். ஆனால் ஆத்மார்த்தமாக யான் யாது செய்தேன்? ஒன்றையுமே செய்யவில்லையே. நிதானம் இல்லை, தியானம் இல்லை, பின் ஏது நிம்மதி? "Tolstoy" சிந்திக்க ஆரம் பித்தார் நிர்மலமாக. அதுவே தியானமாக

வலிமையின் ரகசியம் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. அவருக்கு நிம்மதி தோன்ற ஆரம் பித்தது. நிம்மதி எமக்கு வேண்டியதொன்று. அதனைப் பெறின் யாம் தேவ குணங்களைப் பயில வேண்டும். பின்பற்ற வேண்டும். கருணை, பொறுமை, கொடை, அன்பு, இரக்கம் போன் றவை தேவ குணங்களாம். இவற்றை யாம் பின்பற்றினால் அவை எமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன் கேட்டுப் பாருங்கள்.

ஒரு காலத்தில் ஏசுநாதர் என்ற பாண்டுரங்க பக்தர் ஒருவர் கங்கைக் கரை யிலே வாழ்ந்து வந்தார். அவர் தனது பாவங் கள் தீருமாறு தினமும் ஒருமுறை கங்கை யில் நீராடி வந்தார்.

ஒருநாள் மூடன் ஒருவன் அவர் கங்கையில் மூழ்கி நீராடிக் கரையேறியதும் அவர்மேல் வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்தான். திடுக்குற்ற ஏசுநாதர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மறுபடியும் கங்கையுள் மூழ்கி நீராடிக் கரையேறினார். அவர் கரை யேறியதும் மீண்டும் அந்த மூடன் வெற்றிலை எச்சிலை அவர்மேல் உமிழ்ந்தான். மீண்டும் ஒன்றும் பேசாது, மூடன்மேல் சினம் கொள் ளாது ஏசுநாதர் கங்கையில் மூழ்கிக் கரை யேறினார். அவர் கரையேறியதும் மீண்டும் மூடன் அவர்மேல் எச்சிலை உமிழ்ந்தான். மீண்டும் பொறுமையைக் கடைப்பிடித்தார் ஏசுநாதர். இவ்வண்ணம் 108 முறை நடந்தது. 108ம் முறை மூர்க்கன் மனம் மாறி மனம் வருந்தி ஏசுநாதரின் பொறுமையைக் கண்டு வியந்து அவரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோர ஆயத்தமானான். ஆனால் ஏசுநாதர் அதற்கு விடாமல் தானே மூடன் காலில் வீழ்ந்தார். பின்னர் கூறினார்.

“அப்பனே! உனக்கு எதுக்கு மன் னிப்பு! நான் அல்லவா உனக்கு நன்றி சொல்ல வேண்டும். மிகப் புனிதமான இந்தக் கங்கை யில் ஒருமுறை மூழ்கி எழுந்தாலே மிகுந்த புண்ணியம் கிடைக்கும். இன்று உன்னுடைய தயவால் 108முறை கங்கையில் நீராடிய புண்ணியத்தைப் பெற்றுவிட்டேன். உன் கருணை இல்லாவிட்டால் ஒருமுறைதானே நீராடியிருப்பேன்'' என்றார். மூடன் தன் தவறை அப்போதுதான் உணர்ந்தான். ஏசு நாதர் தான், தேவன் ஆனதோடல்லாமல் மூடனையும் தேவனாக்கி விட்டார். தேவ குணங்கள்தான் வாழ்வில் வேண்டிய நிம்மதி யைத் தரவல்லன. கடைப்பிடிப்போமா?

**தினமும் அருள் சுரக்கும் செல்வச் சந்நிதிவேல்**

செல்வச் சந்நிதி முருகன் இடத்து வந்து சேருங்கள்
செல்வம் செழிக்கும் அதனை மேலும் கண்டு கூட்டுங்கள்
அல்லல் படும்மனம் அமைதி அடைந்திடும் அதிசயம் பாருங்கள்
ஆறுமுகமொடு வேலின் அழகினைக் கண்டு மகிழுங்கள்
கல்லைப் போன்ற மனமும் இங்கே கரையும் பாருங்கள்
காவடி ஆட்டமும் கந்தன் காலடி சேரும் காணுங்கள்
நல்லவர் பெரியவர் நாடித் தொழுத கோவில் பாருங்கள்
நாமும் தொழுது நாளும் அருளைப் பெறுவோம் வாருங்கள்

-சின்னப்பு தனபாலசிங்கம்-

நல்ல வாய்ப்பை ஒருபோதும் மறக்காதீர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவே தர்மம்

—பொ. திலகவதி அவர்கள்—

அர்ச்சுனன் போர்க்களத்தில் தமது அன்பிற்கு பாத்திரமானவர்களை எதிர்த்துப் போரிட முடியாமல் நிற்கும்போது பரமாத்மாவால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டதே பகவத்கீதையாகும். அர்ச்சுனன் உறுதியும் கடமையிற் கருத்தும் உள்ளவன். சத்திரியப் பண்பு அவனிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தது. அப்படி இருந்தும் பரமாத்மாவை விளித்து! இரு படைகளிடையே என் தேரை ஓட்டி நிறுத்துங்கள். என்னோடு போரிட வந்திருப்பவர்கள் முகத்தை நான் பார்க்க வேண்டும் என்றான். பரமாத்மா அவ்வாறே செய்தார். அவன் கண்களில் பட்டது யார்? தன் உற்றார் உறவினர்கள், பந்துமித்திரர், பாட்டன், தந்தை, பிள்ளைகள், பேரன்மார், பிதாமகன் பீஷ்மர், வித்தையைக் கற்பித்த ஆசிரியர்களையும் கண்டு போரிட முடியாமல் துக்கம் மேலிட பாசத்திலிருந்து வந்த மோகம் அவனது கடமையுணர்ச்சியை மறக்கச் செய்தது.



காண்டீபம் கையிலிருந்து நழுவியது. அவன் உடல் நடுங்கியது. கண்களில் நீர் பெருகியது. இரத்தம் தோய்ந்த இந்த சத்திரிய தர்மத்தை விட சந்நியாசம் சிறந்தது என்றான். அம்பையும் வில்லையும் எறிகிறான். எங்கள் சுற்றாரைக் கொன்று குவிப்பதா என கலங்குகிறான். தேர்த் தட்டிலே உட்கார்ந்து விடுகிறான். கோவிந்தா! உற்றாரைக் கொன்று நாம் இன்புற்றிருத்தல் எவ்வாறு பொருந்தும். அரச இன்பத்தில் பேராசைகொண்டு சுற்றத்தாரை கொல்லத் துணிந்தோம் அந்தோ!

அதற்கு பகவான் கூறுகிறார், "அர்ச்சுனா! ஒரு காலத்தில் நமது தேகம் இருக்கவில்லை. இடையில் வந்த அது ஆண்டவனால் அளிக்கப்பட்ட ஒரு கருவியே. குளிர்காலத்திற்கு உதவும் உஷ்ணம் தரும் ஆடைகளை நாம் கோடையில் கட்டி வைத்து விடுகிறோம். இரவில் போர்த்துக்கொள்ளும் கம்பளியைக் காலையில் மடித்து வைத்து விடுகிறோம். இவ்வுடலையும் இப்படித்தான் எண்ண வேண்டும். ஆனால் ஆன்மா சத்து நித்தியமாய் இருப்பது. இந்த அழியாப் பொருளை அழிக்க யாராலும் இயலாது. ஆத்மா கொல்லுவதுமில்லை; கொல்லப்படுவதுமில்லை. ஆயுதங்கள் ஆத்மாவை வெட்டமாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் ஆடையைப் போன்றது. பழுது பட்ட ஆடையை எறிந்துவிட்டு மனிதன் புதியதை தேடுவதில்லையா? ஆம்! ஆன்மா அழிவுறக் கூடுமாயின் அது நிச்சயமாக வருத் தத்திற்குரியதே. ஆனால் அதுவோ அழிவற்றது. எனவே உடலின் அழிவு வருத்தத்திற் குரிய விசயம் ஆகாது. குந்தி மைந்தா! ஒன்று நான் அழியக்கூடிய இவ்வுடலல்லேன். உடல் வெளியிலுள்ள இழிவான வெறும் கூடே என்பதும் இரண்டாவதோ நான் என்றும் இறவாத சிதைவற்ற பரந்த ஆன்மா ஆவேன் என்பது இந்த இரண்டையும் இணைக்கும் போது ஒரு பூரணத்துவ ஞானம் உனக்குக் கிட்டவில்லையா.

அர்ச்சுனன் என்ற சொல்லுக்கே "கடமை மற்றவன்" என்பது பொருள். நீ உன் மனதில் தோன்றிய நல்லவை, தீயவை ஆகிய எண்ணங்களையும், ஒளிவுமறைவின்றி என்னிடம் வெளியிட்டு விட்டாய். இறுதியில் என்னிடம் சரண் புகுந்தாய். அர்ச்சுனா நீ அறப்போரில் நிற்கிறாய். இதுவே உன் கடமை. போரில் மடிந்தால் பொன்னுலகைப் பெறுவாய். வென்றால் மண்ணுலகை ஆண்டு அனுபவிப்பாய். இன்பம், துன்பம், இலாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி ஆகியவைகளைச் சமனாகக் கருதி போரின் பொருட்டு உறுதிகொண்டு எழுந்திரு" என்றார்.

போர்புரியமாட்டேன் என்று தேர்த் தட்டிலே இருந்த பார்த்தன் தன்னை முற்றிலும் பரமாத்மாவிடம் ஒப்படைத்து மயக்கம் தீர்ந்து போர் புரியச் சம்மதித்தான். இப்படியாகவே பரமாத்மா குந்தி மைந்தனுக்கு அறிவு தெளிய வைத்ததே கீதை.

கீதை மகாபாரதத்தின் நடுவில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் ஒரு நந்தா விளக்கென அமைந்துள்ளது. இது ஆத்ம வளர்ச்சியின் முடிவான நோக்கங்களைக் காட்டும் ஒரு மகத்தான தர்ம நூலும் பாமர சனங்களுக் காக இயற்றப்பட்ட நூலுமாகும்.

கீதை வெறும் மூளையால் அறியக் கூடியதன்று. இதயத்தால் உணரவேண்டியது. கீதையை பசுவிடமிருந்து பெறப்பட்ட பாலுக்கு உவமிக்கலாம். வேதங்களையும் ஆகமங் களையும் பயில்வது அனைவருக்கும் இயலாது. ஆனால் கீதையின் உபதேசங்களை வாழ்வில் கடைப்பிடிப்பது அனைவராலும் இயலக்கூடியது.

கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் என்பன கீதை கூறும் மூவகை யோகங்களாகும். உடலின் நிலை, உயிரின் நிலை அவைகளுக்கான தொடர்பு, தொடர்பின் காரணமாக எழும் பற்று, பற்றின் தொடர் பாக தோன்றும் பாசம், அனைத்தையும் வென்று நிற்கும் ஆத்மா முதலியவற்றை விரிவாக விவரிக்கிறது கீதை. இந்துக்களின் பிரதான திரவியமாக விளங்கும் நூல். உபநிடதம், பிரம்மசூத்திரம் ஆகியவைகளோடு பகவத்கீதையும் இணைந்து கொண்டு மும் மணிகளாக ஒளிர்கின்றன.

அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட துக்கமும் சாதாரண மனிதனுக்கும் ஏற்படக்கூடியதே. ஆனால் உலகினர் அனைவருக்கும் உபதேச மாகக் கூறப்பட்டதே கீதோபதேசம்.

இந்துசமய நூல்களுள் தலை சிறந்த தான பகவத்கீதையை ஓதி நற்பேறு அடைவோம்.

### ஆன்மிகச் சிந்தனை

ஜபம் செய்யும்போது மனதில் தீய எண்ணங்கள் ஓட விட்டுச் செய்தால், அது நாம அபராதமாகிவிடும். அதாவது இறைவனின் திருநாமத்திற்கு, நாம் செய்த குற்றமாகிவிடும். அதனால் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்து ஜபம் செய்யும்போது தீய எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் ஜபம் தனக்குரிய நல்ல பலனை முழுமையாகத் தரும்.

*உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| தங்கராசா சரஸ்வதி | | கனடா | 2மூடை அரிசி |
| க. வசந்தன் | | உசன் | 10000. 00 |
| S. மனோன்மணி | | வரணி | 2000. 00 |
| ப. அட்சித் | குடத்தனை | 1மூடை | அரிசி, மரக்கறி, 1000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி | | (வைத்திய சேவைக்காக) 10000. 00 |
| வி. பாக்கியநாதன் | | மந்திகை | 500. 00 |
| பொ. சிவசுந்தரம் குடும்பம் | | கொக்குவில் | 2000. 00 |
| ப. ஜெகன் குடும்பம் | | கொக்குவில் | 2000. 00 |
| K. விமலதாஸ், சிவஞானம் குடும்பம் | | பொலிகண்டி | 1000. 00 |
| K. நிஷாந் | | லண்டன் | 5000. 00 |
| M. டிலக்ஷன் | | நோர்வே | 5000. 00 |
| மு. பார்த்தீபன் | | கோண்டாவில் | 2000. 00 |
| இ. திருக்குமரன் | | மானிப்பாய் | 3000. 00 |
| கா. தயாபரன் | | கொழும்பு | 3மூடை அரிசி |
| சி. செல்வராசா | | உடுப்பிட்டி | 2000. 00 |
| சு. விஜயசீலன் | | உடுப்பிட்டி | 1000. 00 |
| கு. சிதம்பரேஸ்வரசர்மா | | நீர்வேலி | 2புட்டி அரிசி, 1000. 00 |
| சி. அரண், சி. அஜீத் குடும்பம் | | இடைக்காடு | 10000. 00 |
| க. சரவணபவன் | | மட்டுவில் தெற்கு | 2000. 00 |
| சிவபாதசுந்தரம் கௌரி | | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| சி. பாலசுப்பிரமணியம் | | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| C.K. மயூரன் | | ஆனைக்கோட்டை | 1மூடை அரிசி, 2000. 00 |
| வி. மாலினி, வி. கபில்தேவ் | | கனடா | 5000. 00 |
| க. மதிவதனன் குடும்பம் | | மல்லாகம் | 1000. 00 |
| கு. பானுஜன் | | நல்லூர் | 2000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | | மயிலிட்டி | 2000. 00 |
| க. சறோஜினிதேவி | | கரவெட்டி | 2000. 00 |
| கா. பாலசிங்கம் | | அல்லையம்பதி | 1000. 00 |
| திரு துரைசிங்கம் குடும்பம் | | கனடா | 10000. 00 |
| K. கணேசரட்ணம் | | சுண்ணாகம் | 2000. 00 |
| ச. ஆனந்தராசா | | கரணவாய் | 5000. 00 |
| ரா. ராசராகுலன் | | சுண்ணாகம் | 1000. 00 |
| இ. நிரஞ்சன் | | கைதடி | 5000. 00 |

குறைவாகப் பேசி நிறைவாகப் பணி செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பா. செல்வக்குமார் | | சாவகச்சேரி | 10000. 00 |
| கிஷோனி வெதுப்பகம் | | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| ர. கஜானனன் | | பருத்தித்துறை | 500. 00 |
| கனகராசா வசிதரன் | ஆதியாமலை | உடுப்பிட்டி | 4மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| ந. மகேஸ்வரி | | சாவகச்சேரி | 2000. 00 |
| ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாடம் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.M. செல்வரட்ணம் | | நவாலி | 10000. 00 |
| பொ. தவராசா | | பருத்தித்துறை | 10000. 00 |
| ந. விஜயகுமார் | | மல்லாகம் | 1000. 00 |
| சி. குமாரசாமி குடும்பம் | | பத்தமேனி | 1000. 00 |
| த. விஜேந்தன் | | உடுப்பிட்டி | 5000. 00 |
| த. மகாராசா | | கொக்குவில் | 10000. 00 |
| சி. உதயகரன் | | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ந. சிவராசா | | கோண்டாவில் | 500. 00 |
| கே. அரண் | | கொக்குவில் | 1000. 00 |
| வை. நாகராஜா | | சங்கானை | 1மூடை அரிசி, மரக்கறி 1000. 00 |
| உ. சரண்யா | | யாழ்ப்பாணம் | 2500. 00 |
| க. ஜெகநாதன் குடும்பம் | | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| சி. கஜன் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| B. பார்த்தீபன் | | இணுவில் | 500. 00 |
| ஐ. மகாலிங்கம் | | உடுவில் | 2000. 00 |
| சீ.சி. கந்தையா | | ஆவரங்கால்மேற்கு | 4500. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | | கனடா | 25000. 00 |
| வை. ஜெயச்சந்திரா | ஊரிக்காடு | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| சோ. திருஞானசம்பந்தர் | | காரைநகர் | 5000. 00 |
| ம. சுரேந்திரன் | | திருநெல்வேலி | 1000. 00 |
| சி. ரோகினி | | கர்வெட்டி | 2000. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | | வெள்ளவத்தை | 5000. 00 |
| த. லோகேந்திரராசா | | அளவெட்டி | 3000. 00 |
| ஏ. ஐங்கரன் கந்தர்மடம் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஏ. கருணாநிதி | கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஏ. இந்திரகுமார் | கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| த. திருக்குமரன் | | சாவகச்சேரி | 3000. 00 |
| R. ராஜ்குமார் குடும்பம் | கே.கே.எஸ் ரோட் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி கே. உதயசாந்தி | மக்கள் வங்கி | பருத்தித்துறை | 500. 00 |
| Dr N. சத்தியமூர்த்தி | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. ரவீந்திரநாதன் | | கொழும்பு | 1000. 00 |
| ஆ. அழகராசா | | நாகர்கோயில் | 10000. 00 |

(தொடரும்...

*பொறுமையும் நேர்மையும் சக்தி வாய்ந்தவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 2

– திரு செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 செம்பின்கைப் பாலோடு செம்பருத்திப் பூமட்டும்
எம்பிரானை அடைதற்கு வழியென்று எண்ணாதீர்
நம்பிக்கை உடையோற்கே தும்பிக்கை துணையாகும்
தம்பிக்கை வேல்வந்து வினைகள் போக்கும்.

02 சதம்தூக்க சங்கரனார் பதம்தூக்கி எழுந்துவந்து
நிதம்நம்மைக் காத்தருள்வார் என்றுநீர் எண்ணாதீர்
மதம்கூறா நெறிகளைநாம் வதம்செய்ய மனத்தினுள்ளே
இதம்கண்டு மிதம்காப்பார் இனிதே.

03 ஆண்டுக்கு ஒருமுறை ஆண்டவனை வேண்டிவிட்டு
வேண்டுவன எல்லாம் கிடைக்குமென்று எண்ணாதீர்
பூண்டதோர் உடலினோடு புதைந்திருக்கும் உணர்வுகளும்
என்றென்றும் அவனையெண்ண எல்லாம் கிடைக்குமன்றோ!

04 வாசத்து மலரோடு வாழைப்பழமெடுத்து
தேசத்தைப் படைத்தோனைத் தேடிநாங்கள் கொடுத்திட்டால்
பாசத்தைப் பொழிந்தெமக்கு பரமசிவன் அருள்வானோ
நேசத்தோடு அவன்மேல் நெடும்பக்தி வேண்டாமோ.

05 படைத்தவன் படைத்தவற்றை படைத்தவனுக்கே படைத்து
கிடைத்திடும் கொடையென்று எடைபோடும் நடையோற்கு
தடைபோட்டுச் சடைபிறையான் விடையொன்று மடைதிறப்பான்
இடையறாத் தன்படைப்பிற்கு குடையாகித் தனை அடையென்றே.

06 பாலோடு இளநீரும் பஞ்சா அமிர்தமதும்
தேனோடு கலந்திறைவன் திருமேனி தடவுதல்தான்
நீடூழி வாழவழி என்றெண்ணி நின்றிடாதீர்
ஊனோடு உயிரினையும் அவனதாக்கும் அதுவழியாகும்.

*விடாமுயற்சியே வெற்றி தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பூசிப் புணர்த்தி நல்ல பூசைகளும் பார்த்தபின்பு
பேசிப் பெருங்கதையின் அரும்பொருளும் கேட்டுவிட்டு
நேசித்தே இறைபடைப்பை நெஞ்சார அணைத்திடாமல்
தூசித்துத் தூரவைத்தால் இறைநமக்குத் துணைவருமோ.

08 உடல்கழுவி உண்டதோர் உணவகலக் குடல்கழுவி
தடல்புடல்கள் செய்திட்டால் இறையடைவீர் என்றிராதீர்
கடலுப்பாய் மனத்துள்ளே உறைந்திருக்கும் மலங்களினை
குடமெனவே கழுவிடுவீர் திடமாக இறையடைவீர்.

09 கருங்காலிக் கதவிட்டு இரும்பாலோர் பூட்டிட்டு
பெருமானை உள்விட்டு இருள்சூழ வைத்திட்டு
விரும்பிய போதெமக்கு அருள்சுரக்க வாவென்றால்
இதயத்துள் இருத்தாமல் அவன் அருள்சுரக்க வருவானோ.

10 நிலம்தோண்டி ஜலமெடுத்து நீராடி நிறம்தீட்டி
பலன்வேண்டிச் சிலகடையில் படைத்திடவே பொருள்வாங்கி
தலமேறி வலம்வந்து தட்டமிட்டுத்தான் கொடுத்தால்
மலம்கலந்த மனத்துள்ளும் மகிழ்ந்திருக்க இறைவருமோ.



சமுதாயப் பணிகளின் வரிசையில் முன்பள்ளி மாணவர்களுக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட சாப்பாட்டுப் பெட்டியுடன் புத்தகப் பையினையும் முன்னாள் பேரவைத் தலைவர் திரு சி. நாகலிங்கம் அவர்கள் வழங்கும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**22.08.2017 செவ்வாய்க்கிழமை 1,2ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**23.08.2017 புதன்கிழமை 3ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "குமரா சரணம் சரணம்"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

**24.08.2017 வியாழக்கிழமை 4ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "காவிக் கமலக் கழலுடன் சேர்த்தருள்வாய்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

**25.08.2017 வெள்ளிக்கிழமை 5ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில் ஆவணிமாத ஞானச்சுடர் வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள் (ஆசிரியர், அ.மி. கல்லூரி)

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள் (இளை. அதிபர்)

**26.08.2017 சனிக்கிழமை 6ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருக மகிமை"

வழங்குபவர் :- சைவப்புலவர் பொன். சந்திரவேல் அவர்கள்

**27.08.2017 ஞாயிற்றுக்கிழமை 7ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கீதை காட்டும் பாதை"

வழங்குபவர் :- திரு பூ. சோதிநாதன் அவர்கள் (விரிவுரையாளர்)

கைக்கு வராததைக் கணக்குப் பார்க்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28.08.2017 திங்கட்கிழமை 8ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பக்தியால் பரவுவோம்"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**29.08.2017 செவ்வாய்க்கிழமை 9ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உள்ளம் கவர் கள்வன்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு க. கைலைநாதன் அவர்கள்

**30.08.2017 புதன்கிழமை 10ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "மானிடம்"

வழங்குபவர் :- திருமதி பரமேஸ்வரி சிவனொளிபாதம் அவர்கள்

(இளை. ஆசிரிய ஆலோசகர்)

**31.08.2017 வியாழக்கிழமை 11ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இறை வழிபாடு"

வழங்குபவர் :- சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

**01.09.2017 வெள்ளிக்கிழமை 12ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அழகு"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

**02.09.2016 சனிக்கிழமை 13ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஈழத்தில் முருக வழிபாடு"

வழங்குபவர் :- சைவப்புலவர் செ. பரமேஸ்வரன் அவர்கள்

**03.09.2017 ஞாயிற்றுக்கிழமை 14ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பணி செய்து கிடப்பதே"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(அதிபர். புட்டளை மகா வித்தியாலயம்)

| | | |
|---|---|---|
| **04.09.2017** | **திங்கட்கிழமை** | **சப்பறம்** |
| **05.09.2017** | **செவ்வாய்க்கிழமை** | **தேர்** |
| **06.09.2017** | **புதன்கிழமை** | **தீர்த்தம்** |

இலட்சியத்தை அடைவதில் நேர்மை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய தேவாரங்கள் சிலவற்றை முதலாம், இரண்டாம் திருமுறைகளிலிருந்து இதுவரை நோக்கினோம். தினந்தோறும் நாம் விரும்பிப் பாடித் துதிக்கக்கூடிய சில தேவாரங்களை மூன்றாம் திருமுறையிலிருந்து இம்முறை பார்ப்போம். இவையும் ஆளுடையபிள்ளை அருளியவையே.

மூன்றாம் திருமுறையில் அவர் பாடியருளிய 1358 தேவாரங்கள் 126 பதிகங்களாக அமைந்துள்ளன. இவற்றுள்ளும் பல பதிகங்கள் பாடியவேளைகளில் அற்புதங்கள் நிகழ்ந்திருக் கின்றன. அவ்வாறு நிகழ்ந்த ஒரு அற்புதத்தைப் பார்ப்போம்.

சம்பந்தப் பெருமானின் தந்தையார் சிவபாதவிருதயர் யாகமொன்றைச் செய்ய விரும்பினார். அதற்கு நிதி தேவைப்பட்டது. பிள்ளையார் திருவாவடுதுறையில் வழிபட்டுக் கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த தந்தையார் தம் தேவையைத் தெரிவித்தார். தந்தையாரின் யாகத்திற்குத் தேவையான பொருளைத் தந்துதவுமாறு வேண்டி ஞானசம்பந்தர் "இடரினும் தளரினும்" என்னும் பதிகத்தைப் பாடியபோது சிவபிரானின் திருவருளால் ஆயிரம் பொற்காசுகள் கொண்ட உலவாக்கிழி கோவிலின் பலிபீடத்தில் வைக்கப்பட அதைத் தந்தையாரிடம் அளித்து அந்தமற்ற பொற்குவையான இறைவனின் திருவடிகளை வணங்கி நின்றார். அப்பதிகத்தின் முதலாவதாக அமைந்த தேவாரம் வருமாறு.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையே
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

பாற்கடலில் அமுதோடு கலந்து தோன்றிய நஞ்சை கழுத்தில் அடக்கிய வேத நாயகனே, இடர்கள் ஏற்பட்ட வேளையிலும் தளர்வேற்பட்டபோதும் எனக்கேற்பட்ட நோய் தொடர்ந்து வருந்திய போதும் உனது திருப்பாதங்களைத் தொழுவேன். இத்தகைய என்னை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? திருவாவடுதுறையிலிருக்கும் அரனே, எனக்கு எதுவும் தராவிடின் அதுவோ உனது நல்லருள்? என்னும் பொருள் கொண்ட இத் தேவாரத்தின் பண் காந்தார பஞ்சமம்.

இடர் வரும்போதும் தளர்வடையும் காலத்திலும் இறைவனை நினைந்து காத்தருளு மாறு வேண்டுவது எமது இயல்பெனினும் மீண்டெழ முடியாது அவை தொடர்ந்தால் நாம் தவறேதும் செய்யவில்லை. இறைவன்தான் எமது வேண்டுதலுக்குச் செவி சாய்க்காது தவறு செய்கின்றான் அல்லது குற்றமிழைக்கின்றான் என்று அவனை வைது தீர்ப்போம். "இனிமேல் கோவில் பக்கமே போவதில்லை. இறைவனைக் கும்பிடுவதுமில்லை" என்று முடிவெடுப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர் ஏற்பட்ட நோயும் துன்பமும் தொடர்ந் தாலும் இறைவனது திருவடிகளை விட்டுவிடாது வணங்குகிறார். தன்னை வேண்டுவோரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பதற்காக ஆலகால விடத்தையே உண்டவன் இவரைக் கைவிடலாமா? என்ற ஆழ்ந்த பொருள் கொண்ட இத்தேவாரம் நாம் எவ்வாறு வழிபட வேண்டுமென்றும் வழிகாட்டுகிறது.

இப்பதிகத்தைப் பாராயணம் செய்துவர வறுமை விலகிச் செல்வம் சேரும். ஆனால் ஒன்றை நாம் மனதிற் கொள்ளவேண்டும். எம் வேண்டுதல் நற்பயன் பொருட்டாக இருக்க வேண்டும். பேராசைப்பட்டுப் பெருஞ்செல்வம் வேண்டி தீயவழி செல்வதற்கேதுவாக இருக்கக் கூடாது. அத்தகைய நன்மையான வேண்டுதல்களே எம்பெருமானின் அருளைப் பெற்று நிறைவேறும்.

எமது நன்மைகளை மட்டும் கருதாது பொதுநன்மை கருதியும் பிரார்த்திக்கும் பண்பை எம்முள் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்தகைய பிரார்த்தனைகளுக்கு சக்தி அதிகமாகும். ஆளுடையபிள்ளை சமணர்களுடன் நடத்திய புனல்வாதத்தை உதாரணத் திற்கு எடுத்துக்கொள்ளலாம். வைகையாற்றில் இடும் ஏடு நீரோட்டத்துடன் அள்ளுப்பட்டுச் செல்லாமல் அதனை எதிர்த்துச் செல்லவேண்டும் என்று கூறி சமணர்கள் "அத்தி நாத்தி" என எழுதிய ஏட்டை ஆற்றில் விட்டபோது அது நீரோட்டத்துடன் சென்றது. சம்பந்தப் பெருமான் "வாழ்க அந்தணர்" என்னும் பதிகத்தை எழுதிய ஏட்டை வைகையில் விட்டவேளை யில் அது நீரோட்டத்திற்கு எதிர்த் திசையில் முன்னேறி திருவேடகம் என்னும் தலத்தில் கரையேறி வெற்றியீட்டியது. இந்த வெற்றியையீட்டிய தேவாரம் உலக நன்மை வேண்டிய தாகவே அமைந்துள்ளது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

என்பது இப்பதிகத்தின் முதலாவது தேவாரம். இதன் பொருளை நோக்கும்போது இது பாடப்பட்ட காலத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். அது மன்னராட்சி நிலவிய காலம். மக்களின் வாழ்க்கைக்குப் பல்வேறு வகைகளில் பசுவும் எருதும் உதவி ஆதாரமாக அவை இருந்த காலம். ஆநிரைகளை செல்வமாகக் கருதிய காலம். அத்தகைய காலத்தில் அந்தணர்களும் தேவர்களும் ஆனினமும் வாழ்க என்று வாழ்த்துகின்றார். அல்லது வேண்டுதல் செய்கின்றார். அன்று முதல் இன்றுவரை வான்மழையை எதிர் நோக்கியே இந்தப் புவி இருக்கின்றது. அந்தக் குளிர்ந்த நீர் ஏற்றவாறு வீழ்ந்து இவ்வுலகைக் குளிர்விக்காவிடில் உலகில் வாழும் சகல ஜீவராசிகளும் துன்புற நேரும். ஏன் நீரற்ற வரட்சியால் அழியவும் நேரும். ஆகவே மழை பொழிய வேண்டும் என்பது அடுத்த வேண்டுதலாகிறது. மன்னன் சிறந்தவனாக இருந்தால்த்தான் ஆட்சி நன்றாக நடந்து நாடு நலம்பெறும். அதனால் வேந்தனும் ஓங்குக என வேண்டினார். இந்தப் புனல் வாதத்தை நடத்தியவன் கூன்பாண்டியன். பிள்ளையாரின் "வேந்தனும் ஓங்குக" என்ற வேண்டுதலுடன் நின்றசீர் நெடுமாறனாக நிமிர்ந் தோங்கி நின்றான் என்பது மற்றோர் அற்புதம். தீயவை ஒழிக. உலகின் துயர் தீர்க. இறைவன் திருநாமம் எங்கும் பரவுக என உலக நன்மை வேண்டும் தேவாரம் தன் சக்தி யினால் வைகை நீரோட்டத்தில் எதிர் நீச்சல் போட்டது.

இதன் பண் கௌசிகம். எமது தினசரி வழிபாட்டில் பாடி உலக நன்மை வேண்டி துதிக்க ஏற்றதொரு தேவாரம் இதுவாகும்.

*நன்றாகச் செய்தால் நல்லதைப் பெறலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இவ்வுலக வாழ்விற்குத் தேவையானவற்றிற்காகவும் இவ்வுலகின் நலனுக்காகவும் பிரார்த்திப்பதனை விட எமது ஆன்ம ஈடேற்றத்திற்காக வழிபாடு செய்து வீடுபேறடைவது முக்கியமானதாகும். சிவாயநம என்ற ஐந்தெழுத்தை ஓதிவர பிறவிப்பிணி நீங்கும். சைவசித்தாந்த நூல்கள் இந்த ஐந்தெழுத்தின் ஆழ்ந்த தத்துவப் பொருளை எடுத்துரைக்கின்றன. திருவருட்பயனில் ஒன்பதாம் அதிகாரம் அது பற்றியே விளக்குகின்றதென்றால் அதன் மகத்துவம் எத்தகையது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இத்திருவைந்தெழுத்தின் பெருமை பேசுவது சம்பந்தப்பெருமானது பஞ்சாக்கரத் திருப்பதிகம். இதன் பண் காந்தார பஞ்சமம். பதிகத்தின் ஆரம்ப தேவாரம் வருமாறு:

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே

"உறங்கும்போதும் உறங்காது விழித்திருக்கும்போதும் மனம் நைந்து (அல்லது கசிந்து) தினந்தோறும் வஞ்சகமில்லாது திருவடிகளை வாழ்த்திய மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த கூற்றுவனை அவன் அஞ்சும் வகையில் உதைத்து அழித்த ஐந்தெழுத்தை நினையுங்கள்" என ஐந்தெழுத்தை எந்த நேரமும் நினைக்குமாறு திருஞான சம்பந்தப் பெருமான் எமக்கு வழிகாட்டுகின்றார். இப்பதிகம் முழுவதும் பஞ்சாட்சரத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. தினமும் ஐந்தெழுத்தையும் இப்பதிகத்தையும் ஓத எமக்கு ஆன்ம ஈடேற்றம் கிட்டும்.

இதுபோன்ற மற்றொரு தேவாரமும் நாளாந்தம் பாடி வழிபட ஏற்றதாகும். சம்பந்தப் பிள்ளைக்குத் திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணம் நடைபெற இருந்த வேளையில் இறைவன் சோதியாகத் தோன்ற மணமகளுடனும் திருமணம் காண வந்தோருமாக அவர் அதனுட் கலந்தவேளையில் பாடிய தேவாரப் பதிகத்தின் முதலாவது தேவாரமே இதுவாகும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

"மிகுந்த பக்தியுடன் உருகி, கண்ணீர் மல்க ஓதுகின்றவர்களை நல்வழிக்குச் சேர்ப்பது நால் வேதங்களும் கொண்ட உண்மைப் பொருளாக உள்ள நாதனின் நாமமாகிய நமசிவாய ஆகும்" என திருஞானசம்பந்தப் பெருமான் உறுதிபடக் கூறுகிறார். இத் தேவாரத்தின் பண் கௌசிகம்.

பஞ்சாட்சரத்தை எப்படி ஓதவேண்டும் என்பதையும் அவ்வாறு ஓதினால் என்ன பயன் கிட்டும் என்பதையும் இப்பதிகங்களின் ஏனைய தேவாரங்களும் விவரமாக விளக்குகின்றன. இவற்றை நாம் தினமும் பாராயணம் செய்துவர அவை கூறுவதுபோல் தேவாரத்தையும் திருவைந்தெழுத்தையும் ஓதுவதற்குப் பயின்றுவிடுவோம். அதன் பயனும் எமக்குக் கிட்டும். எனவே இவற்றைத் தினமும் பாடிப் பணிவோமாக.

*காலம் தவறாமை தொழிலின் ஆத்மாவாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017இல் சந்நிதியான் ஆச்சிரம சேவை -ஒரு சுருக்கமான தொகுப்பு-

13.01.2017 வெள்ளிக்கிழமை

உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் திரு ப. சிவமைந்தன் அவர்களினால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

27.01.2017 வெள்ளிக்கிழமை

கெருடாவில் தொண்டைமானாற்றில் வசிக்கும் கி. கலாநிதி என்பவரிடம் தொண்டை மானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மகன் க. ரமேஸ் என்பவரின் போக்குவரத்து வசதி கருதி துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

வல்லை வீதி, தொண்டைமானாற்றைச் சேர்ந்த செல்வி ச. மீரா என்பவருக்கு சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

24.02.2017 வெள்ளிக்கிழமை

பரு. வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் O/L வகுப்பில் கல்வி பயிலும், ஓடக்கரை பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் செ. சாயிகீரத்தன் என்பவருக்கு, பாடசாலை போய்வரும் வசதிக்காக துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

13.03.2017 திங்கட்கிழமை

குருநாகல்- வில்கொட வீதி- இந்து தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலை மாணவர்களின் வசதிக்காக, அப் பாடசாலை அதிபரிடம் 5 துவிச்சக்கர வண்டிகள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

13.03.2017 திங்கட்கிழமை

மாத்தளை, கௌடுபெல்ல, கலைமகள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக ரூபா 25,000 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேரில் வழங்கப்பட்டது.

24.03.2017 வெள்ளிக்கிழமை

கிளிநொச்சி, புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலய பரிசளிப்பு விழாவிற்காக, ரூபா 40,000 பெறுமதியான காசோலையை இளை. மக்கள் வங்கி அலுவலர் திரு இ. யோகராஜாவும், ஆசிரியர் திரு அ. குமாரவேலுவும் இணைந்து அப்பாடசாலை ஆசிரியரிடம் வழங்கினார்கள்.

31.03.2017 வெள்ளிக்கிழமை

பொலிகண்டியைச் சேர்ந்த ஆ. செபஸ்ரியாம்பிள்ளை என்பவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடியை இளை. அதிபர் திரு க. ஆனந்தராசா அவர்கள் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ நீரவேலி சி.சி.த.க. பாடசாலை மாணவர்களுக்கான ஒரு விளையாட்டு மைதானம் வாங்குவதற்காக ரூபா 50,000 பெறுமதியான காசோலை, அக் கல்லூரி அதிபர் T. ரவீந்திரநாதன் அவர்களிடம், இளை. அதிபர் திரு க. நல்லையா அவர்களால் வழங்கப்பட்டது.

06.04.2017 வெள்ளிக்கிழமை

வடமராட்சி வடக்கு, தும்பளை தெற்கு தேற்றாவடி அருள்மிகு ஸ்ரீ மனோன்மணியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேகத்திற்காக ரூபா 25,000 வழங்கப்பட்டது.

14.04.2017 வெள்ளிக்கிழமை

1) சக்கோட்டை யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்கும் செல்வன் அ. டெஸ்மன்ராஜ் என்பவருக்கும்,

2) அல்வாய் வடமேற்கு திக்கத்தில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை அன்ரன் என்பவருக்கும்,

3) அல்வாய் வடமேற்கு திக்கத்தில் வசிக்கும் ராசநாயகம் நித்தியானந்தம் என்பவருக்கும்,

மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

23.04.2017 ஞாயிற்றுக்கிழமை

கண்டிவீதி, இராமநாதபுரம், இல 325/6இல் வசிக்கும், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட செ. தியாகராஜா என்பவரின் வேண்டுகோளின்படி அவரது இடத்தினை நேரில் பார்வையிட்ட பின்னர், தண்ணீர் தொட்டி அமைப்பதற்காக ரூபா 25,000 பணமும் மோட்டரும் நேரில் வழங்கப்பட்டது.

03.05.2017 புதன்கிழமை

களுத்துறை- இங்கிரிய- ஹொரணை- "எதுரகல தமிழ் வித்தியாலயத்தைச்" சேர்ந்த 89 மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பேனை, பென்சில், சாப்பாட்டுப்பெட்டி, கலர் பென்சில், கொம்பாஸ், புத்தகப்பை ஆகியவை ஆச்சிரமத்தால் நேரில் வழங்கப்பட்டது.

21.05.2017 ஞாயிறு (வைகாசிப் பெருவிழா)

வருடாந்த வைகாசிப் பெருவிழாவினை முன்னிட்டு கீழ்க்காணும் 3 மாணவ-மாணவியருக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

1) அரசிலன்குமார் தனுசியா - தரம் 10
(வ/ கனகராயன் குளம் மகா வித்தியாலயம்)

2) சத்தியசீலன் டிலக்ஷன் - தரம் 10
(வ/ கனகராயன் குளம் மகா வித்தியாலயம்)

3) பற்குணசிங்கம் டிலேக்கா - தரம் 11
(யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

09.06.2017 வெள்ளிக்கிழமை

வாழைச்சேனை, கல்குடா வீதி, பேத்தாழையைச் சேர்ந்த செல்வன் பாஸ்கரன் பிரணவன் என்பவரின் இருதய சத்திர சிகிச்சை- மருத்துவ செலவுக்காக ரூபா 50,000 ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.06.2017 வெள்ளிக்கிழமை

அமரர் க. நித்திய தசீதரன் அவர்களின் நினைவுப் பேருரை நிகழ்வின் நினைவாக கீழ்க்காணும் நான்கு மாணவ- மாணவியருக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

1) செல்வி ஜெயப்பிரியா சந்திரன் - தரம் 13
யா/ அராலி சரஸ்வதி ம. வித்தியாலயம்
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
2) செல்வி குசன் மிதுசா - தரம் 7
மு/ பாண்டியன் குளம் மத்திய ம.வி
மாந்தை கிழக்கு, மூன்றுமுறிப்பு, கிடாப்பிடித்த குளம்.
3) செல்வன் பிரதீபராஜ் சானுஜன் - தரம் 7
மு/ பாண்டியன் குளம் மத்திய ம.வி.
4) செல்வி லோகநாதன் லக்சிகா - தரம் 7
மு/ பாண்டியன் குளம் மத்திய ம.வி.

25.06.2017 ஞாயிற்றுக்கிழமை

தொட்டிலாகல, சித்திர வேலாயுதசாமி முருகன் கோவில் கட்டுமானப் பணிகளுக்காக, ஆச்சிரமக் குழுவினரால் நேரில் பார்வையிடப்பட்டு ரூபா 1,00,000 (ஒரு லெட்சம்) வழங்கப்பட்டது.

03.07.2017 திங்கட்கிழமை

இல 122, தம்பேத்தன்னை வீதி, அப்புத்தளை எனும் இடத்திலுள்ள வீரப்பன் முருகையா என்பவருடைய இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 15,000 அவரது வங்கிக் கணக்கில் இடப்பட்டது.

14.07.2017 வெள்ளிக்கிழமை

தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு இந்து பண்பாட்டு நிதியத்திற்கு ரூபா 15,000 வழங்கப்பட்டது.

இமையாணன் கலைமகள் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டிக்கான பரிசுப் பொருளாக 40 தண்ணீரப் போத்தல்கள் வழங்கப்பட்டன.

பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள தில்லைநாதன் ஜெயந்தினி என்பவருக்கு சுயதொழில் முயற்சிக்காக ரூபா 10,000 வழங்கப்பட்டது.

28.07.2017 வெள்ளிக்கிழமை

காட்டுப்புலம்- தொண்டைமானாற்றைச் சேர்ந்த M. தர்சினி என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

04.08.2017 வெள்ளிக்கிழமை

உகந்தை மலை முருகனின் தரிசனத்திற்காகச் சென்ற இலங்கை முதல் உதவிச் சங்கத்தினரின் வழிச் செலவிற்காக ரூபா 15,000 வழங்கப்பட்டது.

14.08.2017 திங்கட்கிழமை

பண்டாரவளையைச் சேர்ந்த ஜெகநாதன் ரமணி என்பவரின் சுயதொழில் முயற்சிக்காக ரூபா 15,000 அவரது வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்பட்டது.

உடுவில் கடவுள் சமாதி கட்டிட நிலைய நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 50,000 வழங்கப்பட்டது.

(தொடரும்....

*பொறுமை சொர்க்கத்தின் திறவுகோல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

-மோகனதாஸ் சுவாமிகள் -

14.11.2016 திங்கட்கிழமை அன்று எமது நிகழ்வுகளை முடித்துவிட்டு இரவு ராஜனுடன் கலந்துரையாடியபொழுது அவர் நாம் கையாளக்கூடிய நிதி சம்பந்தமாக ஒரு செய்தியை எம்மிடம் கூறினார். அதாவது இந்திய ரூபாய் ஆயிரம், ஐந்நூறு செல்லாது என்பதைப் பற்றியும் நாம் கொண்டுவந்த பணத்தை கையாள்வது மிகவும் சிரமமாக இருக்கப் போகின்றது. ஆகையால் நாம் செல்லும் இடங்களில் சிறிது சிறிதாக நூறு, ஐம்பது, இருபது, பத்து ரூபாக்களாக மாற்றி எடுக்கவேண்டும் என்று கூறி தான் ஏற்கனவே ஒழுங்கு செய்து கையில் வைத்திருந்த இருபது ரூபா நூறு கொண்ட நான்கு கட்டுக்களை எம்மிடம் தந்து பணப்பரிமாற்றம் சீராகும் வரை சிறிது சிரமமாகத்தான் இருக்கும் என்றும் கூறி எம்மிடம் விடை பெற்றார்.

## 15.11.2016 செவ்வாய்க்கிழமை:

காலை உணவை முடித்துக்கொண்டு எமக்கென தருவிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்தின்மூலம் பாரதப் பிரதமர்களாக இருந்த காலஞ்சென்ற அமரர் நேரு, இந்திரா காந்தி முதலியோர் வாழ்ந்த இல்லங்களையும் அவர்களால் உபயோகிக்கப்பட்ட பொருட்கள் அடங்கிய காட்சிக் கூடங்களையும், இறுதியாக இந்திரா காந்தி சுடப்பட்டு வீழ்ந்த இடத்தையும் பார்வையிட்டபின் எமது பிரயாணம் அருகருகே அமைந்திருந்த சனீஸ்வரன், ஆஞ்சநேயர் ஆலய தரிசனத்தில் எமது குழுவினர் ஈடுபட்டனர். இவ்விடத்தில் நாம் ஒன்றைக் கூறத்தான் வேண்டும். தென்னிந்திய ஆலய வழிபாடுகளில் மனம் ஒன்றி வழிபடமுடியாது. காரணம் ஆலயச் சூழலின் தன்மை காரணமாக அமைதியைக் காண முடியாது. ஆனால் வட இந்திய தலயாத்திரைகளில் அந்தந்த ஆலயங்களில் நிலவும் அமைதியைப் பார்க்கும்போது எம்மை அறியாமல் மனம் அவ்வழிபாட்டில் ஒன்றிவிடுகிறது. ஆலய வழிபாட்டுக்கு வருகின்றவர்களை அவ்விடத்தில் பார்க்கும்பொழுது பெரிய மகான்களாகவே காட்சி அளிக்கின்றனர். இவற்றைப் பார்வையிட்டபின் எமக்கென தயாரித்துக் கொண்டுவந்த மதிய உணவினை அங்கே அமைந்துள்ள மரநிழலின்கீழ் ஆற அமர்ந்திருந்து உட்கொண்டோம்.



அதனைத் தொடர்ந்து ஸ்வாமி நாராயணன் ஆலயத்தினை அடைந்தோம். பாரதப் பண்பாட்டை பறைசாற்றும் தன்னிகரில்லாத்தலம் அது. நூறு

அளவுகடந்த பற்று மாயை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இவ் ஆலயம் ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப் பட்டது ஒரு அச்சரியமான விடயம். ஆலயத் தின் மையத்தில் ஸ்வாமி நாராயணனின் பதினொரு அடி உயர பஞ்சலோக மூர்த்தி பார்ப்போரைப் பரவசப்படுத்தும் முகமாகக் காட்சி அளிக்கின்றது. ஆலயச் சுற்றாடலை நோக்கும்போது அங்கே அமையப்பெற்ற கலைச் சிற்பங்கள் எம்மைப் பிரமிக்க வைத் தது. வாய்விட்டுக் கூறமுடியாத ஒரு அதிசய சுரங்கம் என்றே கூறவேண்டும். கட்டாயம் வட இந்திய யாத்திரையில் ஈடுபடுவோர் பார்க்கவேண்டிய இடம். குறிப்பாக மயூர வாயில் என்ற ஒரு வரவேற்பு வாயில் இருக் கின்றது. இந்த வாயிலில் அமைந்திருந்த மயில் தோரணமும், கலையழகு கொஞ்சும் தூண்களில் உள்ள எண்ணூற்றி அறுபத் தொன்பது (869) மயில்களும் எம்மை வர வேற்கும் பாணியில் அமைத்துள்ளார்கள். இவ் வாயில் இந்தியச் சிற்பக்கலையின் ஈடில்லாப் படைப்பாகும். அதேபோன்று ஆல யத்தைப் பார்வையிட்டபொழுது செம் பளிங் கும், வெண் பளிங்கும் இணைந்து உள்ள ஆலயத்தில் கலைநயத்துடன் கூடிய இரு நூற்றி முப்பத்துநாலு (234) தூண்கள், ஒன்பது (9) பிரம்மாண்டமான விமானங்கள், இருபது நாற்கோண கோபுரங்கள், இருபதாயி ரத்திற்கும் மேற்பட்ட சிற்பங்கள் ஆகியவற் றினைப் பார்த்து அதிசயித்தோம். உயரம் 141அடி, அகலம் 316அடி, நீளம் 356 அடி. இரும்பு உலோகத்தைப் பயன்படுத்தாமலே உருவாக்கப்பட்ட கட்டட அமைப்பு பாரதக் கலைக்கு கட்டியங் கூறுவதாக அமைந்துள் ளது. அவ்விடத்தைவிட்டுப் பிரிய மனமில் லாமல் பிற்பகல் மூன்று மணியளவில் கண்ணபிரான் பிறந்து வளர்ந்த மதுரா நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று.

மதுராவிற்குள் உள் நுழையும்போது ஒரு பழமையான நகருக்குள் புகுவது போன்ற அந்நகரின் அமைப்பு அமைந்திருந்தது. பழைய கட்டடங்களும் சிறுசிறு மச்சு வீடு களும் மாட்டுத் தொழுவங்களும் புழுதி படிந்த வீதியுமாகக் காட்சி தந்தது அவ்விடம். ஆனால் கண்ணபிரானுடைய ஆலயமும் ஆலயச் சூழலும் புனிதம் பேணப்படும் இடமாக இருப் பதை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந் தது. ஆலயம் பழைய பொலிவுடன் மெருகூட் டப்பட்டு மிக ரம்மியமாகக் காட்சி தந்தது. வரும் அடியார்கள் எல்லோரும் பஜனை வழிபாட்டுடன் ஆலய தரிசனம் செய்வதைப் பார்க்கும் பொழுது பேரானந்தம் தரும் காட்சி யாகவே அமைந்திருந்தது. ஆனாலும் கண்ணன் ஆலயத்திற்கு அருகாமையில் மசூதி அமைந் துள்ளபடியால் இராணுவக் கெடுபிடியின் மத்தி யில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இறை வனுடைய அருட்பிரவாகம் இங்கே பொங்கிப் பெருகுவதை எமது வழிபாட்டின்மூலம் உண ரக்கூடியதாக இருந்தது. நாம் பலமுறை இந்த இடத்திற்கு வந்திருந்தாலும் எம்மோடு வந்த கஜன், நித்திய தசீதரன் போன்றோரின் வழி பாடு ஒரு ஆச்சரியத்துடன் கூடிய வழிபா டாகவே இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனாலும் ஒரு மனக்குறை அவர் களிடம் இருந்தது. என்னவெனில் புகைப்படக் கருவியோ, தொலைபேசியோ உள்ளே கொண்டு செல்ல முடியாத கட்டுப்பாடு காரணமாக ஒரு புகைப்படமும் எடுக்கமுடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் அவர்கள் ஆலய தரிசனம் செய்து வெளியே வரும்போது அவர்களது மனக்கிலேசத்தைப் போக்கும் வண்ணம் ராஜன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீதி யில் அவர்களோடு ஆலயத்தினையும் தனது தொலைபேசியினூடாக கையகப்படுத்தியதன் பின் எமது தொடர் பிரயாணம் இரவு 10 மணியளவில் ஆக்ரா அடைந்து யமுனா விடுதியில் தங்கினோம்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத்
# கணேசானந்த மகாதேவ சுவாமிகள்



மேற்படி சுவாமி அவர்கள் 24.08.2017 வியாழக்கிழமை இறை பதம் அடைந்ததையிட்டு சந்நிதியான் ஆச்சிரமம் சார்ந்த அனைவரதும் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது சமாதி பிரதிஷ்டை 25.08.2017 வெள்ளிக்கிழமை இடம்பெறுவதையிட்டும் அப் பெருமகனின் ஆத்மா இறை பாதாரவிந்தங்களில் இளைப்பாறவும் எல்லாம்வல்ல சந்நிதி வேற் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-சந்நிதியான் ஆச்சிரமம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் 2017 ஆவணி மலர்

## புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

01.09.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

சொற்பொழிவு :- "அழகு"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

08.09.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "ஆன்மீகம்"

வழங்குபவர் :- திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை அவர்கள்

(ஆசிரிய நிலையம், விரிவுரையாளர்- புளியங்குளம்)

---

15.09.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

22.09.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29.09.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர்- யாழ்ப்பாணக் கல்லூரி)

237ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/82/NEWS/2017

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org